LONDON ACCIDENT CLAIMS LIMITED
வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?
Driver / Passenger – within last 3 years
NO WIN NO FEE
(Neck, Back & Shoulder Pain)
(Terms & Conditions Apply)
Mini cab "PCO"
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

BILINGUAL FORTNIGHTLY
# ஒரு பேப்பர்
ORU PAPER
FREE
PAPER - 08 ◆ ISSUE - 153 ◆ 09 FRIDAY SEPTEMBER 2011

PRIVATE TUTION
By Experienced Tutor
- 11+ Preparation
- Maths & Science up to GCSE Level
- Chemistry for AS/A2 Levels
- Within M25
Mr N.Rajesh BSc [Hons], ACP
Call : 078 8668 8821

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM



## என்ன கொடுமையடா இது
## எங்களை நாங்களே படமெடுக்க வேண்டியிருக்கு...

Science & Mathematics
- All Ages (KS2, Pre-GCSE, GCSE & A-Level)
- Mathematics, Physics, Chemistry & Biology
- Groups Up to 3 & Individual Lessons
- Home Visits for Students With Disabilities
- Very Affordable Rates per 1 ¼ hours
- We have over 30 years of experience as educators
We are accepting NEW STUDENTS
Please call
Sutharshan or Dr.Gan at 07986 141 604
or email nectar.education@gmail.com
to make an appointment
Location: Raynes Park, minutes from rail station

» மார்ச் 2007ம் ஆண்டுக்கு முன்னர் மற்றும் பின்னர் ...
» Nationality and settlement Application, British Passport
Vincent Solicitors
07870 763 570 / 020 8574 0666
11-13, South Road, Southall UB1 1SU

TOP MARKS FOR MATHS – A* TUTOR
GCSE, A/S, A/2, Maths, Statistics and Mechanics Students
All examinaton boards Covered by highly experienced mathematician.
Also coach for 11+ and Grammar school exams.
For further details call
KAMALANATHAN BSC (HONS)
Tel : 020 8883 3126
Mobile: 079 7083 9507
E-Mail: rasiah.nathan@yahoo.co.uk
North, North-West & East London areas

ASTA COLLEGE
ESOL Skills For Life with Citizenship
Asta CITIZENSHIP TEST
ILR and Nationality Citizenship applications
Esol Citizenship
Knowledge of Language and Life in UK
Nationality citizenship, ILR(PR)
Accredited College
Home Office Approved
ASTA : Trident Business Centre, 89 Bickersteth Road, Tooting, London, SW17 9SH
Tel : 020 8355 3453 Mob : 07958 178321

HSFC Harley Street Fertility Clinic
Director: Dr Geetha Venkat MD FRCOG
Phone: +44 (0)20 7436 6838

Starting Maths Classes for KS3, GCSE & A Level
Our unique Knowledge Tracking with targeted learning enable students to achieve higher grades at a reduced cost. Students need to achieve 75% in each levels and stages to achieve A*.
இணையுங்கள் இன்றே!
- Classes conducted by Professional Teachers (Weekend classes held in Rayners Lane, Harrow)
- eLearning with Knowledge Capture
- Well defined Notes and Targets
- Online Progress Reporting to Parents
Visit www.flexiEducation.com for Learning Targets.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் Telephone No -
0208 864 8111 or 07956 328732 or 07830 715380
for class information and student assessment.
FlexiEducation is part of eoptimiser Ltd (www.eoptimiser.com)

SELVA SALOON
- Hair cuts, Hair Tints, Hair Styles, Hair Highlights, Hair Perms, Hair Straightening, Hair Rebounding, Hair Ironing
- Facial, Face Bleaching, Face Cleaning, Eye Brow Plucking & Head Massage
திறந்திருக்கும் நேரம் 9.00am to 8.00pm
No. 1 Waston Avenue, Est Ham, London, E6 2AJ.
Tel: 02084724017 / Mob: 07931269203

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

MATHS & ENGLISH AFTER SCHOOL
STUDY PROGRAMMES AGED 4 -16 YEARS

**Give your child the Learna Advantage. Today.**



- Maths & English Classes for 4 - 16 years
- Challenging Individualised learning path
- Focus on Problem Solving, Reading and writing
- Improve child's self – confidence and concentration skills
- Thousands of computer activities & Printed worksheets
- Monthly progress tests and instant reports

LEARNA

• Individualised • Interactive • Inspiring

Let your child have the Learna experience
Call us or visit us on the web www.learna.co.uk

0845 094 0061
Learna Education Centre, 5 - 6 The Broadway, Sutton, Surrey SM1 4BU

## KALVIKOODAM TUITION CENTRE

லண்டன் வாழ் இலங்கைத் தமிழருக்கு ஓர் இனியசெய்தி.....!!!

FREE Basic Tamil Lessons

Tamil Lessons
Beginners
Intermediate £5/hr
Advanced

Maths
English £10/hr per subject
Science

தமிழ்மொழியை கற்க ஓர் சிறந்த இடத்தினை தேடிக்கொண்டிருக்கும் உங்களுக்காக ஓர் கல்விக்கூடம்

தமிழ்மொழி மட்டுமின்றி கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற இன்னும் பல பாடங்களை ஒரே கூரையில் கற்க நாடவேண்டிய ஒரே இடம்.

'கல்விக்கூடம்'

edexcel
advancing learning, changing lives

IGCSE தமிழ்மொழிப் பரீட்சையை எமது அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நிலையத்தினூடாக வெளிவாரியாகத் தோற்றலாம்.

பிரதி ஞாயிறு தோறும்
10.00 மணிமுதல் - மாலை 08.00 மணிவரை நடைபெறும்

– தொடர்புகளுக்கு –
020 8090 3366
07738 056 950
www.kalvikoodam.co.uk

Harrow Branch
167, Imperial Drive
Harrow, HA2 7HD

Wembley Branch
24-28, London Road,
Wembley, HA9 7EX

Edgware Branch
2, Turner Road,
Edgware HA8 6BI

## M&K MALIKS & KHAN SOLICITORS

265 Dunstable Road Luton LU4 8BS
mandksolcitors@lawyer.com
Tel 01582 732503
Fax 01582 732533
www.mandksolicitors.com

**IMMIGRATION**
All cases including Asylum, Human rights, Nationality, Detention, Deportation, Bail and Appeals to IAC and High Court

**PERSONAL INJURY**
All cases including Road Traffic Accident, Accident at work and public places. We give 100% compensation + £300.00 Cash back on successful completion of case subj to terms and conditions if you instruct us directly.

**CONVEYANCING**
Residential Freehold Purchase £350+VAT; Sale £299+VAT; Residential and Commercial property, Transfer, Assignment and extension of lease,

**FAMILY LAW**
Divorce, Child Contact Orders, Eviction etc.

Our staff can speak Tamil, Malayalam, Hindhi, Urdu and Pahari.

Accredited member of Law society in Immigration

## Perma Shipping

பிரேமா விமான, கப்பல் பொதி சேவை

யாழ், வன்னி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருமலை, அம்பாறைக்கு விரைவான மலிவான சேவை!


- Air Freight World Wide
- Collection, Packing & Crating
- Urgent, Documents, Parcels Door Delivery
- Customs Clearance By Sea/Air
- Delivery to anywhere in Srilanka

உங்கள் பொருட்களை இங்கு வந்து பொதி செய்து கொள்ளலாம். உங்கள் இல்லம் வந்து பெற்று அனுப்பும் சேவையும் உண்டு.

தொடர்புகளுக்கு : சிவம் (Sivam)
G14, Big Yellow,
1-3 Wyvern Industrial Estates,
Beverely Way, New Malden, Surrey KT3 4PH
Tel: 02086465222 Mob: 07939550397
Email: info@permainternational.co.uk
Web: www.permainternational.co.uk

## GYPS Pest Control Services

லண்டன் மாநகரில் முதல் முதலாக தமிழர்களால் தமிழர்களுக்காக தொடங்கப்பட்ட ஒரே நிறுவனம்



எலி
சுண்டெலி
மூட்டைப்பூச்சி
கரப்பான்
எறும்பு
மற்றும் பல பூச்சிகள்

இவை அனைத்தையும் அழித்து உங்களுக்கு நிரந்தர பாதுகாப்பும் நின்மதியான நித்திரையும் தருவதே எங்கள் சேவை.

உணவகங்கள், கடைகள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு Monthly or Quarterly Pest control vist மிகவும் மலிவான விலையில் ஆனால் மிகுந்த தரத்துடன் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு

07983 589 993
07723 467 012

தென் லண்டன் தமிழர் நலன்நிறை அமைப்பு
வழங்கும்

## சங்கமம் 2011 Sangamam

18th September 2011 at Morden Park
100 London Road Morden SM4 5QU
காலை 9 மணிமுதல் மாலை 9 மணிவரை

அனுமதி இலவசம்

இன்னிசை இரவு

தமிழ் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்
கிளித்தட்டு, கபடி, முட்டிஉடைத்தல், தலகணிச் சண்டை மற்றும் கிறீஸ் கம்பம் ஏறுதல்
"மானாட மயிலாட" உட்பட திறந்தவெளி அரங்க நடன, பாட்டுப் போட்டிகள்
சிறுவர் விளையாட்டுப் போட்டிகள்

சுடச் சுட பலவகையான தாயக உணவுகளான
கூழ், கொத்து றொட்டி, பிரியாணி, வடை, தோசை, அப்பம்
என்பன உங்கள் நாவிற்கு சுவையூட்டவும்
உங்கள் காதுக்கு இன்னையூட்ட
"இன்னிசை இரவு" இசைக்குழு நிகழ்ச்சி நடைபெறும்
சங்கமத்தில் சங்கமிக்க அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்!

In Partnership with
Metropolitan Police
Car Park: £5.00

SOUTH LONDON TAMIL WELFARE GROUP
Enhancing the Quality of Life of the Tamil Community

THORNTON ESTATES
RiverSure
VIZZ MOBILE

# பூராயம்




## இவையளா படிச்ச ஆட்கள்?

பேராசிரியர் இரட்ணஜீவன் கூல், தவராசா எண்டு இரண்டு கோட்டு சூட்டுப்போட்ட ஆக்களின் விவாதத்தை யூரியுப் இல் பார்த்தேன். சீ எண்டு போயிட்டுது. ஒருத்தர் உன்ரை மனுசியின்ரை சுவிம்மிங் பூல் கதை தெரியாதோ எண்டுறார். மற்றவர் உன்ரமனுசி என்ன அதையும் இதையும் போட்டக்கொண்டோ சுவிம்மிங் பூல்க்குள் இறங்கிறவா எண்டுறார். என்ர பரமாத்வாவே இதுகளா எங்கடை பல்கலைக்கழத்திற்கு தலைவராக வர இருந்ததுகள். நீர்தானப்பா காப்பாற்றினீர்.

*செபமாலை தாசன்*

## சோனியாவின் பாவாடையே..

ஒரு பேப்பர் 152 இல் நாடுகடந்த அரசாங்கத்தின் துணைப்பிரதமராம் சிவலிங்கம் என்பவர், காந்தி தேசமே, இந்திரா நாடே என்று எழுதியிருந்தார். விட்டால் சோனியாவின் பாவாடையே, மன்மோகன் சிங்கின் தலைப்பாகையே என்று எழுதியிருப்பார். இந்தியா என்பது பல தேசிய இனங்கள் வாழும், பிரித்தானியர்களால் இணைக்கப்பட்ட நாடு என்பதை இந்த துணைப்பிரதமர் அறியாரோ. ஏதே முழநாடும் காந்தி - நேரு குடும்பத்து சொத்து மாதிரி அல்லவா அறிக்கை விடுகிறார். இதுகளை நம்பி ஒரு அரசாங்கம்?

*தேவராசா*

## விழுந்த பக்கம் குறிசுடும் உலகம்

நியாயம் என்பது என்னவென்றே புரிவதில்லையோ அல்லது புரிந்தும் அதற்கு ஆதரவக் கரம் கொடுக்க முடியவில்லையோ தெரியவில்லை. 1971 ல் பேரினவாதத்தால் எத்தனையோ உயிர்களை இழந்த வங்க தேசத்திற்குக்கூட இலங்கை பேரினதாகத்தின் கொடூரம் புரியவில்லை என்றால் வேறு யாருக்குப் புரியப் போகிறது?

*தேவன்*

## கிறீஸ் பூதத்தை கண்காணிக்க கிறிஸ் பூசாத பூதம்

யாழ்ப்பாணத்தில் பெண்களை தாக்கும் கோத்தாபாயவின் கிறிஸ் பூதங்களை கட்டுப்படுத்திற பொறுப்பை மகிந்தா குத்தியனுக்கு கொடுத்திருக்கிறாராம். இதைத்தான் சொல்லிறது கள்ளனுக்கு விதானை வேலை குடுக்கிறது எண்டு. இந்தப் பேயை பாத்து அந்தப் பேய் பயப்படுதோ தெரியாது. ஆனால் இநதப் பேய்க்கு எனன பிராயசித்தம் செய்யிறதோ தெரியாது.

*கயல்விழி*

## சோனியாவின் பாவாடையே.. எம் நாட்டின் பொறுப்பு யாரிடம்

தமிழர் கூட்டணிக்கு மக்கள் வாக்களிக்கிறார்கள் என்றால், அவர்கள் எம் இனத்தைக் காப்பாற்றும் ஆளுமை கொண்டவர்கள் என்ற நம்பிக்கையிலா? இல்லை, இல்லவே இல்லை. உண்ணாவிரதத்திற்கு மேல் உப்புச் சப்பாக எதுவுமே செய்ய முடியாத கையாலாகாத கூட்டம். புதிதாக வடிவம் மாறலாம் போரட்டம் தொடரும் என்ற பதங்கள் காதில் விழுகிறது. போராட்டம் தொடரத்தான் போகிறது. அதற்குத் தேவையான தலைமையும் உருவாகத்தான் போகிறது. காலகட்டம்தான் தலைமையை உருவாக்குவது என்ற உண்மையை மறந்து தலைமையால்தான் காலகட்டம் உருவானது என்ற சிந்தனைப் பிழையை இனியும் நாம் விடக் கூடாது.

*கதிர்*

## ஒரு பேப்பர் எங்கே கிடைக்குமா?

எனக்கு ஒரு பேப்பர் வாசிக்க சரியான விருப்பம். நீங்கள் சிரமம் பார்க்காமல் இன்னும் பேப்பர் தொகையைக் கூட்டி பரவலாக வைத்தால் இன்னும் எத்தனையோ பேர் வாசிப்பார்கள். ஒரு பேப்பர் வாசிக்கிறீர்களா என்று யாரையாவது கேட்டால் கிடைத்தால் வாசிப்போம் என்கிறார்கள்.

வர்ணன்

## ஆட்சிகள் வீழ்கின்றனவா அல்லது வீழ்தப்படுகின்றனவா?

ஈரான் ரியுனிசியா எகிப்து லிபியா என்று பட்டியல் நீளுகிறது. எல்லாம் முஸ்லீம் நாடுகள். அதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை. முஸ்லீம் நாடுகளில்தான் ஒருவர் இரண்டு மூன்ற தசாப்தங்களுக்கு பதவியில் இருக்கும் சூழல் உண்டு. பலகாலம் ஆட்சியில் இருநதால் ஊழல் ஏற்பட்டதுதான் செய்யும். அப்படியென்றால் அநீதி கண்டு இரக்க குணமுள்ள உலகம் இவற்றைச் செய்கின்றதா? இந்தக் கருணை உள்ளங்கள் எமது பக்கமும் பார்வையைத் திருப்புவார்களா? உண்மையில் கருணை உள்ளவர்கள் என்றால் திருப்புவார்கள்.

*காந்தன்*

## e-petition

சிறிலங்காவில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்தேச சுயாதீன விசாரணைக்கு ஆதரவளிக்குமாறு பிரித்தானிய அரசை வேணடி e-petition உருவாக்கப்பட்டுள்ளது தயவு செய்து உங்களது விபரங்களை பதிவிடுங்கள. விபரம் http://epetitions.direct.gov.uk/petitions/14586 என்ற இணையதள முகவரியில் உள்ளது. ஒரு லட்சம் பதிவுகள் தேவைப் படுகின்றன.

*நிரோசா*

## நெஞ்சு பொறுக்குதில்லையா?

யார் இந்த விசித்திரப் பிரியன்? எனக்கும் இவங்கள் அது இது என்று பேய்காட்டுவது கோபம்தான். ஆனால் தனியே சுடலையில் இருக்கப் பயமாய் இருக்குதே. அவ்வளவக்கு பேயை எங்கடை மனதிலை வளத்திட்டாங் பாருங்கோ.

*தீரன்*

## தமிழ் பா.உ. மகளுக்கு தமிழ் தெரியாதாம்...

பாராளுமன்ற உறுப்பினர் அதுவும் தமிழர் கூட்ணியின் யாழ் பா உவின் மகள் யாழ்ப்பாணம் போனதில்லையாம் தமிழ் பேசத் தெரியாதாம். இது எமக்குப் புதிதல்ல. ஒருமுறை ஒரு கூட்டத்தில் காலம் சென்ற மேயர் இப்பொழுது பேசுவார் என்று கூறிய ஒருவரை தலைவராய் வைத்திருந்த கூட்டணியின் வாரிசுதானே இந்தப் பா உவும்

*நல்லூா முகந்தன்.*

**ஒரு பேப்பர்** தொடர்பானஉங்களுடைய கருத்துக்களைத் தற்பொழுது தொலைபேசி வாயிலாகவும் பதிவு செய்து கொள்ளவும் முடியும்.

பூராயம் பகுதிக்கான கடிதங்களைத் தொலைபேசியில் பதிவு செய்வதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் 020 7043 4314.

# தமிழரின் அடிப்படை உரிமைகளை தமிழ் தேசியக்கூட்டமைப்பால் பெற்றுக்கொடுக்கமுடியுமா...?

'பிரித்தானியாவுக்கு வருகை தந்திருந்த தமிழ் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்று உறுப்பினர்களின் சந்திப்பு சம்பந்தமாக சில விடையங்களை குறிப்பிடலாம் என்று நினைக்கின்றேன். தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான திரு.மாவை சேனாதிராஜா திரு ஸ்ரீதரன் அவர்கள் புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் தமிழ் மக்களுடன் ஒரு கலந்துரையாடலை 04.09.2011 ஞாயிற்றுக்கிழமையன்று ஒழுங்கு செய்திருந்தனர். இது கறோ பகுதியில் உள்ள அலெஸ்டான்டர் அவனியூயில் அமைந்துள்ள செபஸ்ரியன் சென்டர் என்ற மண்டபத்தில் இந்நிகழ்வு நடந்தேறியது. அதற்கு நானும் சென்றிருந்தேன். அங்கு மக்களின் வரவு மண்டபம் நிறையுமளவிற்கு இருந்தது. நிகழ்வு ஆரம்பமாக முன் ஒரு அறிவித்தல் ஒன்று விடப்பட்டிருந்தது. பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைக்குப் பின்னர் 10 தொடக்கம் 15 நிமிட கேள்வி நேரம் இருக்கும் என்று. இங்கு ஒன்றை குறிப்பிட வேண்டும் கலந்துரையாடல் என்றுதான் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. பாராளுமன்ற உறுப்பினர்களின் உரை ஆரம்பமானது. அந்த உரையில் தமிழ் மக்களுக்கு ஏற்கனவே தெரிந்தவற்றைத்தான் அவர்கள் கூறிக்கொண்டிருந்தார்கள். நாளாந்தம் நாம் கேள்விப்படும் விடயங்களைத்தான் அவர்கள் கூறிக்கொண்டிருந்தார்கள். இடையிடையே மக்களின் கரவோசம் அவர்கள் உச்சாகப்படுத்திக் கொண்டிருந்தது.

என்னிடமும் ஒரு கேள்வி இருந்தது. ஆனால் கேள்வி கேட்கும் நிலையில் நான் இல்லை ஏனென்றால் மக்கள் இவர்கள் சொல்வதைக் கேட்டுக் கரவேசித்த வண்ணம் இருந்தது மற்றது நேரம் பற்றாக்குறை. என்னிடம் இருந்த கேள்வி என்னவென்றால் தமிழ் தேசியக்கூட்டமைப்பில் இருக்கும் மூத்த பாராளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜாவிடம் 1977 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் பிரிந்திருந்த எல்லாக்கட்சிகளும் ஒன்று சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டனி என்று போட்டியிட்டு மக்களின் அமோக வரவேற்புடன் வெற்றிபெற்று இலங்கை வரலாற்றில் தமிழ்க்கட்சி எதிர்க்கட்சி என்ற நிலையை அடைந்த அந்தக் காலத்தில் இவர்கள் எல்லோரும் சேர்ந்து சென்ன தீர்வு தமிழர்களின் பிரச்சனைகளுக்கு தமிழீழம் தான் தீர்வு. தமிழீழம் அல்லாத எந்தத்தீர்வையும் நாங்கள் ஏற்கப்போவதில்லை என்று பாராளுமன்றத்தை பகீஸ்கரித்துச் சென்றதும் அன்றைய தலைவர் அமிர்தலிங்கத்தின் மகன் தலைமையில் ஒரு போராட்டக்குழுவை அமைத்து போராடப்புறப்பட்டதும் எல்லோரும் அறிந்த விடயம்.

ஆனால் இன்று எவ்வளவோ போராட்டங்களுக்கு பின் குறைந்த மக்களின் வாக்குகளுடன் வெற்றிபெற்று "ஒன்று பட்ட இலங்கை" என்ற தீர்வுக்குள் சென்றிருக்கிறார்களே. அன்றைய நிலைமைக்கும் இன்றைய நிலைமைக்கும் அதுவும் இவர்களாலே சுதந்திரமாக நடமாட முடியாத பலவீனமாக நிலையில் இருக்கும் இவர்கள் எப்படி தமிழர்களின் பிரச்சனைகளை தீர்வுகளை பெற்றுத்தருவார்கள். தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுத் தரப்போகிறீர்கள் என்பது எனது கேள்வியாக இருந்தது.

மற்றும் மாவை சேனாதிராஜா அவர்கள் பேசும்போது விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தை நடந்த காலத்தில் இடைக்கால நிர்வாகத்தைப்பற்றிப் பேசியிருந்தார். உண்மையில் அந்த இடைக்கால நிர்வாகம் வந்த காலத்தில் சந்திரிக்கா பாராளுமன்றத்தை கலைத்துதேர்தல்வைத்தபோதுரணில் ஆட்சியிழந்துமகிந்தபதவிக்குவந்தது எல்லோருக்கும்தெரிந்த விடயம். அன்றுபுலிகள்பேச்சுவார்த்தையில்அன்றாட மக்களின் வாழ்க்கை அதாவது இடம்பெயர்ந்திருந்த மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்புவதை பற்றித்தான் முதலில் பேசினார்கள். அதுநிறைவேறாமையால் தான் அவர்கள் பேச்சுவார்த்தையை பகிஸ்கரித்தார்கள். பின் இலங்கை அரசு புலிகளின் ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தத்தை மீறிபோர் தொடுத்தபோது சீன இந்திய அரசுகள் வேடிக்கை பார்த்தன. அன்றும் புலிகள் கூறியது தமிழர்களின் அடிப்படை பிரச்சினைகளைப்பற்றித்தான். இப்போ புலிகளை தமிழர்களிடம் இருந்து வேறுபடுத்தி தமிழர்களை காப்பாற்றி விட்டோம் என்று உலகம் முழுவதும் பரப்பும் இலங்கை அரசிடம் அதே தமிழரின் அடிப்படைப் பிரச்சனைகளைத்தான் இன்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களால் தமிழர்களின் அடிப்படைப்பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியுமான என்பது தான் எனது கேள்வியாக இருந்தது. தமிழர்களின் அடிப்படைப்பிரச்சனைகளைத் தீர்க்க முடியாத இவர்களால் தமிழர்களின் இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ளலாம். இருந்தாலும் என்னால் கேட்க முடியாமல் விட்டது கவலையாகத்தான் இருக்கிறது.

- தாஸ்

TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400




Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ
0207 099 2400

→ESOL with Citizenship
• British Passport/ Naturalisation
• Indefinite Leave to Remain
→International ESOL Diploma
• Student Visa / Extension Test
• Spouse Visa / Extension Test
• Work Permit / Extension Test

• Courses from £200
• Successfully trained over 35,000 students
• Certificates within 20 days
• Multilingual staff
• City & Guilds approved centre

National Centres

BIRMINGHAM, 7 Washington Street, Birmingham, B1 1JR, 01216339919
SHEFFIELD, Sorby House, 42 Spital Hill, Sheffield, S4 7LG, 01143034303
LEICESTER, Imperial House, St Nicholas Circle, Leicester, LE1 4LF, 01163260248
LUTON, 169 A, Dunstable Road, Luton, Beds – LU1 1BW, 01582723123
SLOUGH, 18-24 Stoke Road, Slough, Berkshire, SL2 5AG, 01753722056
NEWCASTLE, 51-52 Victoria Avenue, Whitley Bay,Tyne & Wear, Newcastle Upon Tyne – NE26 2BA, 01912525265

FREE INITIAL ASSESMENT

London Centres: Hounslow, Wembley, Kenton, Whitechapel, Camden, Holloway.

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, SEPTEMBER 09, 2011, ISSUE 153

## அடிப்படை உரிமைகளைத் தாரை வார்க்க முடியாது!

ஈழத்தமிழ் மக்கள் மீது சிறிலங்கா அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை நடவடிக்கைகளை சர்வதேச நாடுகள் தடுத்து நிறுத்த முயல வில்லை என்ற ஆதங்கம் உலகத் தமிழ் மக்களிடம் உள்ளது. இவ்வற்றுள் குறிப்பாக முள்ளிவாய்க்கால் படுகொலைகளில் இந்திய மைய அரசாங்கத்திற்கு இருந்த நேரடித் தொடர்புபற்றி முன்னர் பரவலாகப் பேசப்பட்டது. அதனை உறுதி செய்யும் வகையிலான தகவல்களை அண்மையில் விக்கிலீக்ஸ் இணையதளம் வெளியிட்டிருந்தது.

ஏற்கனவே தமிழ்த் தரப்புகளினால் நம்பப்பட்டது போன்று, இந்திய பாதுகாப்பு ஆலோசகராகராக இருந்த எம். கே. நாரயணன் என்பவரே, தனது தமிழர் விரோதப் போக்கினால் இந்தியப் பிரதமரை தவறான ஆலோசனைகளை வழங்கி வழிநடத்தியதாகவும் விக்கிலீக்ஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழ் மக்களைப் பொறுத்தவரை, இவை ஒன்றும் ஆச்சரியம் தருகின்ற செய்திகளாக அமைய வில்லை.

இந்திய மைய அரசானது, தனது புவிசார் அரசியல் நலன்களைப் புறந்தள்ளி விட்டு, ஈழத்தமிழர் நலன்களைப் பாதுகாக்க முன்வரவேண்டும் என்ற எதிர் பார்ப்பு இன்று தமிழ் மக்களிடம் இல்லை. இருப்பினும் பல்லின மக்கள் வாழ் கின்ற, சனநாயக விழுமியங்களை ஓரளவுக்கேனும் மதித்து நடக்கிற இந்திய அரசாங் கம், இவ்விடயத்தில், மேற்குநாடுகளைப் போல் மனிதாபிமான ரீதியாக செயற் படும் என்ற நம்பிக்கை மாத்திரம் இன்னமும் உள்ளது. அந்த வகையில் இந்திய அரசுக்கு அழுதங்களை ஏற்படுத்தும் போராட்டங்கள் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப் படுகின்றன.

சிறிலங்கா தொடர்பான இந்திய அரசின் அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற கருத்து, இந்தியப் புத்திஜீவிகளால் இப்போது வெளியிடப் படுகிறது. இந்திய - சிறிலங்கா பொருளாதார உறவுகளில் ஏற்படும் விரிசல்கள் காரணமாகவும், சீனா - சிறிலங்காவுக்கு இடையில் அதிகரிக்கும் நெருக்கம் காரண மாகவும் இவ்வாறான கருத்துகள் வெளியாகின்ற போதிலும், உள்நாட்டில் ஏற்பட்டுவரும் கருத்துருவாக்கத்தை இந்திய அரசு இலகுவில் புறந்தள்ளிவிட முடியாது.

இந்நிலையில் ஈழத்தமிழ் அரசியல்வாதிகள், இந்திய அரசினை எஜமானர்களாக ஏற்றுக் கொண்டு அவர்கள் இழுத்த இழுப்புக்கு தலையசைக்கும் பொம்மைகளாக மாறுவதனையும், எமது அரசியல் அபிலாசைகளை இந்திய அரசின் நலன்களுக் குத் தாரைவார்த்துக் கொடுப்பதனையும் நாம் அனுமதிக்க முடியாது.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*கோடை முடிஞ்சு குளிர் தொடங்கி விட்டுது. ஆனால் வார இறுதியில் நடக்கிற விழாக்களுக்குதான் குறைவில்லை. இப்ப விழாக்களுக்கு போறதுக்கும் தயக்கமாய் இருக்குது. ஏனென்டால் போனால் படமெடுக்கோணும், எடுத்தால் பேப்பரிலை போடவேணும், போட்டால் பிரச்சனைப்படுத்திற ஆக்களும் இருக்கினம். சிலர் மகிழ்ச்சி அடைவினம், வேறை சிலர் பிரச்சனைக்கு வருகினம். இதிலை எங்கடை நிலைப்பாட்டடை நாங்கள் விளங்கப்படுத்திறம். அதை நீங்கள் எப்படி எடுக்கறீர்கள் என்பதை தெரியப்படுத்துங்கோ.*

*முதலாவது பேப்பரிலிருந்து இண்டைக்கு வாற நூற்றி ஐம்பத்தி மூன்றாவது பேப்பர் வரைக்கும் நாங்கள் அட்டைப்படமாக சமூக நிகழ்வுகளில் எங்கடை படப்பிடிப்பாளர்கள் எடுத்த படங்களையே பிரசுரித்திருக்கிறம். தேசத்தின் குரல் பாலா அண்ணா, மூத்த ஊடகவியலாளர் சிவநாயகம் ஐயா ஆகியோருக்கு இறுதி வணக்கம் செலுத்தும் முகமாக அவர்களது படங்களை பிரசுரித்ததை விட்டால் மிகுதி யாவும் எமது சமூகத்திலுள்ள சாதாரண மனிதர்களின் படங்களையே அட்டைப்படமாக பிரசுரித்துள்ளோம்.*

*அட்டையில் பிரசுரிக்கிறதுக்கென படங்களை, அதற்கு பொறுப்பான ஆசிரியர்கள் எதேச்சையாகவே தெரிவு செய்கிறார்கள். அவர்களுக்கு ஏற்கனவே தெரிந்தவர்களை அவர்கள் தெரிவு செய்யிறதில்லை என்பது நியதியாக உள்ளது. இதில் அவர்கள் பிசகியதாக இல்லை. ஆனால் சில நேரம், தங்களது படங்கள் பேப்பரில் வர விரும்பாத சிலரின் படங்களும் பிரசுரிமாகிறது. அதை விட்டால் நாங்கள் யாரையும் வேண்டுமென்று சஞ்சலப்படுத்துவதற்காக படங்களை பிரசுரிப்பதில்லை என்பதை தெரியப்படுத்துகிறோம்.*

*ஏன் சாதாரண மனிதர்களின் படங்களை அட்டையில் போடுகிறீர்கள் என நீங்கள் கேக்கலாம். எங்களுக்கு எங்கடை சமூகத்தில் இருக்கிற ஒவ்வொரு மனிதரும் வடிவாகத் தெரியுது. அட்டையை அவர்களால் அலங்கரிக்கிறோம். அவ்வளவுதான். இனி அட்டைப்படத்துக்கு எழுதப்படுகிற வசனங்கள், இதிலையும் சிலர் குறை பிடிக்கிறார்கள். பிளீஸ் கொஞ்சம் sense of humor க்கு இடம் கொடுங்கள்!*

*ஒரு பேப்பர் ரின் இணையதளம் புதுமெருகூட்டப்படுகிறது. இன்னும் ஒரிருவாரங்களில் அதனை வழமையான எமது முகவரியில் பார்வையிடலாம். இணையத்தில் படிக்கக்கூடிய வகையில் e-paper ஆகவும் இணைக்கவுள்ளோம். அது போல் facebook, twitter என்பனவற்றின் மூலமும் நீங்கள் ஒரு பேப்பர் ருடன் தொடர்பு கொள்ளலாம். Facebook, Twitter, google+ போன்ற சமூக வலைத்தளங்களில் நீங்கள் பார்த்து ரசித்த விடயங்களை நீங்கள் எங்களது பக்கங்களில் பகிர்ந்து கொள்ளலாம்.*

*மட்டக்கிளப்பான் எழுதும் அலசுவாரம் தொடர் இந்தப் பேப்பரில் 100வது அங்கத்தை எட்டுகிறது. இது சீரியல் நாடகங்கள் போல் அறுத்துகொட்டாமல் ஒவ்வொன்றும் அன்றாட வாழ்வின் பிரச்சனைகளை அலசுவதாக அமைந்ததால் அதற்கென ஒரு வாசகர் பட்டாளம் இருக்கிறது. மட்டக்கிளப்பானுக்கு உங்கடை சார்பாக வாழ்த்துகளை தெரிவிக்கிறம்.*

*வேறை என்ன?*

*மீண்டும் சந்திப்பம்*

*ஒரு பேப்பர் காரன்கள்+காரிகள்*

# Why Sri Lanka matters



**Edward Mortimer**

"More than 300,000 people became the victims of the reckless disregard for international norms by the warring parties. Indeed, the conduct of the war by them represented a grave assault on the entire regime of international law designed to protect individual dignity." In April 2011, a panel of experts convened by UN Secretary-General Ban Ki-moon published this damning indictment of the Government of Sri Lanka (GoSL) and the Liberation Tigers of Tamil Eelam (LTTE).

The report, which focussed on events leading up to the end of the country's long-running civil war in May 2009, accused both parties of committing human rights violations, including war crimes and crimes against humanity. It called for an international investigation, noting that as many as 40,000 civilians could have been killed in the final weeks of fighting, and that the majority of them died at the hands of the Sri Lankan army.

The GoSL has vehemently rejected the report. Its version of events is one of triumph over terrorism - a humanitarian operation that rescued Tamils from a ruthless terrorist group consistently criticised by the UN and NGOs for employing suicide bombers, child soldiers, torture and extortion. But even hard-line GoSL supporters are now beginning to realise that war crimes allegations are damaging it and need to be addressed. The government's domestic commission of inquiry is flawed and toothless. Meanwhile, continuing abuses in the country make talk of reconciliation sound increasingly hollow.

An independent investigation of allegations is acutely needed, above all by the people of Sri Lanka themselves. Without it, there can be no justice for the wronged; no healing for the victims; and, in a country marred by decades of propaganda and censorship, no objective account of what really happened in 2009. All are essential for long-term peace.

> Indeed, the conduct of the war by them represented a grave assault on the entire regime of international law designed to protect individual dignity.

For those of us outside Sri Lanka, there is also much at stake. Mr Ban's panel made the deeply worrying statement that the "entire regime of international law designed to protect individual dignity" has been weakened by the GoSL's actions and perceived impunity. The government's scorched-earth tactics, the panel said, have "emboldened some to believe that these rules may now be disregarded in the cause of fighting terrorism".

A month after the war ended, the Sri Lankan President visited Burma, reportedly to advise the generals there on how to defeat their own insurgents. Turkish politicians have compared the Kurdistan Workers' Party (PKK) to the LTTE and suggested that the GoSL's actions could be a model for Turkey. And earlier this year, the GoSL held a military seminar on its victory, with representatives not only of repressive regimes in other developing countries but also of the US armed forces.

The appeal of a 'Sri Lanka model', which includes impunity for both recent war crimes and current abuses, makes the country a threat to international peace and security. It should therefore attract the attention of the UN Security Council. Failure to address this threat will only expose, once again, the weakness of the international system. Echoing reports on the UN's performance in Rwanda and Srebrenica, Mr Ban's Sri Lanka panel called on him to review the UN's own actions during and after the conflict. The UN has been criticised inter alia, for not raising the alarm in autumn 2008, when it and other aid organisations were asked to leave the conflict zone, and for appearing to legitimise the GoSL's post-war conduct.

The rest of the international community did even worse. Just after the war, the states on the UN Human Rights Council (HRC) adopted a resolution congratulating Sri Lanka on its conduct. Countries including South Africa, Brazil, India and Pakistan voted for it. Contrast this with the HRC's action on Libya earlier this year.

At last, though, the tide appears to be turning. In recent weeks, the US has issued two warnings to the GoSL and a Congressional Committee has recommended suspending aid to Sri Lanka. The US reportedly plans to raise the situation at the HRC. Politicians in countries such as the UK and India have also hardened their rhetoric. But there is still a long way to go. Mr Ban says he needs authorisation from an intergovernmental body such as the HRC or the Security Council to set up an investigation. Yet, so far, neither body has even formally considered his panel's report. Nor has he officially asked them to do so.

Chinese and Russian support for the GoSL is perceived as a major stumbling block. However, we should remember that, in 2005, China allowed the Security Council to refer war crimes in Darfur to the International Criminal Court, despite the two countries' significant oil and economic ties, and this February, both China and Russia voted to do the same with Libya. And even if those two countries do remain firm, that should not excuse others' failure to speak out.

The international community failed to protect Sri Lanka's civilians in 2009. The least it can do now is insist on an international investigation

*Edward Mortimer is Senior Vice-President and Chief Programme Officer at the Salzburg Global Seminar and chair of the Sri Lanka Campaign for Peace and Justice. From 1998 to 2006 he served as chief speechwriter and then director of communications to UN Secretary-General Kofi Annan.*

*Courtesy: una.org.uk*

# வடக்கிலுள்ள செங்கொடி - உள்ளத்தால் பொய்யாது ஒழுகியவள் !

மற்றுமொரு நெருக்கடியான நேரத்தில் தமிழ் நாட்டில் ஒரு தீக்குளிப்பு நடந்துள்ளது. தீக்குளித்தவர் தியாகி ஆகிவிட்டார். 21 வயதே ஆன அவரின் பெயர் தோழர் செங்கொடி. தோழர் என்று தான் அவர் தன்னை குறிப்பிட்டிருக்கின்றார். இருந்தாலும் பலருக்கு மகளாகவும், இளைஞர்களுக்கு தங்கையாகவும் ஆகிவிட்டார்.

செங்கொடி - இதுவரை அவர் மக்களுக்காகவே வாழ்ந்தவர். கொத்தடிமைகளாக வாழ்ந்து வரும் இருளர்களின் வாழ்வுரிமைக்காகப் பாடுபட்டவர். இலங்கையில் நடந்த இன அழிப்புப் போரை நிறுத்த வேண்டும் என்று போராடியவர். மருத்துவர் பினாயக் சென் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று பேசியவர். ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்காக பறை எடுத்து முழங்கியவர்? திருப்பெரும்புதூரில் நோக்கியா தொழிற்சாலையில் கழுத்தறுக்கப்பட்டுக் கொல்லப்பட்ட அம்பிகாவுக்காகப் போராடியவர். பண்பாட்டைச் சீர்குலைக்கும் 'போய்ஸ்'படத்தை எதிர்த்து போராடியவர். இப்படி அவருடைய பரிமாணங்கள் மிகப் பெரியது. இன்னும் அதிகமாக விரிந்து செல்லக்கூடியது. அவர் தன் 21 வயதுக்குள் சிறைக்கு போன அனுபவம் கொண்டவர். யாரையும் திருப்பி அடிப்பதற்கும் காவல்துறையை எதிர்த்துப் பேசுவதற்கும் பழக்கப்பட்டவர். இந்த சிறு வயதில் அவர் மீது பல வழக்குகள் போடப்பட்டுள்ளன. அவர் அந்த வழக்குகளுக்காக நீதிமன்றங்களில் ஏறி இறங்கி வந்தவர். அவர் வாழ்ந்தாலும் மக்களுக்காகத் தான் வாழ்ந்திருக்கப் போகின்றார். அவர் இறந்ததும் மக்களுக்காகவே. எனவே, அவர் வாழ்வு இத்தோடு முடிந்தது என்பது இத்தேசத்திற்கு நேர்ந்திருக்கும் பேரிழப்பே. இந்தளவில் செங்கொடியின் தீக்குளிப்பும் அவரை இழந்ததும் மற்ற தீக்குளிப்புகளில் இருந்து வேறுபட்டு நிற்கின்றது.

அவர் நம்மிலிருந்து எப்படி வேறுபட்டவர்? நம்மைப் போலவே இரத்தமும் சதையுமாக இம்மண்ணில் உலவி வந்தவர். நம்மைப் போலவே பாசம், நட்பு, அன்பு, காதல், தாய்மை என்ற உணர்ச்சிகள் கொண்டவராகத் தான் இருந்திருக்க வேண்டும். அவருக்கு விடுதலை உணர்ச்சியும் சேர்ந்தே இருந்தது. அது எல்லாவற்றையும் புறந்தள்ளும் ஆற்றல் கொண்டதும் உண்மை தன்மை கொண்டதுமாக இருந்திருக்கின்றது. நம்மைப் போலவே பேரணிகளில் பீடுநடை போட்டவர்? பிரச்சாரப் பயணங்களில் பங்கு கொண்டவர்? ஆர்ப்பாட்டங்களில் முழங்கியவர்? 'பேரறிவாளன், சாந்தன், முருகனைத் தூக்கிலிட விட மாட்டோம்' என்று நம்மைப் போல் தான் முழக்கம் போட்டார். செப்டம்பர் 9 என்று அவர்களைத் தூக்கிலிட நாள் குறிக்கப்பட்டது என்றவுடன் நம்மைப் போல தான் அவரும் பதறியிருப்பார். ஆனால் அந்த பெருங்கொடுமை நடந்துவிடக் கூடாது என்று அவர் உயிரைக் கொடுத்தார். அவர் வெறும் வாயளவில் முழக்கங்கள் போடவில்லை. தன் சிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும் அந்த கோரிக்கைகளுக்காக வாழ்ந்திருக்கின்றார். அதற்காகவே வாழ்வை முடித்துக் கொண்டும் இருக்கின்றார். அதில் மட்டும் அவர் நம்மைவிட முற்றிலும் மாறுபட்டு நிற்கின்றார். அவருக்கு இரட்டை மன நிலை இல்லை. அவர் தன் வாழ்க்கையை ஏற்கெனவே மக்களுக்காக அர்ப்பணித்திருந்ததால் உயிரைக் கொடுப்பது குறித்து எந்த சலனமும் இருக்கவில்லை. நம்மைப் போல 'இருந்து போராட வேண்டும்' என்று சொல்லிக் கொள்பவர் அல்ல. அவர் இருந்தவரை போராடித்தான் வாழ்ந்திருக்கின்றார்.

காலை சிற்றுண்டிக்கும் மதிய உணவுக்கும் இடையே கருணாநிதி காலவரையற்ற உண்ணா விரதம் இருந்தார் என்று சொல்லிக் கொள்கிறோமே. மாலை நேர விருந்திற்கு செல்வது போல் பொது கூட்டங்களுக்கு செல்லும் நாம் கருணாநிதியிலிருந்து எப்படி மாறுபட்டவர்கள்? 60 ஆண்டுகளாக கொள்ளையடித்த சொத்தையும், அரசியல் செல்வாக்கையும், முதல்வர் பதவியையும் இழக்கத் துணியாத கருணாநிதி ஒரு பக்கம். 21 ஆண்டுகளே வாழ்ந்துவிட்டு இத்தோடு தன் வாழ்க்கையை முடித்துக் கொள்வோம் என்று உயிரை இழந்த செங்கொடி இன்னொரு பக்கம். இதில் நாம் எந்த பக்கம்? ஏதோ நேரத்தையும் உழைப்பையும் தந்துவிட்டால் போதும் என்று நினைத்துக் கொண்டு இருக்கின்றோம். சமூக அந்தஸ்த்தையும், குடும்ப உறவுகளையும், நமது வாழ்க்கை முறைகளையும் பாதிக்காமல் ஒரு போராட்ட வாழ்க்கையை வாழ்ந்துவிட முடியாது. எந்த பாதிப்பும் இல்லாமல் என்ன செய்வோமோ அதை செய்வோம் என்று கருதுவது ஆறுதலுக்காக ஆலயம் செல்வதற்கு ஒப்பாகும். அடிப்படையில் இவை எல்லாம் சேதம் அடையும்போதுதான் உண்மையான போராட்டத் திசையில் பயணிக்கின்றோம் என்று பொருள் ஆகும்.

எந்த சேதாரமும் இன்றி இந்தியா போன்ற ஒரு கொடுங்கோல் அரசை எதிர்த்து போராடி நாம் மக்களைக் காத்துவிட முடியாது. இழப்புகள் இன்றி வெற்றிகள் இல்லை. பெரிய அதிகாரங்கள் இல்லாத சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றுவதற்கே ஒரு உயிரைக் கொடுக்க வேண்டியுள்ளதென்றால் ஈழ விடுதலை, தமிழ்நாட்டுத் தேசிய உரிமைகள் எனப்தற்கு எல்லாம் எத்தனை இழப்புகளைச் சந்திக்க வேண்டி இருக்கும்.

இந்த முறையும் செங்கொடியைப் புதைக்கும் பொழுது நம் மனசாட்சியையும் சேர்த்தே புதைத்துவிட்டு மறுநாளிலிருந்து நம் அன்றாட வாழ்வில் அமுங்கிப் போய்விட்டோம். மீண்டும் ஒரு நெருக்கடி வரும். முதல் ஆளாக நாம் முகநூலில் எழுத தொடங்குவோம். மீண்டும் துண்டறிக்கை, சுவரொட்டி, பிரச்சாரப் பயணம், பொதுக்கூட்டம், ஆர்ப்பாட்டம், பேரணி, உண்ணா விரதம், முழக்கங்கள் என்று சூடு பிடிக்கும் அரசியல் களம். பிறகு கையறு நிலையில் தலைவர்களைக் குறை சொல்லிக் கொண்டு எப்படியும், முத்துகுமரன், செங்கொடி போன்றவர்கள் தீக்குளிப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் நாம் காத்திருக்கப் போகின்றோம். ஏனென்றால் செங்கொடிகள் விடுதலை உணர்ச்சியை எல்லாவற்றிலும் மேலானதாக எண்ணுகின்றார்கள். தன் சொல்லாலும், செயலாலும், சிந்தனையாலும் இத்தேசத்தையும், மக்களையும் நேசிக்கின்றார்கள். நாம்?

*செந்தில் (Save Tamil இயக்கம்)*

*நன்றி: கீற்று*

# Twin Towers and Genocide of Tamils

**By: Nadarajah Balasubramaniam (PFLT)**

It has been ten years since 19 Al-Qaeda terrorists hijacked four US passenger planes and ploughed them into the Twin Towers and the Pentagon. An estimated 3,000 were killed and thousands injured in the co-ordinated attacks.

One can get emotional and hot about the past and present, but it is always time to move on. Generally trouble begins when minds are opened enough to look how 11 September 2001 has defined our world today and will continue to shape our future.

## My 'e-mail Message' to BBC

On Tuesday September 18, 2001 the Taliban, Afghanistan's ruling militia, declared a holy war against the United States. About three weeks later, on the 10th of November 2001, there was a BBC program, the subject being "Daisy cluster bomb, a sign of desperation." ( questiontime@bbc.co.uk, newsnight@bbc.com)

Mr MacShan, the then Parliamentary Secretary to the ministers of the State and the Labour Member of Rotherham was one of the panel members. When I went on the line, I was asked to send my views in an e-mail, the reason was the substance, but lack of time was the excuse given to me. I still have the print-out of my mail.

Quote. "This is in response to Mr. Denis MacShame's comment, "They caused maximum destruction to human beings"

" Sir, I think you are wrong. Let us sit back and see what happened on the horrible day. America has gigantic and unchallengeable economic and military power. Because of these America has no ending arrogance and its foreign policies are of double standards and horrible. These affected the whole world , especially the third world poor countries. America lacks the magnanimity one expects from the greatest world power.

So someone thought that it was high-time that America was taught a lesson for her high-handedness and arrogance. The attack on September 11th was exactly that. The attack on the twin towers was on America's economic power and that on the Pentagon on its military power. It was a horrible and a massive task of destruction that the perpetrators never thought of the civilians. The euphoria that, " the attackers killed 5-7 thousand innocent American civilians", was created in the USA and carried on and on but no one came out with a credible analytical view why that happened? I have listened to so many discussions and read many articles but no one came out with the true story.

The death of so many civilians shocked the world and every citizen rich and poor said prayers and at least felt sorry for those unfortunate ones. Simply, the tragedy happened only because of the hatred towards America. Only a few talk about the attack on Pentagon, even though 25% of their effort went on that.

Now you know why Mr. McShame is not correct like many others When America bombs, do they worry about civilians? Now you see; they told the world that they would use only the precision bombing with 94% accuracy and on precise targets , but they already started using Daisy cutter, a bomb of mass destruction. Their only concern is that no American should go home in body bags but hundreds of of poor Afghans can get blown into pieces . I am not a Muslim!"

When I watched the collapse of New York's Twin Towers on television as it happened, it seemed like a distant tragedy. No Tamil in Eelam or elsewhere could have 'imagined that the events of September 11, 2001, thousands of miles away would drive our struggle for human right to end in a well planned- premeditated-genocide.

Thanks to the modern media; words, images and voices have enlightened the world. Further the appeal made by the Right Bodies and Right People, the Elderly and the Learned have created a genuine guilty consciousness in the minds of the world population, for knowingly or unknowingly supporting or tolerating the Sri Lanka Government criminal acts amounting to Genocide of Tamils.

The game of Sri lanka government using the threat of terrorism to explain or try to justify the abuses, has gone stale and disgusting

The timely and sincere declaration or genuine appeal of Ron Ridenour, the popular journalist who always dares to stand firm claiming, " Besides using words in an effort to eradicate racism, inequality and wars, I have been an activist against wars, racism, chauvinism and for socialist solidarity.", will make welcome changes in many socialist genuine countries who value human Rights and expose the real face of imperialist forces. Hopefully the UNHRC members who voted in support of Sri Lanka, in May 2009 will think twice before again supporting Sri Lanka.

Ron Ridenour said, "On this July 26 day of celebration, I call upon the Cuban government, as well as all members of the ALBA alliance, to return to the moral principles expressed by Fidel and Che and do the right thing by the Tamil people"

Will India support the implementation of this report of the Expert panel in world councils, and answer the cries of the victims consistent with the noble spirit of the founding fathers of modern India or will it again trust the deceitful Rajapakse government to spin a web of deception on a trusting world.

The UN Panel of Experts recommended that an appropriate international mechanism be established for investigating war crimes in Sri Lanka. Timely Wiki leaks have told the world, "After all Ban Ki Moon is not that bad personality. He has to find time to watch CH4 film. Even our PM Cameron has to watch the other half of the film before making any decision.

Britain needs to make an unequivocal statement supporting this recommendation and follow it up with real pressure for an international investigation, without encouraging Sri Lanka government to use their LLRC which is flawed at every level: in mandate, composition and practice, as a carpet.

(Note: Before this I wrote this 'Opinion' column under the pen or false name, Periasamy Kanthavel)

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

1st and Best Accountants
Wembley ................ 07828 396 651

BBK Partnership
Croydon.................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER**
Bank: **HSBC**
A/C: **61429035**
S/C: **40-33-09**

# ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
பிரித்தானியா
அ. இரவி - மணி - அகிலன்
மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பிரான்ஸ்
சிறி

ஜேர்மனி
சபேசன்

சுவிஸ்
சயந்தன்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
கவி

விளம்பரம்
சோபனா

அச்சு
தர்சினி (கனடா) - பானு

வடிவமைப்பு
மயூரன் - பெகின்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி - நிர்வாகம்
நிவேதா

வழங்கல்
உதயகுமார்-சிவா-பிரகாஸ்



உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com



*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month. The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*


# அழியத்தான் போகிறோமா?

## சற்று மாறுதலுக்காக

எழுதுவது: சேயோன்

கோஞ்சம் கோபத்துடனும் மிகுந்த கவலையுடனும் இதை எழுதுகிறேன். இப்பத்தியில் பலமுறை எழுதிச் சலித்த ஒன்று தான். செவிடர்களின் காதில் ஏன் மீண்டும் மீண்டும் சங்கூதித் தொலைக்கிறேன் என்று தெரியவில்லை. காரணம்? ஒரு நப்பாசை தான். ஒருக் காலாவது பொறி தட்டாதோவென்று சும்மா எண்ணுகிறேனாக்கும்.

சென்ற வருடம் மாவீரர் நாளின் போது மாவீரர் நாளுக்கான அறிக்கையினை தலைமைச் செயலகம் என ஒன்றும் அனைத்துலகச் செயலகம் என ஒன்றும் வெளியிட்டிருந்தன. இரண்டும் தமிழீழ விடுதலைப்புலிகளின் சின்னத்தையே பயன்படுத்தியிருந்தது. அது பெரும் குழப்பத்தை மக்கள் மத்தியில் உண்டு பண்ணியது. அதே சமயம் நாடு கடந்த அரசாங்கம் மாவீரர் நாளுக்கான செய்தியினைத் தந்திருந்தது. அது ஒன்றும் குழப்பத்தைத் தந்தது அல்ல.

இப்பொழுது நான் அறிகிறேன் செய்தி ஒன்று மாவீரர் நாளும் இரண்டாக நடைபெறப் போகின்றது என. ஏற்கனவே இலண்டனில் 'தமிழர் விளையாட்டுப் போட்டியும்' இரண்டாக நடைபெற்று விட்டது. அடுத்து மாவீரர் நாள். அதை அடுத்து இன்னும் என்னன்னவோ நடைபெறப் போகின்றது. இப்படியெல்லாம் ஏன் நிகழ்கிறது என்று வெம்பிக் கிடக்கின்றேன் நான். இது ஏலவே எதிர்பார்த்தது தான் ஆனால் இவ்வளவு காட்டமாக அல்ல. அதிகாரப் போட்டியா இதற்குக் காரணம்? அல்லது 'ஈகோ' முட்டி மோதுகிறதா? அல்லது நான் ஒருவன் தான் இருக்கலாம் என்கின்ற மமதையா? அல்லது பணம் செய்கின்ற 'பத்து' வேலைகளில் இதுவும் ஒன்றா?

இவ்வாறான சந்தர்ப்பங்களில் 'இன்னாரை இன்னாரின் உளவாளி' என்று வெகு சுலபமாக அடையாளம் காட்டிவிட்டுப் போய்விடலாம். 'உண்மை மனிதர்களும்' அக் குற்றச்சாட்டை நம்பினால் பிறகு அடுத்த கதை இல்லை.

'இன்னாரை இன்னாரின் உளவாளி' என்று சொல்கிற போது அல்லது துரோகி என்று அறிவிக்கிற போது நான் மிரண்டு விடுகிறேன். எந்த ஆதாரமும் இல்லாது எந்த நிறுவலும் செய்யாது தன்னை அல்லது தன் கருத்தை எதிர்க்கிறான் என்பதற்காக வெகு சுலபமாக உளவாளி,துரோகி என்ற பட்டங்களைச் சூட்டிவிட்டுப் போய் விடுவார்கள்.

நாங்கள் என்ன இராணுவத் தாக்குதலா மேற்கொள்கின்றோம். நாங்கள் அரசியல் வேலை தான் செய்கின்றோம். தாயகம் தேசியம் தன்னாட்சி என்பதனை ஏற்றுக்கொள்கின்ற எவரும் இதனுள் நுழையலாம். இக்கோட்பாடுகளில் விமர்சனம் உள்ளவர்கள் கூட சேர்ந்து வேலை செய்யலாம். அவர்களது உழைப்பும் பங்களிப்பும் காலமும் அவர்கள் யார் என்பதனைத் தீர்மானிக்கும். அரசியலிடமும் காலத்திடமும். அத்தனையையும் நாங்கள் விட்டுவிடுவோமே!

நிற்க, தமிழ்த் தேசியமென்பது வெறும் சொல் அல்ல அது எங்கள் உணர்வு, எங்கள் வாழ்வு. நாங்கள் தேவைக்கு ஏற்ப தமிழ்த் தேசியத்தை பேசப்போகின்றோமா? அல்லது 'தமிழ்த் தேசியர்'களாக வாழப் போகின்றோமா? இங்கு நடக்கின்ற காரியங்களைப் பார்க்கின்றபோது 'தேவைக்கேற்ப' தமிழத் தேசியத்தை பேசுபவர்களாகவே நாங்கள் இருக்கின்றோம். அதனால்த்தான் எந்த விமர்சனமும் இல்லாமல் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தை எதிர்க்கின்றோம் மாவீரர் நாளை இரண்டாக உடைக்கின்றோம்.

தமிழ்த்தேசியம் தொடர்பாக சிந்திக்கின்ற அமைப்புக்கள் என்பது 1980களில் சுமார் முப்பது அமைப்புக்கள் இருந்தன. அவற்றில் பெரும்பாலானவை சொல்லளவிலும் தெளிவற்றும் இருந்தன. இறுதியாக தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற ஒரேயொரு அமைப்புத்தான் தமிழ்த்தேசியம் என்பதனை உறுதியாகவும் ஓர்மமாகவும் முன்னெடுத்தது. அப்பொழுதெல்லாம் அதனைக் கவனிக்கத் தவறிவிட்டேன் என்ற கவலை இப்பொழுதும் எனக்கு உண்டு

இப்பொழுதும் தமிழத்தேசியத்தை விட்டுக் கொடுக்காது முன்னெடுக்கின்ற அமைப்புக்கள் என்று சில உள்ளன. நாடு கடந்த அரசாங்கம், தலைமைச் செயலகம், அனைத்துலகச் செயலகம், உலகத் தமிழர் பேரவை, பிரித்தானிய தமிழர் பேரவை, மக்கள் அவை.... இவற்றுடன் இன்னும் இணையக்கூடியன உள்ளன. இவை ஒன்றோடொன்று நெருங்கி அரவணைத்து ஓர் இலக்கை நோக்கிப் பயணித்தவை. அப்படிப் பயணிக்காவிடில் இனியாவது பயணிக்க வேண்டும்.

ஆனால் நான் ஒருவனே நிற்பேன் என்று யாராவது ஒரு அமைப்பு இதனுள் சத்தம் போட்டால் அது மிக மிக ஆபத்து. இலக்கு நோக்கி எல்லாக் குதிரைகளும் ஓட வேண்டும். எல்லாக் குதிரைகளும் ஓட வழி விடவும் வேண்டும். நான் மாத்திரமே ஓடுவேன் என்று ஒரு குதிரை நினைத்தால் அது படுகுழிக்குள் விழுகின்றதுஎன்று அர்த்தம். ஒற்றைக்குழல்த் துப்பாக்கியின் காலம் போய்விட்டது.பல்குழல் பீரங்கிகள் வந்துவிட்டன.

கொல்வின் ஒருமுறை சொன்னார் 'ஒரு மொழி என்றால் இரு நாடு. இரு மொழி என்றால் ஒரு நாடு' அதாவது சிங்களம் மாத்திரமே என்றால் இலங்கை இரு நாடாகும் சிங்களமும் தமிழும் என்றால் இலங்கை ஒரு நாடாகவே இருக்கும். இது மகா உண்மையைச் சொன்னது.

அது இங்கும் பொருந்துகிறது நான் ஒருவன் மட்டுமே நிற்பேன் என்று யாரேனும் இறுமாப்புக் கொண்டால் பிளவுகள் தவிர்க்க முடியாதன. அவரவர் தனித்துவத்தைப் பேணி எல்லோரும் சேர்ந்து வேலை செய்வோம் என்று நினைத்தால் ஒருமைப்பாடு இருக்கும். அது வெற்றியைத் தரும்.

**மாவீரர்களின் தலையில் கை வைத்து அவர் தம் கனவில் மனம் வைத்து தமிழத் தேசியத்தின் ஆணையின் பெயரால் நாம் அடுத்த காலடி எடுத்து வைப்போம். அல்லவெனில் எம் அழிவு தவிர்க்க முடியாதது.**

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்!

## ஒரு பலவீனம் உங்களை அழித்து விடலாம்!

ஒரு சங்கிலியின் உண்மையான பலம் அதன் அதிக பலவீனமான இணைப்பில் தான் இருக்கிறது. அதன் மற்ற அனைத்து இடங்களும் எவ்வளவு உறுதியாக இருந்தாலும் அறுந்து போகக் கூடிய அந்த இணைப்பின் பலத்தைப் பொறுத்தே அதன் பயன் அமையும். அதே போல ஒரு பலவீனம் ஒரு மனிதன் விதியை நிர்ணயித்து விடுவது உண்டு.

இராவணன் வான் புகழ் கொண்டவன். பத்து தலை என்று சொல்வது கூட அவன் அறிவின் அளவுக்குச் சொல்லதென்று கூறுவதுண்டு. அதே போல உடல் வலிமையிலும், போரிடும் திறமையிலும் கூட இராமனையே வியக்க வைத்தவன். வேதங்களாகட்டும், கலைகளாகட்டும் அவற்றை எல்லாம் கரைத்துக் குடித்தவன். கடைசியில் காமம் என்ற பலவீனத்தால் அவன் அழிந்து போனான். அவனுக்கு இருந்த அத்தனை பெருமைகளும் கூட அவனைக் காப்பாற்ற முடியவில்லை.

ஒரு பெரிய கப்பலைக் கவிழ்க்க சிறிய துளை போதும். அது போல சில சமயங்களில் ஒரு மனிதனை அழிக்க அவனது ஒரு பலவீனம் போதும். எத்தனையோ திறமையாளர்கள், நாம் வியந்து போகிற அளவு விஷய ஞானம் உள்ளவர்கள் ஒரு பலவீனத்தால் ஒன்றுமில்லாமல் அழிந்து போவதை நாம் நம்மைச் சுற்றிலும் பார்க்கலாம்.

ஒரு இசைக் கலைஞர் நல்ல குரல் வளமும், கர்னாடக இசை ஞானமும் உள்ளவர். வயலின், கீபோர்டு ஆகிய இசைக்கருவிகளிலும் மிக அருமையாக வாசிக்கக் கூடியவர். கேரளாவைச் சேர்ந்த அவருக்கு இணையான மாணவனை தன் வாழ்நாளில் சந்தித்ததில்லை என்று அவருடைய குருவால் பாராட்டப்பட்டவர். அப்படிப்பட்ட அவர் தன் குடிப்பழக்கம் அத்துமீறிப் போனதால் இன்று வறுமையால் வாடுகிறார். பலர் கச்சேரிகளுக்கு ஆரம்பத்தில் அழைத்துப் பார்த்தனர். முன்பணம் வாங்கிக் கொண்டு அதில் குடித்து கச்சேரி நாளில் எங்காவது விழுந்து கிடப்பாராம். பின் எல்லோரும் அவரைக் கூப்பிடுவதையே நிறுத்திக் கொண்டார்கள். இன்று தெரிந்தவர்களிடம் ஐம்பது நூறு என்று வாங்கிக் குடித்துக் கொண்டு இருக்கிறார். அவரைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்ட பெண் முடிகிற வரை தாக்குப் பிடித்து விட்டு ஒரே குழந்தையை எடுத்துக் கொண்டு அவரை விட்டுப் போய் விட்டாள். ஒரு மாபெரும் இசைக்கலைஞராக உலகிற்கு அறிமுகமாகியிருக்க வேண்டிய ஒரு நபர், புகழோடு பணத்தையும் சேர்த்துக் குவித்து வெற்றியாளராக இருந்திருக்க வேண்டிய ஒரு நபர் இன்று அடையாளமில்லாமல், ஆதரவில்லாமல் அழிந்து கொண்டிருக்கிறார். காரணம் ஒரே ஒரு மிகப்பெரிய பலவீனம் கட்டுப்பாடில்லாத குடிப்பழக்கம்.

அதே நபருடன் சேர்ந்து வயலின் மட்டும் கற்றுத் தேர்ந்த ஒரு கலைஞர் இன்று கச்சேரிகளுக்கும் போகிறார், வீட்டில் குழந்தைகளுக்கும் வயலின் டியூஷன் சொல்லித் தருகிறார். நல்ல வருமானத்துடன் கௌரவமாக குடும்பத்துடன் வாழ்கிறார்.

எனக்கு மிகவும் தெரிந்த ஒரு நபர் மிக நல்லவர். நன்றாகப் படித்தவர். நல்ல புத்திசாலி. அரசாங்க வங்கியில் வேலையில் இருந்தார். சொந்த மாடி வீடு, வாகனம் எல்லாம் இருந்தது. ஒரு சமயம் இரண்டு கம்பெனிகளின் ஷேர்கள் வாங்கி விற்று பெரிய லாபம் சம்பாதித்தார். அந்த லாபம் அவரை ஒரேயடியாக மாற்றி விட்டது. இப்படி ஒரே நாளில் சம்பாதிக்க முடியும் போது மாதாமாதம் உழைத்து சம்பாதிக்கும் இந்த வருமானம் அவருக்குத் துச்சமாகத் தோன்ற ஆரம்பித்தது. வங்கியில் எல்லாக் கடன்களும் வாங்கி ஷேர்களில் போட்டு நஷ்டமடைந்தார். எல்லா வங்கிகளிலும் க்ரெடிட் கார்டுகள் வாங்கி அதில் பணம் எடுத்து ஷேர்களில் போட்டார். நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் அறிவுரையைக் கேளாமல் அடுத்ததாக தான் கடைசி வரை வைத்திருந்த வீட்டையும் விற்று அதில் போட்டார். பிறகு வீட்டையும் விற்று வந்த பணத்தை அதில் போட்டார். எல்லாப் பணத்தையும் இழந்தார். கடைசியில் உடல்நலம் காரணம் சொல்லி வங்கிப் பணியையும் ராஜினாமா செய்தார். வந்த ப்ராவிடண்ட் ஃபண்டு, கிராஜுவிட்டி எல்லாவற்றையும் கூட அதில் போட்டார். எல்லாம் போய் விட்டது. கடன்காரர்கள் தொல்லை தாளாமல் ஊரை விட்டு குடும்பத்துடன் ஓடிப்போனார். இன்று தூர ஏதோ ஒரு ஊரில் தனியார் நிறுவனம் ஒன்றில் ஒரு சிறிய வேலையில் இருக்கிறார். மிகவும் கஷ்டப்படுகிறார் என்று கேள்விப்பட்டேன். பாதுகாப்பான அரசாங்க உத்தியோகம், நல்ல சம்பளம், வீடு வாசல், வாகனம் என்றிருந்த ஒருவரை ஒரு பலவீனம் எப்படி அழித்து விட்டது பாருங்கள்.

அதே நேரத்தில் இன்னொரு நபரைப் பற்றியும் பார்ப்போம். அவர் எனக்கு உறவினரும் கூட. படிப்பு கிடையாது. பரம சாது. சூட்சுமமான விஷயங்கள் அவர் தலையில் ஏறாது. சமையல்காரருக்கு எடுபிடியாகப் போவார். மாவாட்டுவார், காய்கறி நறுக்குவார், சப்ளை செய்வார். பல வருடங்கள் இதையே செய்து வந்த அவர் தனியாக சமைக்கவெல்லாம் கற்றுக் கொள்ளவில்லை. அப்படிப்பட்ட மனிதர் தன் சம்பாத்தியம் அப்படியே வீட்டுக்குக் கொண்டு போய் மனைவியிடம் கொடுத்து விடுவார். அந்த சம்பாத்தியத்தில் ஒரே மகளை பட்டப்படிப்பு படிக்க வைத்து, கல்யாணம் செய்து கொடுத்து, தங்களுக்காக ஒரு சிறிய வீட்டையும் கட்டிக் கொண்டு ஓரளவு சேமிப்பையும் செய்து வைத்துக் கொண்டிருக்கிறார். அறுபது வயதைத் தாண்டியும் இன்னும் அந்த வேலைக்குப் போய்க் கொண்டிருக்கிறார். எந்தத் திறமையும் இல்லா விட்டாலும் உழைத்து சம்பாதித்து கௌரவமாக அவர் வாழ்கிறார்.

எத்தனையோ திறமைசாலிகள் தங்கள் திறமைகள் அனைத்தையும் ஒரு பலவீனத்திற்கு பலி கொடுத்து அழிந்து போகிறபோது பிரத்தியேக திறமைகள் எதுவும் இல்லாவிட்டாலும் தங்களை அழிக்கக் கூடிய பலவீனங்கள் இல்லாதவர்கள் உழைத்து ஒரு நல்ல வாழ்க்கை வாழ்வதையும் நம்மால் பார்க்க முடிகிறது.

மனிதனுக்கு பலம், பலவீனம் இரண்டும் இருப்பது இயல்பே. பலவீனமே இல்லாதவனாய் இருந்து விடுதல் சுலபமும் அல்ல. ஆனால் அந்த பலவீனம் அவன் வாழ்க்கையையே அழித்து விடும் அளவு வளர்ந்து விடக்கூடாது. அவனுடைய எல்லா நன்மையையும் அழித்து விடக் கூடிய தீமையாக மாறி விட அவன் அனுமதிக்கக் கூடாது. ஆரம்பத்தில் அந்த பலவீனம் பெரிய விஷயமல்ல என்றும் முழுக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்றும் ஒருவருக்குத் தோன்றக்கூடும். ஆனால் அதில் ஏமாந்து விடக்கூடாது. மூன்றடி மண் கேட்ட வாமனன் கடைசியில் மூவுலகும் போதவில்லை என்றது போல ஒரு சாதாரணமாகத் தோன்றும் தீய பழக்கமோ, பலவீனமோ விஸ்வரூபம் எடுக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

மேலும் படிப்போம்....

*- என்.கணேசன்*

# எதில் வேண்டும் ஒற்றுமை?



கோபி
ஒரு பேப்பர்

கடந்த ஞாயிறன்று வடமேற்கு லண்டனின் புறநகர்ப்பகுதியான ஹரோவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தாயக மக்களின் தற்போதைய நிலவரம் குறித்தும், அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தவதற்கான தேவைகள் பற்றியும் இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. சோமசுந்தரம் சேனாதிராசா (மாவை), திரு.சிவஞானம் சிறிதரன் ஆகியோர் உரையாற்றுவார்கள் என அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்தது. மண்டபம் நிறைந்திருந்தது என்பதனால் கூட்டமைப்பினரின் உரையை கேட்பதில், புலம்பெயர் சமூகத்தில், குறிப்பிட்டளவு ஆர்வமிருப்பது தெரிந்தது. அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் கூட்டமைப்பு பெற்றிருந்த வெற்றி அவர்கள் மீதான நம்பிக்கையை அதிகரித்திருக்கக் கூடும். அதே சமயம், இந்திய அரசாங்கத்தின் உறவைநாடும் புலம்பெயர் அமைப்புகளுக்கு, அவற்றை கூட்டமைப்புடன் இணைந்து பணிபுரியுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளமையும், இவ்வமைப்புகள் ஒரு கோட்டில் சந்திக்க முனைவதற்கான காரணமாக அமைந்திருக்கலாம்.

**அடிப்படைக் கோட்பாடுகளையே கேள்விக்கு உள்ளாக்குகிற ஆனந்த சங்கரியின் கட்சியுடனும், புளொட் அமைப்புடனும் கூட்டமைப்பு இணைந்து செயற்படுகிறது. இவ்வாறான இணைப்புகள் கூட்டமைப்பின் ஒற்றுமைக் கோட்பாட்டை கேள்விக்கு உள்ளாக்குகிறது.**

இக்கூட்டத்தில் நீண்ட உரையாற்றிய மேற்படி இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் புதிதாக எந்தவொரு தகவலையும் வழங்கவில்லை என்பது அங்கு வந்திருந்தவர்களுக்கு ஏமாற்றத்தையளித்தது. மக்கள் நன்கு அறிந்து வைத்துள்ள விடயங்களை உணர்ச்சி வசப்பட்டுக் கூறிக்கொண்டிருந்தார்கள். மக்கள்படும் இன்னல்களை விளக்கியவர்கள், அதனை தணிப்பதற்கான எந்தவொரு வழிமுறையையும் குறிப்பிடத் தவறிவிட்டார்கள். நீட்டி முழக்கியதாக அமைந்த உரைகளினால் கேள்வி நேரம் நேரம் பத்து நிமிடமாக குறைக்கப்பட்டிருந்தது. இது கேள்விகளைத் தவிர்ப்பதற்கான உத்தியாகவும் இருக்கலாம்.

கேள்விகளை கேட்பதற்கு ஊடகவியலாளருக்கு முன்னுரிமையளிக்கப்பட்டதால் முதலாவது கேள்வியை கேட்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. மாவை சேனாதிராசாவை நோக்கிய எனது கேள்வி இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களினது உரைகளிலும் அவர்கள் அடிக்கடி பாவித்த 'இனவழிப்பு, தமிழர்கள் ஒரு தனித்துமான தேசிய இனம், அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு' போன்ற சொற்கள் விடயத்தில் கூட்டமைப்பினர் எவ்வளவு தூரம் உண்மையாக உள்ளார்கள் என்பதனை வெளிபடுத்த வேண்டும் என்பதாக அமைந்திருந்தது. தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை போன்ற விடயங்களை அடிப்படைக் கொள்கைகளாக வரித்துக் கொண்டுள்ளதாகக் கூறிக்கொள்ளும் கூட்டமைப்பினர், அதனை தமிழ் மக்கள் கலந்து கொள்ளும் அரங்கங்களிலும், தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் வெளிப்படுத்தி வந்தாலும், வெளியரங்கில், குறிப்பாக இராஜதந்திரிகள் மட்டத்தில் இவ்விடயங்களில் உறுதித்தன்மையை காட்டுவதில்லை என்ற குற்றச்சாட்டினை நான் முன்வைத்தேன்.

அண்மையில் டெல்லியில் சோனியா காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சுதர்சனம் நாச்சியப்பனால் கூட்டப்பட்ட எட்டு ஈழத்தமிழ் அரசியற் கட்சிகள் கலந்து கொண்ட இரண்டு நாள் கூட்டத்தில் கூட்டமைப்பின் உறுதியற்ற நிலைப்பாடு வெளிப்பட்டது. இக்கூட்டத்தின் இறுதியில் வெளியிடப்படுவதற்கென தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வுக்கான அடிப்படைகள் பற்றிய அறிக்கையில் சுயநிர்ணய உரிமை பற்றிக்குறிப்பிடப்பட்டிருந்ததால், அதனை அங்கு கலந்து கெண்ட சில அரசியல்கட்சிகளின் பிரதிநிதிகள் எதிர்த்தமை பற்றி முன்னைய எனது கட்டுரையில் (ஒரு பேப்பர் 152) குறிப்பிட்டிருந்தேன். திரு. கஜேந்திரகுமாரும், திரு.சுமந்திரனும் இணைந்து தயாரித்த இவ்வறிக்கையில் ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றிக் குறிப்பிடப்பட்டதால் அதனைச் சிலர் எதிர்த்தபோது, அங்கு நடைபெற்ற வாதப்பிரதிவாதங்களில் மாவை சேனாதிராசா எதுவித கருத்தும் தெரிவிக்கவில்லை என்பதனையும் எனது கேள்வியில் குறிப்பிட்டிருந்தேன்.

**இந்திய அரசாங்கத்தின் உறவை நாடும் புலம்பெயர் அமைப்புகளுக்கு, அவற்றை கூட்டமைப்புடன் இணைந்து பணிபுரியுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளமையும், இவ்வமைப்புகள் ஒரு கோட்டில் சந்திக்க முனைவதற்கான காரணமாக அமைந்திருக்கலாம்.**

எனது குற்றச்சாட்டினை மறுதலித்த சேனாதிராசா, தாங்கள் தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகள் விடயத்தில் உறுதியாக இருப்பதாகவும், டெல்லிக்கூட்டத்தில் கலந்து கொண்ட சில பிரதிநிதிகள் எதிர்ப்புத் தெரிவித்தமையால் ஒற்றுமையை வெளிப்படுத்துவதற்காக தாம் பக்சார்பின்றி செயற்பட்டதாகக் குறிப்பிட்டார். ஆதலால் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி அறிக்கையை தனித்து தமிழ் கொங்கிரஸ் கட்சியுடன் இணைந்து வெளியிட விரும்பவில்லை எனவும் தெரிவித்தார். ஒரு அரசியல்வாதிக்குரிய பாணியில் விடயங்களைத் திரித்து, கேள்விக்கு பொருத்தமில்லாத விடயங்களைக் குறிப்பிட்டு அவர் தன்னை நியாயப்படுத்திக் கொண்டபோதிலும், சேனாதிராசாவுடன் இதுபற்றி விவாதித்துக் கொள்ள எனக்கு சந்தர்ப்பமிருக்கவில்லை.

டெல்லிக் கூட்டத்தில் கலந்து கொண்ட எட்டு தமிழ்க் கட்சிகளில் தமிழரசுக்கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈபிஆர்எல்எப்) சுரேஸ் அணி, தமீழீழ மக்கள் விடுதலைக்கழகம் (புளொட்), தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய ஐந்துகட்சிகள் தற்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன. ஈபிஆர்எல்எப் இலிருந்து பிரிந்து சென்ற நாபா அணி, புளொட் இலிருந்து பிரிந்து சென்ற ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈஎன்டிஎல்எப்) என்பவை தற்போது தீவிர இந்திய சார்பு அமைப்புகளாக உள்ள போதிலும், அடிப்படையில் தாயகம் - தேசியம் - தன்னாட்சியுரிமைக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டுள்தாகக் கூறிவருபவை. இந்நிலையில், இந்த எட்டுக்கட்சிகளில் தமிழ்க் கொங்கிரஸ் கட்சி மாத்திரமே, இக்கொள்கைகளின் அடிப்படையில் அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும் என்ற கருத்தில் உறுதியாக உள்ளமை இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாக அமைகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் என்பவை ஈழத்தமிழ்மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதனை ஏற்றுக் கொள்ளாவிடில் இவர்கள் எந்த அடிப்படையில் கூட்டமைப்புடன் இணைந்து கொண்டார்கள் என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுவது தவிர்க்க முடியாதது. இந்த இடத்தில்தான் சேனாதிராசா குறிப்பிட்ட ஒற்றுமை என்பது வெறும் ஏமாற்று உத்தியாகத் தெரிகிறது. இங்கு கூட்டமைப்பு குறிப்பிடும் ஒற்றுமை, தேர்தல் கூட்டுகளின் மூலம் தமது ஆசனங்களைத் தக்கவைப்பதில்தான் தங்கியிருகிறதே தவிர, அரசியல் அபிலாசைகள் விடயத்தில் இல்லை என்பதனை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

பாரிய இனவழிப்பை எதிர்நோக்கி நிற்கும் ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் பிளவுகளுக்கு குறைவில்லை எனபது மிகுந்த சோகமான நிலவரம். பிளவுகளை ஊக்குவிப்பதில் பாரிய சக்திகள் சிரத்தையாய் இருக்கின்றன என்பதும் அறியாத விடயமல்ல. இந்தப் பின்னணியில் ஒற்றுமை என்ற மாயத் தோற்றமானது வெளியாகத் தெரியும் பிளவுகளைவிட ஆபத்தானதாக அமைந்து விடுகிறது.

**கூட்டமைப்பு குறிப்பிடும் ஒற்றுமை, தேர்தல் கூட்டுகளின் மூலம் தமது ஆசனங்களைத் தக்கவைப்பதில்தான் தங்கியிருகிறதே தவிர, அரசியல் அபிலாசைகள் விடயத்தில் இல்லை என்பதனை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.**

தமிழ் அரசியல் வாதிகளின ஒற்றுமை முயற்சி பற்றி தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவராகவும், பினனர் அக்கட்சியிலிருந்து வெளியேறி தமிழர் சுயாட்சிக் கழகத்தின் தலைவராக இருந்தவருமான காலஞ்சென்ற திரு. வ. நவரத்தினம் அவர்கள் அவரது "The Fall and Rise of Tamil Nation" என்ற நூலில் கூறியவற்றை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும். 'ஒற்றுமை என்பது தமிழ் மக்களிடையே இலகுவாக சந்தைப்படுத்தக்கூடிய ஒரு சொல். ஒரு உயரிய இலட்சியத்தினை அடைவதற்கு ஒற்றுமை என்பது விரும்பத்தக்கதாகவும் அத்தியாவசியமானதாகவும் அமையும். ஆனால் இங்குள்ள சிக்கல் என்னவென்றால், அரசியல்வாதிகள் தமது நேர்மையற்ற எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கும், மக்களை இலகுவாக ஏமாற்றுவதற்கும், ஒற்றுமை என்ற சுலோகத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். எதற்காக ஒற்றுமை தேவைப்படுகிறது என மக்கள் அரிதாகவே கேள்வி எழுப்புகிறார்கள். தலைவர்கள் தமக்கிடையே பொதுவானதாகக் காணப்படும் தனிப்பட்ட குறிக்கோள்களை அடைவதற்காகவும் ஒற்றுமைப்படுகிறார்கள்.'

திரு. நவரத்தினம் குறிப்பிட்டுள்ளது போன்று ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அடைவதையிட்டு அரசியல் கட்சிகளும், குழுக்களும், தனிநபர்களும் ஒற்றுமைப்பட்டுச் செயற்படுபவர்களாக இருப்பின், அரசியற் கூட்டுகளும் அதனடிப்படையில் இருந்திருக்க வேண்டும். இணைவு முதலில் தமிழ் கொங்கிரஸ் கட்சிக்கும், தமிழரசுக்கட்சிக்கும் இடையில் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்விதம் இல்லாமல், அடிப்படைக் கோட்பாடுகளையே கேள்விக்கு உள்ளாக்குகிற ஆனந்தசங்கரியின் கட்சியுடனும், புளொட் அமைப்புடனும் கூட்டமைப்பு இணைந்து செயற்படுகிறது. இவ்வாறான இணைப்புகள் கூட்டமைப்பின் ஒற்றுமைக் கோட்பாட்டை கேள்விக்கு உள்ளாக்குகிறது.

ஒரு பேப்பர்
கிடைக்குமிடங்கள்

| | |
|---|---|
| **New Malden** | |
| Ayngaran | 020 8949 6734 |
| Megaa Superstore | 020 8336 0061 |
| Vaaniyan | 020 8605 0434 |
| Murugan Kovil | 020 8942 4475 |
| Vaishna Superfoods | 020 8399 4488 |
| Stoneleigh Amman | 020 8393 8147 |
| **Tooting** | |
| Yhaal House | 020 8767 8585 |
| Sharon | 020 8672 9353 |
| Amman Kovil | 020 8795 4258 |
| Niru Con.Store | 020 8672 3200 |
| Prime Foods | 020 8682 3777 |
| Ayngaran | 020 8540 1500 |
| Suvai Aruvi | 020 8543 6266 |
| Adchaya | 020 8540 8192 |
| Spice way | 020 8685 1122 |
| **Croydon** | |
| Best Foods | 020 8684 6269 |
| Haran Bros | 020 8686 2552 |
| Chennai dosa | 020 8665 9192 |
| Eelam Video | 020 8664 8351 |
| Spice Land | 020 8667 1700 |
| **Lewisham** | |
| Chandra | 020 8333 8680 |
| Eelam Shop | 020 8690 6545 |
| Katpagam | 020 8694 8810 |
| AJ Video | 020 8691 8888 |
| Sivan Kovil | 020 8318 9844 |
| KRS | 020 8297 9432 |
| **Eastham** | |
| Seelans | 020 8471 5733 |
| Sakthi Cash & Carry | 020 8394 4560 |
| Murugan Temple | 020 8478 8433 |
| Station Super Store | 020 8503 4711 |
| Best Food | 020 8552 9578 |
| Akilan Enterprise | 020 8548 0033 |
| **Ilford** | |
| Vinnayagar Kovil | 020 8911 8934 |
| Nathan | 020 8514 1744 |
| Angels | 020 8553 0490 |
| Sri Supermarket | |
| **Edmonton** | |
| New Kannan Stores | 020 8884 4979 |
| Sayas | 020 8805 9529 |
| Nagapoosani Temple | 020 8884 3333 |
| **Walthamstow** | |
| Vinayagar Kovil | 020 8527 3819 |
| Kumarans | 020 7609 1912 |
| Prabas | 020 8509 3322 |
| **Harrow** | |
| Tsk food & Wine | 020 7622 4258 |
| Eelavan | 020 8863 6160 |
| Prabhas | 020 8866 0977 |
| South Harrow F&W | 020 8423 6321 |
| Best foods | 020 8423 9933 |
| Sambal Express | 020 8799 7171 |
| **Wembley** | |
| Malar Super Market | 020 8795 5797 |
| Ganapathy C & C | 020 8795 4627 |
| Best foods | 020 8900 0100 |
| Vahizan Disc | 020 8795 0648 |
| **Ealing** | |
| Amman kovil | 020 8810 0835 |
| **Greenford** | |
| Ambiha | 020 8813 0967 |
| **South hall** | |
| Thamilini C & C | 020 8606 9900 |
| Duvaraka C & C | 020 8813 9126 |
| Ruby Food Store | 020 8813 9663 |
| Ruby restaurant | 020 8574 4087 |
| Luxmys C & C | 020 8571 4599 |
| Tamilan C & C | 020 8561 8174 |
| Lady Margret | 020 8571 4434 |

# Affordable IT Support services for Businesses and medium size Companies



உங்கள் கொம்பியூட்டர் பிரச்சனைகளை
நாங்கள் கவனித்துக் கொள்ள...
கவலைகளை மறந்து உங்கள்
வியாபாரத்தில் வெற்றியடையுங்கள்.

Do what you're best at = **Business**

We are best at = **IT support**

## Hassle free option

**FREE Consultation**

Call us on

**020 7043 4318**

IT SUPPORT

let us look after it.

# வடக்கலிருந்து தெற்குவரை நீட்சியடையும் இராணுவ நிர்வாகம்



வடக்கிலுள்ள காணிகளை உரிமை கோரும் விண்ணப்பப்படிவமொன்றை, காணி அபிவிருத்தி அமைச்சு வெளியிட்டுள்ளதாக தகவல்கள் வெளிவருகின்றன.

இடம்பெயர்ந்த மக்கள், இரண்டு மாத காலத்துள் அப்படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டுமென காலக்கெடுவும் விதிக்கப்பட்டுள்ளது.

இலவசமாக உறுதிச் சான்றிதழ் வழங்கப்படும் என்கிற வகையில், நில அபகரிப்பிற்கான பொறியொன்றினை விரிக்கிறது சிங்கள தேசம். இறுதிப் போரில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் நிலங்கள் உரிமை கோரப்படாமலேயே அரச தரப்பினால் சுவீகரிக்கப்படும் அபாயம் உருவாகியுள்ளது.

**எம்மிடம் எல்லாமே இருக்கிறது. வாருங்கள் முதலீடு செய்யவென சிங்கள தேசம் கூவி அழைத்தாலும், மேற்குலகில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளும் கடன் சுமைகளும், இந்தியா-சீனாவில் அதிகரிக்கும் பணவீக்கமும், வளர்ச்சி வீதத்தில் ஏற்படும் வீழ்ச்சியும், பெரிய முதலீடுகளை இலங்கைக்குள் கொண்டு வராது.**

அதேவேளை, உள்ளக இடப்பெயர்வுக்கு உள்ளானவர்களின் காணிகள் உட்பட, தமிழ்நாட்டில் தஞ்சம்புகுந்த ஏறத்தாள இரண்டு இலட்சம் தமிழ் மக்களின் காணிகளும் அரசால் அபகரிக்கப்படும் நிலை ஏற்படப்போகிறது.

ஏற்கனவெ பத்தாயிரம் ஏக்கர் நிலம், மூதூர் கிழக்குப்பகுதியில் அரசால் கபளீகரம் செய்யப்பட்டுள்ளது. மேலதிகமான திருமலை மாவட்டத்திலுள்ள 1000 ஏக்கர் காணிகளை தனியாருக்கு விற்பனை செய்து, அதிலிருந்து பெறப்படும் நிதியினை, திருமலை துறைமுக அபிவிருத்திக்கு செலவிடப் போவதாக அரசு கூறுகிறது.

ஆனால் விற்பனையிலிருந்து பெறப்படும் பணம், அம்பாந்தோட்டை துறைமுக விரிவாக்கத்திற்கு ஒதுக்கப்பட்டால், யாராலும் அதனை தடுத்திட முடியாது.

நிதியமைச்சின் 2011 ஆண்டிற்கான அரையாண்டு அறிக்கையில், முதல் 5 மாதங்களில் மட்டும் 410.7 பில்லியன் ரூபாவை கடனாகப் பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து, 231.3 பில்லியன் ரூபாவை, ஏற்கனவே பெற்ற கடனைச் செலுத்த பயன்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்கு சீனாவிடமிருந்து 307 மில்லியன் டொலர்களை கடனாகப் பெற்று, முதல்கட்ட பணி பூர்த்தியாகி 10 மாதங்கள் கடந்தாலும், கப்பல்கள் இன்னமும் அங்கு வரவில்லை.

துறைமுக வாயிலில் இடைமறித்து நிற்கும் பாரிய கல்லொன்றை உடைக்க, 10.3 மில்லியன் டொலர்களை கடனாகத் தருமாறு சீனாவிடம் கெஞ்சிக் கொண்டிருக்கிறது சிங்கள தேசம்.

தரம் குறைந்த பெற்றோல் இறக்குமதியால் 20 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டதோடு, மகிந்தரின் இன்னுமொரு வெள்ளை யானையான மிஹின்லங்கா விமான போக்குவரத்து நிறுவனம், 73 கோடி ரூபாவை விழுங்கி விட்டது.

அத்தோட குத்தகைக்கு வாங்கப்பட்ட விமானங்களிற்கான வாடகையை செலுத்த முடியாத கையறு நிலையில் அரசு இருக்கிறது.

இவை தவிர சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெறப்பட்ட கடன்களுக்கான தவணைப் பணத்தை கட்டுவதற்கும், அதிகூடிய வட்டி வீதத்தில் பெறப்பட்ட சீனக் கடன்களை மீளச் செலுத்துவதற்கும், அரசிறை முறிகளை விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளது மகிந்த இராஜதானி

நீண்டகால முறிகளுக்குச் செலுத்த வேண்டிய வட்டி வீதமும் அதிகரிக்கிறது.

ஆகவே கடன் வாங்கிக் கடன் அடைக்கும் வழிமுறைகள் பற்றி, தனது முழுநேரத்தையும் மத்திய வங்கியின் ஆளுனர் அஜித் நிவாட் கப்ரால் செலவிட்டுக் கொண்டிருக்கிறார் போலுள்ளது.

## அரசியல் பார்வை

**இதயச்சந்திரன்**

குடிமகன் ஒருவரின் தலைக்குரிய வருமானத்தை 4000 டொலர்களாக, இந்த வருட இறுதிக்குள் உயர்த்துவேன் என வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு தம்பட்டமடித்த மகிந்த இராஜபக்சவின், காணிகளை விற்றுக் காசாக்கும் சூத்திரத்தை நிதி நிறுவனங்கள் புரிந்து கொள்ளும்.

**தமிழர்கள் பூர்வீகமான வாழ்ந்த சம்பூர் பிரதேசத்திலிருந்து, அவர்களை விரட்டியடித்து, அங்கு அனல் மின் நிலையமொன்றினை அமைக்கும் ஒப்பந்தத்தில், இந்தியாவுடன் கடந்த 6ஆம் திகதியன்று கைச்சாத்திட்டுள்ளது இலங்கை அரசு.**

இந்திய அரசிற்குச் சொந்தமான தேசிய அனல் மின் கம்பனி (NTPC) நிறுவனத் தலைவர் அருப்ரோயும், இலங்கை மின்சார சபையின் தலைவர் விமலரத்ன அபேவிக்ரமும் இந்த 500 மில்லியன் டொலர் உடன்படிக்கையில் ஒப்பமிட்டுள்ளனர்.

மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் பணி அடுத்த வருடம் ஆரம்பமாகி, 2017 ஆண்டளவில் முடிவடையும் எனக் கூறப்படுகிறது.

முதல்கட்டமாக 250 மெகாவோட் மின் உற்பத்திக்கான நிலையம் நிர்மாணிக்கப்படுகிறது.

சமபங்கு என்கிற அடிப்படையில் உருவான உடன்படிக்கையில், ஆரம்பகட்ட முதலீடு இந்தியாவிலிருந்து பெறப்படும் போல் தெரிகிறது.

இரண்டாம் கட்ட 250 மெகாவட் மின் உற்பத்தி நிலையத்திற்கான நிதியை இலங்கை அரசு வழங்காவிட்டால் அதன் முழுமையான பங்கு இந்தியாவிற்கே செல்லும் வாய்ப்புண்டு.

ஆனாலும் 300 மெகாவட் மின் உற்பத்தி செய்யும் நுரைச்சோலை நிலையத்திற்கு, கடனுதவி புரிந்த சீனா, சம்பூரில் உள் நுழையுமாவென்று தெரியவில்லை.

இவை தவிர உற்பத்தியாகும் மின்சாரத்தினைப் பயன்படுத்த, தொழிற்சாலைகள் நிறுவப்பட வேண்டும்.

ஆகவே வெளிநாட்ட நேரடி முதலீடுகள் இலங்கையை நோக்கி நகராவிட்டால், உள்ளூர் தேவைகளுக்கே இந்த மின்சக்தி பயன்படுத்தப்படும்.

எம்மிடம் எல்லாமே இருக்கிறது. வாருங்கள் முதலீடு செய்யவென சிங்கள தேசம் கூவி அழைத்தாலும், மேற்குலகில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளும் கடன் சுமைகளும், இந்தியா-சீனாவில் அதிகரிக்கும் பணவீக்கமும், வளர்ச்சி வீதத்தில் ஏற்படும் வீழ்ச்சியும், பெரிய முதலீடுகளை இலங்கைக்குள் கொண்டு வராது.

வேலையில்லாத் திண்டாட்டம், உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு போன்றவை பாரிய வாழ்வாதார நெருக்கடிகளை மக்கள் மத்தியில் உருவாக்கும் போது, போர் வெற்றிப் பரப்புரை மற்றும் அனல் மின்நிலைய நிர்மாணிப்புக்கள் போன்றவை குறித்து அக்கறையற்று இருப்பார்கள் பொது மக்கள்.

பல நாடுகள் தமது உணவுப் பண்டங்களின் ஏற்றுமதியை மட்டுப்படுத்துவதால், உணவு தானியங்களின் விலை உலக சந்தையில் அதிகரிப்பதாக கவலையடைகின்றார் உலக வங்கியின் தலைவர்.

ஆகவே மக்களின் அன்றாட அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத ஆட்சியாளர்கள் மீது, மக்கள் விசனமடைவதை தடுக்க முடியாத நிலையொன்று இனி உருவாகும்.

**இவை தவிர சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெறப்பட்ட கடன்களுக்கான தவணைப் பணத்தை கட்டுவதற்கும், அதிகூடிய வட்டி வீதத்தில் பெறப்பட்ட சீனக் கடன்களை மீளச்செலுத்துவதற்கும், அரசிறை முறிகளை விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளது மகிந்த இராஜதானி**

நிதிச் சிக்கன நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபடும் கிரேக்கம், அயர்லாந்து போர்த்துக்கல் மற்றும் ஸ்பெயின் நாடுகள் போன்று , இலங்கையிலும் அவ்வாறான பொதுச் செலவினத்தில் வெட்டினைப் பிரயோகிக்க அரசு முற்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்த ஆரம்பித்துள்ளனர்.

ஆகவே, வட கிழக்கில் ஆரம்பமாகியுள்ள இராணுவ நிர்வாக மயமாக்கும் நடவடிக்கைகள், இனி தென்னிலங்கையை நோக்கி நகர்ந்து, ஒட்டு மொத்த மக்கள் மீதும் ஒடுக்குமுறையை கட்டவிழ்த்து விடப் போகிறது

BAR - RESTAURANT - BANQUETING
FUSHIA
HAPPY HOUR!
5.00 PM TO 7.00 PM
40% DISCOUNT
ON ALL FOOD AND DRINKS
Orders must be taken before 7.00 pm
Monday to Sunday
3 Brighton Road, South Croydon, CR2 6EA
www.fushiauk.com
Tel: 020 8680 8833

கடை விற்பனைக்கு உண்டு
North London இல் Off Licence Grocery Shop விற்பனைக்குள்ளது.
மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.
FOR SALE
North London
Kugan: 020 8346 1003

# Mouse ஐத் தொடுவான்னேன் கவலைப் படுவானேன்



சுகி
(ஒருபேப்பருக்காக)

நவீன தொடர்பாடல், உலக சுற்றளவை உள்ளங்கைக்குள் அடக்குவதுபோல வந்து விட்டது. அவுஸ்ரேலியாவில் உள்ள பேத்திக்கு குழந்தை பிறந்து 5 நிமிடங்களில் பின்லாந்தில் உள்ள பாட்டிக்கு, கைத்தொலைபேசியில் படம் எடுத்து முகநூலில் (Face Book) இல் தரவேற்றம் செய்து அனுப்புவதோடு, அவவோடு கதைக்கக்கூடியதாகவும் உள்ளது.

நாம் இல்லா நாடு இல்லை, ஆனாலும் நமக்கென ஒருநாடு இல்லை என்று (பரதேசிகள் போல) பரந்திருக்கும் நாம் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதற்கும், எமது ஒன்றுவிட்ட சகோதரத்தின் பிள்ளைகளையும், அவர்களின் விருப்புவெறுப்புக்களையும், எமது பிள்ளைகள் கூட அறிந்து கொள்வதற்கும், முகம் பார்த்து உறவாடுவற்கும் நவீன தொடர்பாடல் உதவுகிறது. எல்லாம் நன்றாக இருந்தாலும் ஆடத் தெரியாதவன் மேடை சரியில்லை என்ற மாதிரி இதன் உபயோகத்தை பிரயோசனமாகப் பாவிக்காது. சுடுதண்ணிக்குள் கை வைத்தவர் போல அவதிப்படும் குடும்பங்களும் உண்டு.

முகநூலில் தோட்டம் செய்வது, பிராணிகள் வளர்ப்பது என்ற விளையாட்டில் தம்மை மறந்து மணித்தியாலக் கணக்கில் ஈடுபடும், பெண்கள் அதிகம். வீட்டில் உள்ள தோட்டத்தைப்பராமரிப்பதை விட முகநூலில் உள்ள தோட்டத்தை பராமரிப்பதற்கும், தண்ணிவிடுவதற்கும், காய்கறி ஆய்வதிலும், மருந்து அடிப்பதிலும் அதிகமான நேரத்தை செலவழிப்பதோடு, தோட்டவேலைக்கு உதவிசெய்வதற்கு என மற்ற முகநூல் நண்பர்களுக்கும் அழைப்புவிடுகிறார்கள். புலம்பெயர் நாடுகளில் இப்படி நேரத்தை செலவழிப்பது நாகரீகம் என்று நினைக்கிறார்களோ என்னவோ.

இதைவிட சிலர் தமது பெயரில் முகநூல் ஒன்றைத்திறந்து வைத்திருப்பதோடு, தொழில்நுட்ப அறிவு இல்லாத தனது மனைவி அல்லது கணவன் பெயரிலும் முகநூல் ஒன்றைத் திறந்து, அதையும் தாமே நடத்துகிறார்கள். குடும்பத்தில் ஏன் வீண்பிரச்சனை என்று மற்றவர்பேசாமல் இருந்தாலும், உண்மையில் இது ஒரு அடையாளத்திருட்டுக்குச் சமமானது. ஏனெனில் இதில் அவர் கருத்துச்சொல்லும் போதும், விருப்பம் (like) போடும் போதும் மற்றவர்கள் அவர்களது மனைவியோ அல்லது கணவனோ போடுவதாகவே நினைப்பார்கள். இது சில குடும்பங்களில் தேவையில்லாத பிரச்சனைகளுக்கு காரணியாகுகிறது.

அத்தோடு இந்த முகநூல் மூலமாக பழைய நண்பர்களைக் கண்டுபிடித்து அவர்களோடு உரையாடுவது ஒரு நல்ல விடையமாக இருந்தாலும், சில இடங்களில் பழைய பள்ளிக்கூட காதலையும், முன்பு சொல்லாமல் விட்ட காதலையும் இப்போ சொல்லி அத்தோடு விடால் 40, 50 வயதில் அதற்கு பாட்டு போட்டு, அதற்கு மற்றவர் like போட்டு 16 வயது போல சிலர் அடிக்கும் லூட்டிகள் தாங்கமுடியாமல் தள்ளாடும் குடும்பங்களும் உள்ளன.

உலகஅளவில் இந்த முகநூல் மூலம் எத்தனையோ பிரயோசமான விடயங்களையும், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, எழுச்சிகள், வெகுசன விழிப்பு என்று செய்யக் கூடியதாக இருந்தபோதிலும், எம்மவர் சிலர் அதை உபயோகிக்கும் விதத்தில் இன்னும் சிலர் அதை வெறுக்கும் அளவிற்கு நடந்து கொள்கிறார்கள். ஒரு மனோதத்துவ நிபுணர் சொன்னார் அது அவர்களுக்குள்ளே இருக்கும் மனம் விட்டு பழக ஆட்கள் இல்லாத தனிமையும், மற்றவர்களின் கவனத்தை தன்மேல் ஈர்பது, நடைமுறை வாழ்க்கையில் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சனையில் இருந்து தப்பிக்கொள்ளும் மனோநிலை, தன்னிரக்கம், வேலைபளுவில் இருந்து கொஞ்சநேரம் மனதை இலகுவாக வைத்திருந்தல் போன்றவற்றுக்காக இப்படியான சிக்கலில் மாட்டிக்கொள்கிறார்கள்.

**இதில் அவர் கருத்துச்சொல்லும் போதும், விருப்பம் (like) போடும் போதும் மற்றவர்கள் அவர்களது மனைவியோ அல்லது கணவனோ போடுவதாகவே நினைப்பார்கள். இது சில குடும்பங்களில் தேவையில்லாத பிரச்சனைகளுக்கு காரணியாகுகிறது.**

அத்தோடு முகநூலில் ஒருவரின் விருப்பு வெறுப்புக்களையும், நடை உடை பாவனைகளையும், கருத்துக்களையும் அறியக்கூடிய வாய்ப்பு அதிகம் உள்ளதால், தங்களின் விருப்பு வெறுப்புக்களோடு ஒத்துவரும் ஒருவர்மேல் வரும் அதிக ஈர்ப்பினால் அவர்களை virtual லாக தொடர்ந்து எல்லாவற்றிற்கும், "comment", "like" போட்டு, அவர்களோடு chat இல் வேறு, எல்லாத்தனிப்பட்ட குடும்பப்பிரச்சனைகளையும் பகிர்ந்து கொள்கின்றனர். பிறகு காலம் செல்ல, இருபக்கமும் இப்படி கருத்து பகிர்வு இல்லாது, அது ஒருபக்கமாக இருக்கும் போது கவலை கொள்ளல். இருபக்கமும் இருக்கும் போது அதை இரகசியமாக வைத்திருப்பதா? அல்லது மற்றவர்களுக்கும் சொல்வதா என்ற தயக்கம், அத்தோடு இப்படியான virtual உறவை, நடைமுறை உறவோடு என்னென்று தொடர்புபடுத்துவது என்று குழப்பம், இத்தகைய உறவுச்சிக்கலில் முக்கியமாக இளையவர்களைவிட மத்திய வயதினர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

முன்பு அவளைத் தொடுவானேன், கவலைப் படுவானேன் என்று ஒரு வாய்மொழி சொல்பதம் உண்டு. இப்போ mouse ஐத் தொடுவான்னேன், கவலைப்படுவானேன் என்று சொல்லும் அளவிற்கு கவலைப்படும். இருபாலாருக்கும் பொருந்தும்.

## அரசியல் கார்ட்டூன்




# குட்பாய் லண்டன்...

## கலை மா(மா)மணியின் பேட்டி



நாங்கள் இன்று பேட்டி காண இருப்பது குட்பாய் லண்டன் நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் கலைமாமணி, கலைக்குயில் கலைக்காக்கா கலைக்கோழி கலைக்குருவி ஸ்நேக் பாபு அவர்களை புலம் பெயர்ந்த மண்ணில் நீங்கள் செய்து வரும் கலைச்சேவைக்கு, முதலில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு பேட்டிக்குள் செல்வோம்.

◆ *வணக்கம் க..........*

முதலாவதாக உங்களிடம் ஒரு கேள்வி ஸ்நேக்பாபு என்பது உங்கள் சொந்தப்பெயரா? அல்லது வாடைகைக்கு வாங்கிய பெயரா? அந்தப் பெயர் வரக்காரணம் என்ன?

பதில். சொந்தப்பெயர்தான். அந்தப்பெயரை நான் பிறந்ததுமே எனக்கு நானே வைத்த பெயர். காரணம் மனிதன் கமறாவை கண்டு பிடித்து படம் எடுப்பதற்கு முன்னரேயே பாம்பு படம் எடுக்கத்தொடங்கிவிட்டது. அதைப்பார்த்துத்தான் மனிதன் கமறாவை கண்டு பிடித்து படம் எடுத்தான் பின்னர் வீடியோ கமறாவை கண்டுபிடித்து சினிமாப்படம் எடுத்து கலையை வளர்க்கத்தொடங்கினான். எனவேதான் கலை மீதும் கமறா மீதும் உள்ள பற்றினால், அதனை முதன் முதலில் மனிதனிற்கு அறிமுகப் படுத்திய பாம்பை என்னுடைய பெயரில் இணைத்து ஸ்னேக் பாபுவாகி விட்டேன்.

◆ *கேள்வி. புலம்பெயர் மண்ணில் எமது மக்கள் கலை கலாச்சாரங்களை தொடர்ந்து பேணி வருவதுக்கு நீங்கள் பெரும் பங்காற்றி வருகிறீர்கள் என்ற வகையில் இப்படியான பெரும் நிகழ்ச்சிகளை மிகுந்த பொருட்செலவின் மத்தியில் நடாத்த உங்களுக்கு எப்படி துணிவு வந்தது?*

பதில்: எல்லாம் எமது புலன்பெயர்த்த மக்களின் கலைத்தாகமும் ஆதரவும்தான். எமது மக்கள் இங்கு பொழுது போக்குகள் எதுவும் இன்றி வீட்டில சும்மாதான் சுருண்டுபோய் இருக்கினம். இந்தியாவில் இருந்து நடிக நடிகைமார் வருகினம் எண்டா விழுந்தடிச்சுக் கொண்டு வருங்கள்.

◆ *கேள்வி: உங்கள் நிகழ்ச்சி பற்றி...*

பதில்: இந்த முறை நாங்கள் பெரியகோல் எடுத்து செய்யிறம். நடிக நடிகைமார் டான்ஸ் ஆடுவினம் பாட்டு பாடுவினம். மிளைபிங்கிஸ் அடிப்பினம் மக்களே நீங்கள் எல்லாம் வந்து கை தட்டி விசிலடிக்க வேணும்.

◆ *கேள்வி: இந்நிகழ்வில் பெரிய சினிமா பட்டாளமே பங்கேற்பது பற்றி...*

பதில்: நான் நினைக்கிறன் நாங்க அடிச்ச நோட்டிச பார்த்து கேக்கிறீங்கள் எண்டு. அதில எல்லாரின்ட படமும் தான் இருக்கு. அதுக்காக எல்லா குப்பாலையும் இழுத்துக் கொண்டு வர நாங்கள் என்ன மாங்கா மடையங்களே. கனக்க பேரின்ட படத்தை போட்டாத்தான் டிக்கட் விக்கும். இதில ஒரு சின்ன பிரச்சனை இருக்கு. ஒண்டு ரெண்டு விசயம் தெரிஞ்சவங்கள் கிரடிட் கார்டில புக் பண்ணுவாங்கள். நிகழ்ச்சியையும் பார்த்திட்டு கிரடிட் கார்ட் கொம்பனிக்கு போன் பண்ணி எல்லாரும் வரேல்லை எண்டு சொல்லி ரீபண்ட் கேப்பாங்கள். இதால கொஞ்ச நட்டம் வரும்.

◆ *கேள்வி: இந்த நிகழ்ச்சி மூலம் கிடைக்கிற பணத்தை வைத்து சமூக சேவையும் செய்யப்போறதாய் அறிஞ்சம் அது பற்றி...*

பதில்: இதில வாற காசில யாழ்ப்பாண கோவிலுக்கு வெள்ளை அடிக்கிறம் எண்டும் போராலை பாதிக்கப் பட்டவைக்கு உதவுறம் போட்டிருப்பமே. இது நாங்கள் மட்டுமே போடுறம். நிகழ்ச்சியள் செய்யிற எல்லாரும்தான் போடுறாங்கள். இதல்லாம் வியாபார தந்திரங்கள்

◆ *கேள்வி: கலைச்சேவை எண்டு சொன்னீங்கள் இப்ப வியாபாரம் என்டுறீங்கள்....*

பதில்: தம்பி.. இது கலையோடை சேர்ந்த வியாபாரம். கூட்டி வாற நடிகைமாரை வச்சு நாங்க என்ன பண்ணுறம் எண்டு உமக்கு தெரியுமோ? அவையள் நிகழ்சி நடத்துற பத்து நாளைக்கு முதலே இங்க வருகினம். அவைக்கு எவ்வளவு டிமாண்ட் எண்டு தெரியுமோ? எத்தனை பெட்ரோல் செட் காரன்கள் பெட்ரோல் அடிக்க கியுவில நிக்கிற மாதிரி நிக்கிறாங்கள் எண்டு தெரியுமே? இப்ப சிரிப்பு நடிகைக்கு என்ன ரேட் போகுது எண்டாவது தெரியுமோ? இதுகளை எல்லாம் எங்கட பாஷையில கலைச் சேவை எண்டுதான் சொல்லுறது. உண்மையை சொன்னா காறித்து துப்புவாங்கள்.

◆ *கேள்வி: சரி எங்களுக்குத்தான் உதைப் பற்றி தெரியாது... உங்கட மனிசிக்காவது தெரியுமா?*

பதில். அது ஒரு பேய்! ... நடிகர் மாரை பார்க்க ஆவெண்டு போய்நிக்கும். போனகட ஒரு பார்ட்டீல ஒரின்ட மனுசி மனாந்து பிடிச்சிட்டுது. அவக்கு நிகழ்ச்சி முடிய 'BMW X5' வேண்டி தரலாம் எண்டு சொல்லி இருக்கிறம். இப்ப அமத்திக் கொண்டு இருக்கிறா. இருந்துபாருங்கோ நிகழ்ச்சி முடிய எப்படியும் வீட்டை ரீமோட்கேஜ் பண்ணின எங்கட பார்ட்னரில ரெண்டு பேராவது தூக்கில தொங்குவினம். உதெல்லாம் வேண்டிக் குடுக்க எங்க காசு மிஞ்ச போகுது? இந்தியாவில இருந்து வாறவங்களே எல்லாத்தையும் சுருட்டிக் கொண்டு போடுவாங்கள். 5 ஸ்டார் கோட்டலில தான் அவையள் நிப்பினமாம். தம்பி நான் என்ரை வாழ்க்கையில் 5 ஸ்டார் கோட்டல் கார் பார்க்குக்கு கூட போனதில்ல.

◆ *கேள்வி: காசு மிஞ்சாது எண்டுறீங்கள் அப்ப நீங்கள் என்ன மாதிரி.*

பதில்: தம்பி... நான் சைட்டில வேற பிளான் வைச்சிருக்கிறன். எண்ட பார்ட்னருகளுக்கு கூட உது தெரியாது. இந்த நிகழ்ச்சிக்கு மேளம் அடிக்க விளக்கு பிடிக்க எண்டு சொல்லி 20 பேரை இறக்கிறன். பாதி எங்கடையள் பாதி இந்தியன் தலைக்கு 10 லட்சம். ஒரு சொலிசிட்டர் என்னோட கொன்றாட்க் வேற போட்டிட்டார். அவையள் இனி முள்ளிவாய்க்காலில ஆர்மி சுட்டான்... ஓடி வந்தன் எண்டு கதை எழுதுவினம். அது அவையின்ட பிரச்சனை. நீர் உம்மட கேள்விய கேளும்.

**இதில வாற காசில யாழ்ப்பாண கோவிலுக்கு வெள்ளை அடிக்கிறம் எண்டும் போராலை பாதிக்கப் பட்டவைக்கு உதவுறம் போட்டிருப்பமே. இது நாங்கள் மட்டுமே போடுறம். நிகழ்ச்சியள் செய்யிற எல்லாரும்தான் போடுறாங்கள். இதல்லாம் வியாபார தந்திரங்கள்.**

◆ *கேள்வி: இப்ப இந்த நாடு இருக்கிற நிலைமையில நிகழ்ச்சி பார்க்க சனம் வருமோ?*

பதில்: தம்பி.. வேலைக்குப் போய் கஸ்டப்பட்டு உழைக்கிறவன் எல்லாம் உதில மினக்கெட மாட்டார்கள்.

- (தொடர்ச்சி 22ம் பக்கம்)

# பேய்களை ஏவும் பேய்கள்

வ.கணேஸ்

*(ஒருபேப்பருக்காக)*

அண்மைக்காலமாக இலங்கைத்தீவில் தமிழ் மக்களின் தாய் நிலங்களான வடக்கு கிழக்கு பகுதிகளில் மர்ம மனிதர்கள் என்ற பெயரில் இராணுவத்திலுள்ளவர்களை ஏவிவிட்டு மக்களை பீதிக்குள் உறைய வைக்கும் விதத்தில் படு பயங்கரமாக இரவு வேளைகளில் வீடுகளுக்குள் புகுந்தும் தனித்து வாழும் பெண்களை சீண்டியும் மறைவிடங்களில் நின்று மக்களை பயமுறுத்திவிட்டு ஓடுவதுமாக பேய்கள் என்ற பெயரில் இராணுவப் பேய்களை ஏவி விட்டுள்ளது சிங்கள அரசு.

இது உண்மையிலேயே தமிழ் மக்களை குறிவைத்து நடாத்துப்படுவதாகும். ஆனாலும் இவை தமிழ் மக்களுக் கெதிரான இன்னுமொரு சிங்கள அரசின் கெடுபிடி என்று எளிதில் யாரும் எண்ணிவிடக்கூடாது என்பதற்காகவே சில முஸ்லிம் பகுதிகளிலும் இந்த பேய்கள் உலாவந்தன. ஆனாலும் சிலாபம் பகுதிகளிலும் இந்த பேய்கள் உலாவு கின்றன. ஆனாலும் சிலாபம் பகுதியில் முஸ்லிம்கள் திரண்டெழுந்ததில் ஒரு காவல்துறை அதிகாரியை பேயாக்கி விட்டதிலிருந்து அவர்கள் மேலான பேயாட்டமும் அடங்கிவிட்டது.

**குறிப்பாக கல்வித்துறையில் இராணுவம் விவசாயத்துறையில் இராணுவம் கடற் தொழிலில் இராணுவம் உள்கட்டுமானத் துறையில் இராணுவம் இப்படி எந்த அமைச்சை எடுத்துக் கொண்டாலும் இராணுவ தலையீடு இல்லாமலில்லை. இதை எதிர்த்து நிற்கும் அளவிற்கும எந்த அமைச்சர்களுக்கும் திரணியில்லை.**

ஆக இலங்கைத்தீவில் வாழும் அத்தனை மக்களுக்கும் தெரியும் கோட்டபாயா என்ற கொடுரவாதியால் தமிழ் மக்களை மென்மேலும் கொத்தடிமைகள் ஆக்குவதற்காக அத்திவாரம் போடப்படுகின்றது என்று. இலங்கையைப் பொறுத்தவரை இந்திய சீன ஆதரவோடு மியன்மார் எப்படி இராணுவக்கோலம் பூண்டதோ அதே இராணுவ ஆட்சியை இலங்கையும் எட்டிவிட்டதே என்பதுதான் உண்மை. பெயருக்கு மட்டும்தான் ஜனநாயகம் இலங்கையில் இருக்கிறதே தவிர இராணுவத்தலையீடு இல்லாத நிர்வாகத்துறை கிடையாது.

குறிப்பாக கல்வித்துறையில் இராணுவம் விவசாயத் துறையில் இராணுவம் கடற்தொழிலில் இராணுவம் உள்கட்டுமானத்துறையில் இராணுவம் இப்படி எந்த அமைச்சை எடுத்துக் கொண்டாலும் இராணுவ தலையீடு இல்லாமலில்லை. இதை எதிர்த்து நிற்கும் அளவிற்கும எந்த அமைச்சர்களுக்கும் திரணியில்லை.

மகிந்த குடும்பங்களும் அவர்களது நெருங்கிய உறவுக ளும் உட்பட இவர்களால் ஒரு பாரிய திட்டமிடல்களுடன் தான் இலங்கையை ஆளுகிறார்கள். இனியும் ஆளவேண்டு மென்றும் நினைக்கிறார்கள். அதாவது இனிவரும் எந்தக் காலத்திலும் தங்கள் குடும்ப வாரிசுகளால்தான் இலங்கை யை ஆளப்படவேண்டுமென்றும் ராஜபக்ச பரம்பரை அற்ற எவரும் ஆளக்கூடாது என்பதிலும் மிகவும் கவனிப்பான கணிப்பிலும் அவர்களால் காய்கள் நகர்த்தப்படுகின்றன. சட்டங்களும் அதற்கேற்றால்போல்தான் மாற்றியும் அமைக் கப்படுகின்றன. அத்தோடு வலுவான எதிர்க்கட்சிகளும் இல்லாமல் உடைக்கப்படுகின்றன.

இவைகள் தவிரவும் தமிழ் மக்களுக்கு என்னவெல்லாம் செய்தால் பெரும்பான்மை சிங்களம் சந்தோசப்பட்டு குதூகலிக்குமோ அவற்றையெல்லாம் இவர்கள் தமிழர்க ளுக்கு எதிராக செய்கிறார்கள். இன்னும் பல பத்து வருடங் களுக்கு இதைத்தான் செய்யவும் போகின்றார்கள். ஆக ஜனநாயகம் செத்துவிட்ட நாடொன்றில் அதைப்பேசிப் பேசியே அனைத்துலகங்களையும் ஏமாற்றும் மகிந்த அரசு நாட்டில் ஜனநாயக முறைமையினால் தனதரசு தோற்றுப் போகும் நிலையொன்று வருமாயின் இலங்கைத்தீவு ஒரு மியன்மாராக மாறும் என்பதில் ஐயமில்லை.

பர்மா என்று பலராலும் அறியப்பட்ட நாடு பல இனக் கொலைகளையும் காட்டுமிராண்டித்தனங்களுக்கும் பெயர்போன நாடாகப் போற்றப்பட்ட பின்பும் இன்றும் ஆங்காங்கே அதே கெடுபிடிகள் தொடரும் நிலையிலும் கூட இன்று அந்த நாட்டின் தலைநகரான மியான்மார் என்ற பெயரை முழு நாட்டின் பெயராக உச்சரித்து வருகிறார்கள். காயம்பட்ட நாட்டின் பெயரையே களைய முனைகிறார்கள். ஆக இலங்கையின் பெயரும் ஒருகாலத் தில் ஹம்பாந்தோட்ட என்று மாறினாலும் ஆச்சரியப்படு வதற்கில்லை.

மகிந்த அரசிற்கும் அவரது சகோதரர்களுக்கும் தமிழர் மேல் இன வெறித்தன்மையையும் தாண்டிய படுகோபம் என்னவெனில் இறுதிச் சண்டைகளில் தமிழர்களுக்கு எப்படியெல்லாம் இன்னல்கள் இளைக்கப்பட்டது என்ற முழுவிபரம் இவர்களுக்குத்தான் தெரியும் குறிப்பாக வட்டுவாகல் கரையில் ஒதுங்கிய மக்களுக்கு அடுத்தடுத்த கரைகளிலும் நடுப்பகுதிகளிலும் கூட என்ன நடக்கின்றது எத்தனை பேர் இறக்கிறார்கள் என்ற விபரங்கள் தெரிந்திருக்கவில்லை. அதேபோல் ஒரு இராணுவப் படையணி எந்தெந்த வகை ஆயுதங் களைப் பயன்படுத்துகின்றது எத்தனை பேரைக் கொல்கி றார்கள் எத்தனை பேரைக் கற்பழிக்கிறார்கள் போன்ற எந்த விபரங்கள் அடுத்த படையணிகளுக்கு தெரிந்திருக் கவில்லை. ஆனால் மகிந்த கோட்டா போன்றவர்களுக்கு முழு விபரங்களும் தெரிந்திருக்கும்.

அப்படி இருக்கையில் ஒரு மனித இனத்துக்கு செய்யத் தகாத கொடுமைகளையெல்லாம் இந்த தமிழனுக்கு செய்த பின்பும் கூட இவர்கள் நினைக்கவில்லை. தமிழன் இனியும் தன்னாட்சி தாயகம் உரிமை என்றெல்லாம் உறுமுவானெ ன்று. மாறாக தமிழர்கள் மீண்டெழுந்து தேர்தலில் தமது தேசிய உணர்வை வெளிப்படுத்தியதோடு மேலும் ஒருபடி மேல்சென்று பேச்சுவார்த்தைகளுக்கு காலக்கெடு வைக்கும் அளவுக்கு தமிழர்கள் மீண்டுவிட்டார்களென்ற கடுப்பு இவர்களுக்கு.

எனவேதான் தொடர்ந்தும் தமிழர்களை அடக்கி பயப்பீதிக்குள் தள்ளுவதோடு சிறிய நாடொன்றுக்குள் இருக்கின்ற பெரும் தொகை இராணுவத்தையும் தமிழர் பகுதிகளில் முகாமிட வைத்தும் அவர்களது குடும்பங்களை அவ்வப்பகுதிகளில் குடியமர்த்தியும் தமிழ் வளங்களையும் நிலங்களையும் சுரண்டுவதோடு அதே இராணுவத்தைக் கொண்டே விவசாயம் வியாபாரம் மற்றும் முதலீடுகள் மூலமாக இராணுவ செலவீனங்களில் பாதிப்பையாவது குறைத்துக்கொள்வதோடு தமிழர்களின் வளங்களை பிடுங்கிய பெருமையால் மிக நீண்டகாலத்திற்கு தேர்தல் முறையால் இவர்களால் அரசாட்சி செய்யமுடியுமென்றும் பெரும்பான்மை சிங்களவர்கள் மத்தியில் பாதி மன்னர் களாக பவனிவரும் மகிந்த சகோதரர்கள் படிப்படியாக இவைகளை செய்து முழு சிங்களத்துக்கும் முதல் மன்னர் களாக திகழவேண்டும் என்பதே இவர்களின் விருப்பம்.

**பெரும்பான்மை சிங்களவர்கள் மத்தியில் பாதி மன்னர்களாக பவனிவரும் மகிந்த சகோதரர்கள் படிப்படியாக இவைகளை செய்து முழு சிங்களத்துக்கும் முதல் மன்னர்களாக திகழவேண்டும் என்பதே இவர்களின் விருப்பம்.**

இந்த இராணுவப் பாதையை நோக்கி மகிந்த அரசு முன்நகர்வதை இந்திய சீன ஆட்சியாளர்களும் விரும்பு வார்களே தவிர வெறுப்பதற்கில்லை. காரணம் ஏற்கனவே இலங்கை மேல் கடுப்புற்றிருக்கும் மேற்குல நாடுகள் பர்மாவை வெறுத்து விமர்சிப்பது போல் இலங்கைத் தீவையும் வெறுக்கும் போது அவர்களை இந்த இரு வல்ல ரசுகளும் காப்பது போல காட்டிக்காட்டியே இலங்கையை தங்களது கைகளுக்குள் வைத்திருக்க முயலுகிறார்கள். மியன்மாரைப் போன்றே இலங்கைத்தீவிலும் இந்தியாவும் சீனாவும் சண்டைப்போக்கை தவிர்த்து சமாதானமான வியாபார முதலீடுகளை ஈட்ட முற்படுவார்கள் என்பதுதான் உண்மை.

இந்த இரு நாடுகளும் இருதலை கொள்ளி எறும்புகளாக இலங்கைக்குள் இருக்கும் வரைக்கும் மேற்குலகுகளும் தமிழர் பிரச்சனைகளில் தலையிட்டு தமிழ் மக்களுக்கு ஒரு விடிவைத் தேடித்தந்துவிடும் என்பதிலும் நம்பிக்கை கொள்ளத்தேவையில்லை.

ஆக இலங்கைத்தீவில் பெரும்பான்மை புத்த சிங்கள மேலாதிக்கம் கருதுவது விரும்புவது போல் இலங்கை ஒரு முழுமையான புத்த சிங்கள நாடாக மாற்றமடைந்து வருகிறது.

அதேபோல் தமிழரையும் முடிந்தவரை அடிமைகளாக இரண்டாந்தர குடிமக்களாக மகிந்த அரசு செய்து கொண்டிருக்கும் வரை மகிந்த சிங்களவர்களின் கண்களுக்கு மன்னனாகத்தான் தெரிவார். மகிந்தவும் இந்த பெருமைகளுக்குள் மூழ்கியிருக்கும் வரை எந்த தரித்திர அருவருக்கத்தக்க வேலையானாலும் அதை தமிழ் மக்களுக்கு இழைக்கவும் தயங்கப்போவதில்லை.




**Indian Chef Wanted**

Experienced South Indian chef wanted in Kingsbury area.

Please Call **Suthan 07957383535**

வீடு விற்பனைக்கு!

யாழ் சித்தங்கேணி சந்திக்கு அருகாமையில் காரைநகர் வீதியில் பெற்றோல் ஸ்டேஷனுக்கு சமீபமாக அண்ணளவாக 7 1/2 பரப்பு நிலமும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு-
E-Mail : itemforsale@hotmail.com
Mobile : +44 79 7224 8290

தமிழ்

Alperton Community School, Ealing Road Alperton, Wembley HA0 4PW இல் பாலர் வகுப்பு முதல் Advanced Level வரை

தமிழை கற்போம், தமிழை வளர்ப்போம், தமிழை காப்போம்.

Phone 01895 674952
Mobile 07710 826835

அரங்கேற்ற மலர்கள்

விழா மலர்கள்

அழைப்பிதழ்கள்

நினைவு மலர்கள்

விளம்பர பிரசுரங்கள்



தமிழ் தட்டச்சு மற்றும் அனைத்து அச்சு வேலைகளுக்கும் அழையுங்கள்....

Call : 020 7043 4319

**RAJ SCIENCE TUITION**

LIMITED SEATS ONLY AVAILABLE

ENROLL NOW

Contact :
07903501336
07794424147

Science subjects ONLY
from Grade 8 to GCSE

WE OFFER
- Exam Preparation
- Supplementary Lessons
- Model Question Paper



Tutor Profile : Master in Physiotherapy (MPT) with 12 years' experience and currently working in King's Hospital.

3 YEARS TUTORING EXPERIENCE IN SCIENCE SUBJECTS.

# இரட்டைக்கோபுரத் தாக்குதலின் பின்னர் பயங்கர வடிவெடுத்த சிஐஏ.



வேல் தர்மா
*(ஒரு பேப்பருக்காக)*

பன்னாட்டு அரங்கில் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் நாடுகளுக்கு இடையிலான உறவுகளில் திருப்பத்தைக் கொண்டுவந்தது 9-11எனப்படும் 1991 செப்டெம்பர் 11-ம் திகதி அமெரிக்காவில் நடந்த இரட்டைக் கோபுரத் தாக்குதல்தான் என்று கூறலாம். உலகெங்கும் உள்ள தீவிர வாத இயக்கங்களுக்கு எதிராக தன்னுடன் ஒன்று சேருமாறு அமெரிக்கா பல நாடுகளையும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டது. அதற்குப் மும்மர் கடாஃபியின் லிபியா உடபடப் பலநாட்டு அரசுகள் ஒத்துக் கொண்டன.

உலகெங்கும் உள்ள தீவிரவாத இயக்கங்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் அமெரிக்க உளவு நிறுவனமான சிஐஏ தீவிரமாக ஈடுபட்டது. சிஐஏ இற்கு யாரும் அதிகாரம் வழங்கத் தேவையில்லை அது தனக்குத் தேவையான அதிகாரங்களைத் தானே பெற்றுக் கொள்ளும். 9-11இற்குப் பின்னர் சிஐஏயில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப் பட்டன.

### சிஐஏயின் வதை முகாம்கள்

தடுப்பு முகாம்கள் எனப்படும் வதை முகாம்களை சிஐஏ அமெரிக்காவிற்கு வெளியே பல நாடுகளில் நிறுவி அங்கு தான் சந்தேகிப்பவர்களைத் தடுத்து வைத்திருந்து பல சித்திர வதைகளைச் செய்தது. ஜோர்ஜ் புஷ் அமெரிக்க அதிபராக இருந்த போது அமெரிக்காவில் அல் கெய்தா சந்தேக நபர்களிடம் இருந்து தகவல்களைப் பெற சி ஐ ஏ உளவு நிறுவனம் Waterboarding Interrogation Techniques எனப்படும் Simulated drowningஐப் பாவித்தது.

இந்த சித்திரவதையை விக்கிபீடியா இப்படிக் கூறுகிறது:

The prisoner is bound to an inclined board, feet raised and head slightly below the feet. Cellophone is wrapped over the prisoner's face and water is poured over him. Unavoidably, the gag reflex kicks in and a terrifying fear of drowning leads to almost instant pleas to bring the treatment to a halt. According to the sources, CIA officers who subjected themselves to the water boarding technique lasted an average of 14 seconds before caving in. They said al Qaeda's toughest prisoner, Khalid Sheik Mohammed, won the admiration of interrogators when he was able to last over two minutes before begging to confess. சுருங்கக் கூறுவதானால் கைதி நீருள் மூழ்கி இறப்பது போன்ற ஒரு உணர்வைப் போலியாக ஏற்படுத்தி அதன் மூலம் அவருக்கு இறக்கப் போகிறேன் என்றபயத்தை ஏற்படுத்தி அவரை உண்மைகளைக் கக்க வைப்பதுதான் இந்த water boarding சித்திரவதை. ஐரோப்பாவில் மட்டும் 14 நாடுகளில் சிஐஏயின் இரகசியத் தடுப்பு முகாம்கள் இருந்தன. இவை எந்த நாட்டுச் சட்டத்திற்கும் உட்பட்டவை அல்ல. போலந்தில் சிஐஏ இரகசியத் தடுப்பு முகாம்களில் அல் கெய்தா சந்தேக நபர்களைச் சித்திரவதை செய்ததை விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியது. சிஐஏயின் 'கைதுகளும் சிறை வைத்தலும்' எந்த ஒரு நாட்டுச் சட்டத்திற்கும் இசைய நடப்பவை அல்ல.

### பலம் பெற்ற பயங்கரவாத எதிர்ப்பு நிலையம்.

சிஐஏயின் ஒரு பிரிவான பயங்கரவாத எதிர்ப்பு நிலையத்தில் 09-11-1991இல் 300பேர் மட்டுமே பணி புரிந்தனர். 9-11 தாக்குதல் நடத்தப்பட்டவுடன் அதில் 1200பேர் உடனடியாக இணைக்கப்பட்டனர். இப்போது அதில் 2000இற்கும் அதிகமானோர் பணிபுரிகின்றனர். இதைவிட ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யும் வெளிநாட்டினர்களும் பலர் உள்ளனர். உலகெங்கும் உள்ள அல் கெய்தா இயக்கத்து உறுப்பினர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க சிஐஏயின் பயங்கரவாத எதிர்ப்பு நிலையத்தில் அதிகம் பேர் பணி புரிகிறார்கள் என்றும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

### ஆப்—பாக் பிரிவு

அல் கெய்தாவின் முக்கிய களம் ஆப்கானிஸ்த்தானிற்கும் பாக்கிஸ்த்தானிற்கும் இடையிலான எல்லைப் பிரதேசமாகும். இப்பிரதேசம் பாக்கிஸ்தானின் கட்டுப்பாட்டிலோ அல்லது ஆப்கானிஸ்தானின் கட்டுப்பாட்டிலோ இல்லை. 9-11இன் பின்னர் சிஐஏயின் பிஏடி எனப்படும் பாக்கிஸ்த்தான் ஆப்கானிஸ்தான் பிரிவு உருவாக்கப்பட்டது. இதற்கிணங்க அமெரிக்க வெளியுறவுத்துறையும் ஆப்-பாக் கொள்கை ஒன்றை வகுத்துக் கொண்டது. சிஐஏயின் பயங்கரவாத எதிர்ப்பு நிலையமும் பிஏடியும் இணைந்து ஆப்கானிஸ்தானில் பல அல் கெய்தா எதிர்ப்பு நடவடிக்க்கைகள வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளன.

### மோசமான படை அமைப்பாக மாறிய சிஐஏ

வெறும் உளவு நிறுவனமாக இருந்து கொண்டு முதலாளித்துவக் கட்டமைப்புக்கு எதிராகச் செயற்படும் அரசுகளைக் கவிழ்த்தல் ஆட்சியாளர்களைக் கொல்லுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த சிஐஏ 9-11இற்குப் பின்னர் ஒரு படைப்பிரிவையும் தனக்கென அமைத்துக் கொண்டது. அமெரிக்காவின் படைத்துறையினர் அமெரிக்க சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள். அமெரிக்கப் பாராளமன்றத்திற்கு பொறுப்புக் கூறவும் வகை சொல்லவும் கடப்பாடுடையவர்கள். ஆனால் சிஐஏயின் படைப்பிரிவு அப்படி அல்ல. அப்படி ஒரு பிரிவு இருப்பதாக சிஐஏ பகிரங்கமாக சொல்வதுமில்லை. அமெரிக்க அரசைப் பொறுத்தவரை அப்படி ஒரு படைப்பிரிவு இல்லை என்றே கூறமுடியும். இதனால் சிஐஏயின் படைப்பிரிவு தன்னிச்சையாக பயங்கர நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது.

### சிஐஏயின் படைப்பிரிவு ஒரு ஒட்டுக் குழுபோல் செயற்படுகிறது.

சில அமெரிக்க மனித உரிமை ஆர்வலர்கள் சிஐஏயின் படைப்பிரிவு எந்தவிதக் சட்டக் கட்டுப்பாடுமின்றி ஒரு ஒட்டுக் குழுபோல் செயற்படுகிறது என்று பகிரங்கமாகக் கூறுகின்றனர்.

### சிஐஏயின் ஆளில்லா விமானங்கள்

சிஐஏயின்படைப்பிரிவினர் ஆளில்லாப் போர் விமானங்கள்பல வற்றைத் தம்வசம் வைத்திருக்கின்றன. இவை உண்மையில் கொல்லும் எந்திரங்கள். ஆப்கானிஸ்தானிலும் பாக்கிஸ்தானிலும் அல் கெய்தாவிற்கு எதிரான வெற்றியில் இந்த ஆளில்லாப் போர் விமானங்களுக்குப் பெரும் பங்கு உண்டு. சிஐஏ மேலும் நவீனமயப்படுத்தப்பட்ட ஆளில்லாப்போர் விமானங்களை உற்பத்தி செய்வதற்கான ஆராச்சிக்குப் பெரும் பணம் செலவழித்துள்ளது. ஆப்-பாக் எல்லையில் உள்ள அல் கெய்தாவினர் பற்றிய தகவல்களை அறிந்து அதை அமெரிக்கப்படையினருக்கு அறிவித்து அவர்கள் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட முன்னர் அல் கெய்தாவினர் நகர்ந்து விடுவார்கள். தாக்குதலுக்கான பெரிய விமானங்கள் தளத்தில் இருந்துகிளம்பும் தகவல் அல் கெய்தாவினருக்குச் சென்று விடும். சிஐஏ தனது சொந்த ஆளில்லா விமானங்கள் மூலம் உடனடித் தாக்குதல்களை மேற் கொள்ளலாம். சிஐஏயின் ஆளில்லாப் போர்விமானங்கள் இதுவரை இரண்டாயிரத்திற்கும் அதிகமான அல் கெய்தா உறுப்பினர்களைக் கொன்றுவிட்டன. அல் கெய்தாவில் இணைபவர்களிலும் பார்க்க அதிகமானவர்களைத் தாம் கொல்கிறோம் என்று சிஐஏ பெருமைப்பட்டுக் கொள்கிறது. கடந்த ஒரு வருடமாக யேமனிலும் சிஐஏயின் ஆளில்லா விமானங்கள் பல தாக்குதல்களை மேற் கொண்டன. ஆப்கானிஸ்த்தானிலும் பாக்கிஸ்தானிலும் சிஐஏ தளங்களை அமைத்து இந்த ஆளில்லா விமானங்களை இயக்குகின்றது. சிஐஏயின் படைப்பிரிவினர் பாக்கிஸ்தான் அரசுக்கோ படைத்துறைக்கோ தெரியாமல் அங்கு பல தாக்குதல்கள், கைதுகள், கடத்தல்கள், கொலைகள் பலவற்றைச் செய்கின்றனர். இதன் உச்சக் கட்டம்தான் பில் லாடன் கொலை.

### பிடித்துக் கோல்லுதலும் கோன்று பிடித்தலும்

அல் கெய்தாவினருக்கு எதிரான சிஐஏயின் நடவடிக்கைகள் பிடித்துக் கொல்லுதல் என்ற செயற்பாட்டில் இருந்து கொன்று பிடித்தல் என்ற செயற்பாட்டுக்கு மாறியுள்ளதாகச் சிலர் தெரிவிக்கின்றனர். சிஐஏ தேவை ஏற்படும் போது தடை செய்யப்பட்ட நிலக்கண்ணி வெடிகளையும் பாவிக்கத் தயங்குவதில்லை என்றும் சில செய்திகள் கூறுகின்றன. பின் லாடனைப் பிடித்துக் கொல்லப் போன அமெரிக்க சீல் படையினர் பின் லாடனின் மனைவி தற்கொலை அங்கி அணிந்திருக்கலாம் என்ற அச்சத்தில் பின் லாடனைக் கொன்று பிடித்தனர்.

### கோழியா? முட்டையா?

சிஐஏ 9-11 இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின்னர் தனது நடவடிக்கைகளை பலமாகவும் தீவிரமாகவும் மேற்கொள்கிறதா அல்லது தனது நடவடிக்கைகளை பலமாகவும் தீவிரமாகவும் மேற்கொள்ள இரட்டைக் கோபுரத்தாக்குதலை சிஐஏ ஒழுங்கு செய்ததா என்ற கேள்வியும் உண்டு. Andreas von Bulow என்ற ஜெர்மனியர் தனது The CIA and September 11என்ற நூலில் இந்தக் கேள்வியையே முன்வைக்கிறார்.



நன்றி கார்டியன்

MASS GLOBAL SHIPPING
Sea - Air - Road & Ticketing, Serving all the Sri Lankan Communities
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK
Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers
• Packers • Movers • Shippers
We Offer the Best Services than all the Other in the trade!
Special rates for Containers and Machinery
4 Collection Points : Harrow, Warford, Knightsbridege, Croydon
FREIGHT ONLY £10.00
FREIGHT AND BOX £15.00 (Volume 4.5Cu.ft)
Wooden boxes from £9.00
Call 0208 3862314
Contact : Das - 07852266400
Hot Line 24/7- 079 4010 8177
Local Collection Charge £5.00 upto Hounslow. Within M1 collection charge £15.00 upto Conventry All other area's we will offer the best rates
MASS GLOBAL SHIPPING
Warehouse, 652, Victoria Road Ruslip, HA40LN
E-Mail: info@massshipping.com,
Web : www.massshipping.com
*Condition Apply Warning
No hidden charges
No brognus promotions

ஒரு பேப்பர் ORU PAPER
உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!
SUBSCRIPTION FORM
Name: ____
Address: ____
Postcode: ____
Telephone: ____
மேலுள்ள விண்ணப்படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."ன் பெயரில் காசோலையினையும், G11, LOMBARD HOUSE, PURLEY WAY, CROYDON, CR0 3UP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# Take Rogue Sri-Lankan War Criminal beasts by the Horns to Criminal Courts



**By: Dr C P Thiagarajah**

Mahinda Rajapakse is the leader of a pack of rogues that committed the world's worst war crimes of the century. The genocide of 40,000 Tamils civilians in May 2009 in Mullivaikal was the culmination of the war crimes that destroyed the homeland of the Tamils in Vanni and disappeared nearly 146,000 Tamils in total. The war also spawned 89,000 Tamil widows and more than 125,000 disabled persons. All these vicious acts were meticulously planned and the war was a 'war without witnesses' as described by the world media. The perpetrators of the conflict termed 'blood bath on the beeches' of Mullivaikal went unpunished by the UN and other watchdogs of the world. The inaction of the world to track down these war criminals is the dilemma that shook the world. With the impunity provided by such inaction the world had given licence to the Mahinda Rajapkse (MR) and his brothers to terrorise the Tamil Ethnic minorities and subjugate them. Now the promise president Rajapkse gave the world, he would give a political settlement to the Tamils after the conclusion of the war is being retracted.

That a world that cares for animals' welfare and take utmost precautions to prevent cruelty to children could remain unmoved at the atrocities committed on the Tamils in the 'No Fire Zone' in May 2009 is a paradox. Why is this silence? The UK Channel 4 Video "Sri-Lanka Killing Fields" has gone to extra length to prove beyond doubt that such genocide took place. Still for all that proof the UN remains mute and the leading politicians of the enlightened world are too timid to open the topic in the UN. I will remind these honourable men to recap what Martin Luther King Jr prophesied "Injustice anywhere is a threat to justice everywhere ".

The belatedly appointed three member UN expert Panel of the Secretary General Mr Ban Ki Moon had done a brilliant job utilising their expertise to bring out the truth of the matter beyond doubt in their 196 odd pages report. However nothing came out of it and the UN general assembly and the five members Security Council remained oblivion of these revelations of crimes against humanity, war crimes and the genocide. Inner City Press of the UN said on August 15 that Secretary General Ban Ki Moon had still not officially presented the report to the UNHRC nor the Security Council. Is Vijey Nambiar, the special Indian adviser to the SG who was implicated in the report behind all these break down of the UN administration? Let the world citizens take the Sri-Lankan brutes by the horn to an international inquiry in order to deliver justice to the Tamils.

An old English proverb reveals the actual position of the UN. "It is an ill bird that fouls its own nest" – the UN is really run by sick people at the moment and Mr Ban Ki Mun should be psychiatrically analysed for his failures. It was Ms Navi Pillai the UNHCHR, the only person in high command in the UN who in reality raised alarm over the serious violation of Human Rights in the Sri-Lankan one sided war.

History tells us that world condemn outright all those who made the lives of others miserable or those who remained passive observers without taking positive action to halt the perpetrator or bring them to justice. Be warned. The sins of the fathers are visited on their children to the third and fourth generation says the bible. Wise are they who worship Nemesis.

The UN Expert Panel Report covers mainly the last stages of the war that resulted in the genocide of nearly 40000 Tamil civilians-a sizeable portion of the population of Vanni. That is the months from September 2008 to 19 May 2009. This war clearly taught us that "The first casualty when war comes is truth" an axiom from US Senator Hiram Warren Johnson in 1918. The Sinhala communalist regime started hiding the truth behind the war right from the start. It ordered all NGOs working in the Tamil Homeland (TH) to quit the area and iron curtained the area from the reach of all media. All social media too was jammned by the government. Consequently, the war started without independent eye witnesses which were the main intention of the government.

Therefore it was aptly named the 'war without witnesses' by the world press. Mahinda Rajapakse remembered the first part of what Abraham Lincoln told on war "Force is all-conquering, but its victories are short-lived" and forgot the latter part. The victory he got out of the war was a phony one and one that caused the genocide and much misery to an ethnic group in Sri-Lanka –the Tamils.

Mr Ban Ki Moon, UN SG was insensitive and ineffective to do anything to halt the carnage although he was forewarned by several Human Rights groups of the impending human disaster. World wisest man Albert Einstein said "Force always attracts men of low morality". Sri-Lankan bird brained military leaders chose to use extreme force against civilians; cluster bombs, thermobaric bombs, phosphorous bombs and multi-barrel shelling and heavy bombs. This heinous preplanned genocide should not be allowed to go unchecked and the perpetrators unpunished. The erstwhile UNHCHR Ms Navi Pillai was very specific about the extent to which HR laws should be extended to protect even those who take up arms against a regime. On Friday Jun 11 2010 The UN High Commissioner for Human Rights Navi Pillay made it clear "While any State has the right to use force to guarantee security and maintain public order, it "should observe certain limits aimed at respecting fundamental rights of individuals and the rule of law, even when responding to unjustified attacks by illegal armed groups."

The UN agencies that were supposed to help defenceless civilians in the TH left even without the presence of any token guards. By permitting a genocide in Sri-Lanka Mr Ban has allowed, as the Editor of guardian. co.uk, in an article titled Sunday 14 August 2011 titled 'United Nations: Weak leaders wanted" pointed out , the slow decay of the UN secretariat, an institution that should be working, as Hammarskjöld said, on the edge of progress.

The dismal failure of Ban Ki Moon and the big world powers has resulted in the mushrooming of war criminals in Sri-Lanka. There are more or less 12 head of the government and army who are involved in the genocide and war crimes and crimes against humanity. These war criminals some of whom have been named below remain Scot-free. All are enjoying the forbidden fruit- victory in genocide of Tamils. Sinhalese military personnel had been appointed as Governors of the TH of the Tamils ie the North and East of Sri-Lanka. As widely reported these men are continuing the physical genocide as well as the cultural and structural genocide of the TH. Can the world afford to let these men of question integrity to roam the corridors of the UN and other world capitals as gospel bearers of foul war tactics and fighters of terrorism?

Some of the Armed Forces Personnel who Share the Loots of the War:

Numbered from right to left.

1. Majaor Jegath jayasooriya- Promoted Army Commander.

2. Air Chief Marshal Jayalath Weerakkody (former Air Force Chief) – Sri Lanka's High Commissioner to Pakistan.

3. Admiral Wasantha Karannagoda (former Navy Commander) – Highways Ministry Secretary and tipped to become Sri Lanka's Ambassador to Japan.

4. Major General Jagath Dias (former General Officer Commanding the 57th Division) – Sri Lanka's Deputy Ambassador to Germany.

5.Major General Udaya Perera (Director Operations of the Sri Lanka Army) – Sri Lanka's Deputy High Commissioner to Malaysia.

7. Major General G.A. Chandrasiri (former Jaffna security forces commander) – Northern Province Governor.

8. Major General Shavendra Silva (former General Officer Commanding the 58th Division) – Deputy Permanent Representative for Sri Lanka in the UN.

9. Major General Amal Karunasekara (former Head of the Directorate of Military Intelligence) – Charge d'affaires for the proposed Sri Lankan Mission in Eritrea.

10. Air Chief Marshal Donald Perera (former Air Force Chief and Chief of Defence Staff) – Sri Lanka's Ambassador to Israel.

11. Rear Admiral Mohan Wijewickrema (former Navy Chief of Staff) – Eastern Province Governor.

Major General Nanda Mallawaarachchi (former Chief of Staff of the Army) – Sri Lanka's Ambassador to Indonesia. Admiral Thisara Samarasinghe (former Navy Commander) – Board Member, Water's Edge Complex and tipped to become Sri Lanka's High Commissioner to Australia

Edited for space.

*(Courtesy: Tamil Canadian)*



✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Company Formation
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# Tamil Jus Post Bellum: An Alternative

By: Rajeev Sreetharan

Will there be an international tribunal for the Tamil killing field at Mullivaikaal? Will the policy debates and political lobbying regarding international investigations mature into a post-war transitional justice mechanism based on retributive justice? Or will Mullivaikaal succumb to the politics and amnesia of Black July justice and its progeny of state-sponsored anti-Tamil atrocity crimes, where accountability and Tamil life were slain with the same bullet of state complicity?

Two years after the Tamil killing field at Mullivaikaal, it is unclear. On the international level, in contrast to its interventionist Libya policy, the international community appears generally content to frame Sri Lanka's arguably genocidal counter-insurgency as militarily-necessitated collateral damage, with isolated violations of the laws of war, by both sides. In the Sri Lankan context, issues of Tamil justice and accountability will likely remain paralyzed, not to be advanced by organs of the Sri Lankan state due to conflict of interest, nor by Sri Lanka's human rights community operating within the cultures of self-censorship and impunity.

The central problem with the push for investigations is it does not contemplate a method or forum for workable implementation, a feature which likely comforts the Government of Sri Lanka (GoSL).

The discourse to date remains within the sphere of human rights rhetoric which offers nebulous comfort to the Tamil victim or asylum communities and which will not forseeably vindicate the rights of the thousands slaughtered, nor write the history of Eelam War IV with any precision.

Through the eyes of the international community, the disincentives to investigate are many. Confronting the genocidal character of the democratically-supported counter-insurgency, coupled with the state policy of post-war Sinhala colonization of historically Tamil areas, questions the fundamental political structure of the State, leading back to the cause of the armed conflict, Tamil self-determination. Given the Sri Lankan Army's (SLA) systematic attack on the Safe Zone over several months, investigations would also painfully illuminate the international community's systematic failure in its Responsibility to Protect (R2P) the Tamil people before, during, and after the killing field.

These negative aspects of investigations are reflected in the United Nations Panel Report's recommendations. The recommendations are generally unworkable as a practical matter and it appears were more intended to defer the Tamil justice question a few years out. The UN Panel Report, while acknowledging international crimes perpetrated during the war, essentially proposes to monitor the Rajapakse administration investigate itself for violations of humanitarian and human rights law.

The issue with these recommendations is there never was a post-war transitional justice moment in Sri Lanka, a presupposition of the report probably known by all key stakeholders to Sri Lanka's post-war peacebuilding effort.

> the state policy of post-war Sinhala colonization of historically Tamil areas, questions the fundamental political structure of the State

Transitional justice models, like the one proposed for Sri Lanka by the UN Panel Report, typically occur in post-war or post-conflict scenarios, after there has been regime change. The new regime investigates abuses of the old, and post-war reconciliation is predicated on accountability and truth-telling for state-sponsored atrocities which linger in the memory of the war-ravaged society.

In Sri Lanka, there was no regime change after Mullivaikaal, a necessary precondition to support a hybrid transitional justice model like those in Latin America or Africa. The implicit logic of the UN Panel report erroneously construes the non-existence of the LTTE after Mullivaikaal as the equivalent of a change in regime which created a transitional justice moment that would make implementation of the UN Panel recommendations possible. However, there was no regime change because in fact, Rajapakse was in power before and after May 2009. Given the UN's experience in transitional justice and humanitarian missions since its inception, and assuming the UN was not unaware of this contradiction, it is reasonable to infer that the UN Panel Report was probably not proposed to be implemented. In the interim, for Tamils, the solution has been post-war development without justice even if the crime was genocide.

If the UN Panel recommendations do not deny or delay justice, they will surely dilute it. Moreover, soliciting the Rajapakse administration to cooperate with investigations knowing it committed the crimes, and later criticizing the Rajapakse administration when it does not cooperate in investigating itself, is a well-rehearsed dance of international diplomacy which will not provide Tamil victims of mass atrocity crimes meaningful remedies to substantive justice.

However, as nuances of this process continue to unfold, the transnational Tamil Diaspora, which has always been a sleeping giant in the global equation for Tamil justice, can create alternative or complementary options to the UN Panel proposal, by first considering that all paths to Tamil justice need not turn on the GoSL's consent or UN Security Council approval. The transnationality of the Tamil Diaspora multiplies the workable options to deliver Tamil justice.

In the contemporary context, in place of a UN-driven effort, one alternative path to Tamil justice is a multinational effort which investigates Sri Lankan war crimes solely based on evidence provided by the Tamil asylum populations which have filtered out of Sri Lanka over the past few years. This approach, relevant to places like Canada, the European Union, India, Malaysia, Australia, could be carried out independently or collaboratively, by actors such as governments, human rights NGOs, or the Diaspora. Noteworthy, this effort is multinational, and not multilateral, and therefore would not be as vulnerable to the big power geopolitics which saturate decision-making in the corridors of the UN. More, this type of effort would be an exercise in unity more than resistance, testing more the transnational Tamil Diaspora's ability to unite across borders, rather than testing the Tamil community's ability to resist the racially discriminatory acts of the GoSL.

While the path to Tamil justice for Mullivaikal may not come as easy as it did for Rwanda or Srebrenica, the truth of the Tamil killing field can not be suppressed indefinitely. If the UN Panel recommendations are not implemented, other alternatives shall emerge, and should be explored.

London, Tooting முத்துமாரி அம்மன் தேர்த்திருவிழா, London, Eastham ஸ்ரீமகா லட்சுமி கோவில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு மாபெரும் விலைச் சலுகைகள் 28, 29 திகதிகளில் மட்டுமே.....




Model 09 Wall Unit
Overall Size : 18"L x 10"W x 30"H

Model 09 Wall Unit + Door
Overall Size : 18"L x 10"W x 33"H

Model 015m + Door
Overall Size : 42"L x 24"W x 79"H

Model 3344 m
Overall Size : 48"L x 24"W x 79"H

DIVINE HOME


Akilan Enterprises
274.High Street North, Manor Park,
London, E12 6SA Tel: 0208 548 0033

Tooting முத்துமாரி ஆலயதிருவிழாவில்
அமைக்கப்பட்டிருக்கும் விசேட காட்சியறையில்
வாடிக்கையாளர்களுக்கு மேலும்
பல விலைக்கழிவுகள்!! தவறவிடாதீர்கள்


# KIDS பேப்பர்

By: Sujarnth




By: Chajicha




By: Hawsikka






By : Hashani    By : Lithukga





By : Vigaashan    By : Rehashan





By : Pirakeith    By : Mary





By : Dhiveyani    By : Vishruga





By : Hashani    By : Abirami





By : Pruthuveen    By : Abinaya





By : Edna    By : Maathushan








By : Chajicka    By : Saraniyaa    By : Mary











By: Rehashan    By: Vigaashan    By:Poomiha    By: Dhiveyani    By : Vishnuga











By:Jarushan    By: Edna    By: Mathushan    By: Prathuveen    By : Hashani

## Colouring



Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

***Last issue winner is** Saraniyaa*

**Dear Kids...**

Do you like to draw? Send in a picture of your favourite animal and write a few words on why it's your favourite and send it (with your photo) to ORU PAPER and you could be the lucky winner of a new stationary kit!



## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| F | K | U | M | B | A | M | U | N | B |
| M | A | A | L | A | I | R | A | I | N |
| W | S | S | U | N | D | A | L | O | H |
| I | Q | P | Y | Z | A | I | B | I | L |
| M | V | O | K | U | D | A | M | A | D |
| P | I | N | E | O | E | N | I | L | M |
| A | L | G | P | O | D | E | L | J | E |
| U | A | A | A | R | S | M | R | D | V |
| F | K | L | T | N | G | E | Q | Y | Z |
| A | U | I | U | W | S | O | H | I | B |

**Subject: Tamil Festival Items**
SUNDAL, PONGAL, MAALAI, KUDAM, VILAKU, KUMBAM



தீபாவளித் திருநாளை முன்னிட்டு மாபெரும் விலைச் சலுகைகள்....
SRI VENILALS
ராசியான கூறைப்புடவைகள் மற்றும் அனைத்து விதமான
சேலைகளையும், சிறுவர்களுக்கான உடைகள் என
அனைத்தையும் தரமாகப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்....
SPECIAL OFFER
EXCLUSIVE
SAREES
DESIGNER
LEHNGA
SUITS
DESIGNER
PAVADAI & HALF
SAREES
DESIGNER
SALWAR
SUITS
DESIGNER
COSTUME
JEWELLERY
EXCLUSIVE
KANCHEEPURAM
SAREES
மங்கையர்
மனங்கவர்
ஆடைகளின்
சங்கமம்!
அனைத்து வித
ஆடைகளும்
25%
விலைக் கழிவில்
அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!!!
115-117 Ealing Road, Wembley, Middlesex, HA0 4BP
Tel: 020 8903 3144




# South Norwood இல் உதயமாகிறது
# மிகப் பிரமாண்டமான தமிழர்
# பல்பொருள் களஞ்சியம்

**11-09-2011 காலை 10:00 மணிக்கு**

19, High Street, South Norwood, SE25 6EZ

மங்களகரமாகத் திறந்து
வைக்கப்படுகிறது.



## இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் மற்றும் அனைத்து விதமான மரக்கறி வகைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நினைவில் என்றும் இருக்க வேண்டிய இடம் !

- சகல விதமான மளிகைப் பொருட்கள்
- இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்
- சுவையான பழங்கள்
- உடன் மரக்கறி வகைகள்
- சஞ்சிகைகள்

அனைத்தையும் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.




## தரமான பொருட்கள், நியாயமான விலை,
## அன்பான உபசரிப்பு
## இவையனைத்தும்
## இங்கு மட்டுமே!!!



SouthNorwood Supermarket

**மேலதிக விபரங்களுக்கு : 020 8765 8911**

# தன் வலிமையை இனங்காட்டும் தமிழர் தேசியம்

பாகம் 100

இது அலசுவாரத்தின் நூறாவது தொடர். நான் சில அத்தியாய இலக்கங்களைக் குறிக்க மறந்ததால், சில அத்தியாயங்கள் மீண்டும் அதே இலக்கங்களிலேயே வெளிவந்திருக்கின்றன. அப்படிப் பார்த்தால் பிரசுரமான அத்தியாயங்கள் நூற்றிலும் அதிகம். அந்தத் தவறுகளுக்கு நானே முழுப்பொறுப்பு. ஏனெனில் கம்பியூட்டரில் இருந்து பைலை எடுத்து முன்பு எழுதியவைகளை அழித்துவிட்டு புதிய அத்தியாயத்தை எழுதத் தொடங்கும்போது முகப்பில் அத்தியாய இலக்கத்தை மாற்ற மறந்துபோனதால் இது நேர்ந்துவிட்டது. ஒரு பேப்பர் நிர்வாகத்தினரிடமும் வாசகர்களிடமும் அதற்காக மன்னிப்பைக் கேட்டுவிட்டு, இந்தத் தொடரை அவ்வப்போது பாரட்டியும் சில சமயங்களில் விமர்சித்தும் ஊக்கப்படுத்திய ஒரு பேப்பர் வாசகர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இந்தத் தொடரைத் தொடர்ச்சியாகப் பிரசுரித்துக் கொண்டிருக்கும் ஒரு பேப்பர் நிர்வாகத்தினருக்கும் எனது அன்பான வந்தனங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அலசுவாரம் வெறும் மன ஆதங்கத்தின் வெளிப்பாடுதான். தீவிர ஆய்வுகளுக்கூடாக வெளிப்படட்ட தகவல் பரிமாற்றமல்ல. இதற்குக் காரணம் அவ்வப்போது இடம்பெற்ற சமகால நிகழ்வுகளின் அடிப்படையில் பெரும்பாலான அத்தியாயங்கள் எழுதப்பட்டதேயாகும். வாசித்த பத்திரிகைச் செய்திகள், இணையச் செய்திகள், கொஞ்சமிருந்த அரசியல், வரலாற்று ஞாபகங்கள், அனுபவப் பதிவுகள் என்று பலவற்றையும் கலவையாக்கி வாசகர்களுக்கு கொடுக்கப்பட்டவோர் மசாலாத் தொடருக்கு அலசுவாரமென்று பெயர் கொடுக்கப்பட்டதே அதன் காரணமாகத்தான். மட்டக்களப்பில் அலசுவாரமென்பது கருத்தற்ற அலம்பலைக்குறிக்கப் பாவிக்கப்படும் சொல். ஆனாலும் இதை வாசிப்பதில் ஒரு பேப்பர் வாசகர்கள் சிலரிடம் ஆர்வமிருந்திருக்கிறது.

எதை எப்படி எழுதினாலும் எமது இதயநாதமான தமிழ்த் தேசியத்தைச் சுற்றிச் சுற்றியே கட்டுரைகள் வரையப்பட்டன. அதுதான் எதிர்காலத்திலும் தொடரும். 'தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்' என்னும் மந்திர உச்சாடணம் கடைசி வரை நிறுத்தப்படக் கூடாததாக எம் உள்ளத்தில் ஒலி செய்து கொண்டேயிருக்க வேண்டுமென்னும் வேணவாவுடனேயே அலசுவாரம் ஆரம்பிக்கப் பட்டது. எமது தாயகத்துக்கான ஜீவமரணப் போராட்டம் நடைபெற்ற காலங்களிலும் அது சற்றுத் தேக்க நிலையை அடைந்துவிட்ட தற்போதைய காலத்திலும் தமிழர் தேசியத்திற்கான எமது குரலை நாம் நிறுத்திவிடாது தொடர்வோம். என்றோ ஒருநாள் எமக்கென்றோர் தாயகம் இவ்வுலகில் நிச்சயம் மலரும்.

முன்பெல்லாம் சற்று இளக்காரமாகத் தெரிந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தற்போதெல்லாம் மிகவுயர்ந்தவோர் அன்னையாகப் புலப்படுகிறார். முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்காக சர்வதேச விசாரணைக்கு வலியுறுத்த வேண்டுமென்றும், இலங்கையின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும் என்றும் மத்திய அரசைக் கோரும் அதிரடித் தீர்மானத்தைச் சட்டசபையில் நிறைவேற்றிய கையோடு, முருகன், சாந்தன் பேரறிவாளன் ஆகியோரது மரணதண்டனைகள் நிறுத்தப்படவேண்டுமென்னும் தீர்மானத்தையும் ஏகமனதாக நிறைவேற்றிய மாண்புமிகு தமிழக முதல்வர் ஜெயலலிதாவைச் சரிவரப் புரிந்துகொள்ளாமல் இருந்தது மிகப் பெரிய தவறாகப் படுகின்றது.

ஈழத்தமிழர் மீதான இந்தியாவின் ஏதேச்சதிகாரப் போக்கைத் தக்க சமயத்தில் மட்டம் தட்டி, தமிழர் தேசியத்தின் வலிமையைக் காட்டியிருக்கிறார் முதல்வர் அம்மா.

செத்தவன் எந்தக் கொம்பனாக இருந்தாலும் பரவாயில்லை, அதற்காக அப்பாவித் தமிழர்களைப் பலிக்கடாக்களாக்கி பிராயச் சித்தம் தேடச் சற்றேனும் அனுமதிக்கமாட்டேன் என்று, ஆதரவற்றுக் கிடந்த எம்மையெல்லாம் அள்ளி அணைத்தெடுத்த அன்புத்தாயாக அன்னை ஜெயலலிதா இன்று உயர்ந்து நிற்கிறார். நிச்சயமாக இந்த இரண்டு தீர்மாங்களாலும் மத்திய அரசு சற்று அதிர்ந்து போய்த்தான் இருக்கிறது.

## அலசுவாரம்

அலசுபவர் : மட்டைக்கிளப்பான்

ஏனோதானோ மனப்பான்மையில் எமது பிரச்சனைகள் தொடர்பாக மிகவும் மெத்தனமான போக்கைக் கடைப்பிடித்த மத்திய கொள்கை வகுப்பாளர்கள், சீனாவை அண்டவிடாது பாதுகாத்து, பிராந்திய நலனைத் தமது தலைமையில் பேண வேண்டுமென்னும் பயப்பிராந்தியைக் கிளப்பி அதையே சாட்டாக வைத்து இலங்கைத் தமிழரைத் தேடுவாரற்ற அனாதைகளாக்கிவிடச் செய்த முயற்சிகள் தற்போது தடங்கலுக்குள்ளாகியுள்ளன. அந்தவகையில் முள்ளிவாய்க்கால் படுகொலைகள் தொடர்பாகவும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாகவும் சர்வதேசம் எடுக்க முயலும் நடவடிக்கைகளுக்குத் தப்பி இந்தியாவில் மறைந்துகொள்ள இலங்கையெடுக்கும் நடவடிக்கைகளுக்கு இனி மேலும் இந்தியா ஆதரவு கொடுக்குமா என்பது சந்தேகமே. தமிழக அரசின் சமீபத்திய நகர்வுகள் மத்திய அரசைத் தடுமாறவைத்திருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை. நிலைமை அப்படி மாற்றப்பட்டுள்ளது. கருணாநிதி காலத்தில் இந்தத் துணிகரம் இருக்கவில்லை. எமக்காகவும் முழு உலகத் தமிழர்களுக்காகவும் தனது குரலை என்றும் எப்போதும் உயர்த்தி நிற்கும் தமிழ்நாட்டிற்கும் அதனை இன்று வழி நடத்திச் செல்லும் மாண்புமிகு முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்போம்.

தமிழர் தேசியத்தின் ஊற்றுவாய் இங்கேதான் இருக்கிறது. நாம் முதலில் இந்தியர்கள் அதன் பிறகு தான் தமிழர்கள் என்ற கருத்தற்ற வாதத்திற்குச் சாவுமணியடித்து நாம் முதலில் தமிழர்கள் அதன் பிறகுதான் இந்தியர்கள் என்னும் யதார்த்தவாதம் இப்போது தமிழ்நாட்டில் சற்றுத் தலைதூக்கியிருக்கிறது.

திருவாளர்கள் வைகோ, சீமான், ராமதாஸ், விஜயகாந்த், ஐயா நெடுமாறன் போன்ற செல்வாக்குமிக்க தலைவர்களெல்லாம் முருகன் சாந்தன் பேரறிவாளன் ஆகியோருக்கு வழங்கப்பட்ட தூக்குத்தண்டனைக்கு எதிராகக் குரல் கொடுத்தார்கள். பலர் சட்டரீதியாக அந்தத் தண்டனையை ரத்துச் செய்ய தம்மால் முடிந்த வரை பாடுபட்டார்கள். தற்போது இந்திய ஜனாதிபதியாலேயே கருணைமனு நிராகரிக்கப்பட்ட மூவருக்கும் தண்டனையை நிறைவேற்ற வேண்டிய காலம் ஒருமாதம் ஒத்திப் போடப்பட்டுள்ளது. கழுத்தை இறுக்கிக் கொண்டிருக்கும் தூக்குக் கயிறு இன்னமும் அங்கேதான் இருக்கிறது அது முற்றாக கழற்றி வீசப்படவில்லை. ஆனாலும், முதல்வர் ஜெயலலிதா அந்தச் சுருக்குகளின்மீது அடித்திருக்கும் ஆணிதான் அவற்றை இறுக விடாமற் செய்யப் பேருதவி செய்ய வேண்டும்.

தமிழக சட்டசபையின் ஏகமனதான ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ள அந்த மரண தண்டனைகளுக் கெதிரான தீர்மானமும் இந்திய ஜனாதிபதியிடம் கொடுக்கப்பட்டுள்ள வேண்டுகோளும் சாமான்ய மானவைகளல்ல. சுமார் ஏழுகோடித் தமிழர்களின் உணர்வு பூர்வமான வேண்டுகோள்.

115 கோடிக்கும் அதிகமான மக்கட் தொகையைக் கொண்ட இந்தியாஎன்னும் பிரமாண்டத்தினுள் அதன் 28 மாநிலங்களுள் ஒன்றான, கிட்டத்தட்ட 7.25 கோடி மக்கட் தொகையை மட்டுமே கொண்ட தமிழகத்தின் வேண்டுகோளை இந்திய நடுவண் அரசு புறக்கணிக்குமா அப்படிப் புறக்கணிக்க முடியுமா? என்பது தான் இன்றுள்ள மில்லியன் பவுண்ட் கேள்வியாயிருக்கிறது. காலம்தான் இதற்குப் பதில் சொல்லவேண்டும்.

இங்குதான் தமிழ்த் தேசியத்தின் முக்கியத்துவம் தனது இடத்தைப் பிடிக்கிறது.

(தொடர்ச்சி 24ம் பக்கம்)

நெஞ்சு பொறுக்குதில்லையே!

# எங்கே எமது தலைவர்கள்?

சமீபத்தில் எனக்கு ஒரு மின்னஞ்சல் வந்திருந்தது. அதை அனுப்பியவருடய விபரங்களைத் தவிர்த்துவிட்டு அவரது மின்னஞ்சலைக் கீழே தந்திருக்கிறேன். அவருடய மனவேதனை எனக்குப் புரிகிறது. அவரது கேள்வி நியாயமானதாகவே எனக்குப் படுகிறது. பதவிக்காக றோட்டில் இறங்கிப் போராடும் எமது தலைவர்கள், உண்மையான, பிரயோசனமான போராட்டங்களிலிருந்து ஒதுங்கி விடுகிறார்களே! அவருடைய கடிதத்தை நீங்களே வாசித்துப் பாருங்கள். இவர்களை நினைத்தால் நெஞ்சு பொறுக்குதில்லையே.!

'அன்புள்ள தமிழ் உறவுகளே,

புகழ் பெற்ற பல சர்வதேச நிபுணர்கள் அங்கம் வகிக்கும் நிறுவனம் ஒன்று சிறீலங்காவுக்கு எதிரான சர்வதேச விசாரணைக்கு, பிரித்தானியாவை கோரும் மனுவுக்கு, ஆதரவளிக்க முன்வந்துள்ளது. விபரம் அறிய http://www.srilankacampaign.org/advisorycouncilo.htm அங்கு அவர்களது இணையத்தில் வெளியான செய்தியை படிக்கலாம்

◆ இந்த விடயம் நண்பர் யார் பகைவர் யார் என்பதைத் தீர்மானிக்க வழி வகுக்கப் போகின்றது. சிறீலங்காவுக்கு எதிரான சர்வதேச விசாரணைக்கு பூரண ஆதரவு வழங்காத எவரும் தமிழர்களின் நலன் விரும்பிகள் என கருத முடியாது என்பதில் நான் உறுதியாக உள்ளேன்.

◆ 100000 இற்கும் அதிகமான பிரித்தானிய மக்கள் ஒரு கோரிக்கையை முன் வைத்தால் அதனை அமுல் படுத்துவது தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதிப்பது என பிரித்தானிய அரசிடம் ஒரு கொள்கை உண்டு. http://epetitions.direct.gov.uk/how-it-works

◆ அண்மையில் இலண்டன் கலவரத்தில் ஈடுபட்டவர்களின் சமூக நல கொடுப்பனவுகள், சமூக நல வசதிகள் நிறுத்தப்படவேண்டும் என்ற மனுவுக்கு இரண்டு இலட்சத்துக்கு அதிகமான மக்கள் ஆதரவு கொடுத்தனர். http://epetitions.direct.gov.uk/petitions

◆ அந்த கோரிக்கையையை, சமூக கொள்கை வகுப்பாளர்கள், உத்தியோக பற்றற்ற முறையில் அமுல் படுத்தி வருகின்றார்கள். விரைவில் பாராளுமன்ற விவாதத்தில் இது சட்டமாக வர உள்ளது.

◆ சிறீலங்காவுக்கு எதிராக சர்வதேச விசாரணை தேவை என்பதை வலியுறுத்தி மனு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. http://epetitions.direct.gov.uk/petitions/14586

◆ இதனை GTF எனப்படும் குளோபல் தமிழ் போரம் முன்னெடுக்கின்றது. இதுவரை 600 இற்கு குறைவான மக்களே ஆதரவு கொடுத்துள்ளார்கள். ஏனைய நிறுவனங்கள் ஊடகங்கள் மவுனம் சாதிக்கின்றன. இதற்கு என்ன காரணம் ஊடுருவலா ? அறியாமையா ? எனத் தெரியவில்லை

◆ எனவே இந்த மனுவில் (http://epetitions.direct.gov.uk/petitions/14586) கையெழுத்து இடுவதற்கு உங்கள் ஆதரவைக் கோருகின்றேன் மேலும் உங்களைப் பற்றிய விபரம் அத்தனையும் பிரித்தானிய அரசிடம் உண்டு. நீங்கள் பிரித்தானிய அரசுக்கு உங்களைபற்றி கொடுத்த தகவல்களை விட .நீங்கள் யாருடன் உறவு என்ன செய்கின்றீர்கள் என்பது அறியும் பலம் கொண்டது பிரித்தானிய அரசு .எனவே பெயரையும் கையெழுத்தையும் போடாமல் ஒழிப்பது படு முட்டாள்.....

◆ இந்த விடயம் நண்பர் யார் பகைவர் யார் என்பதைத் தீர்மன்னிக்க வழி வகுக்கப் போகின்றது. சிறீலங்காவுக்கு எதிரான சர்வதேச விசாரணைக்கு பூரண ஆதரவு வழங்காத எவரும் தமிழர்களின் நலன் விரும்பிகள் என கருத முடியாது

◆ நாடுகடந்த அரசு முதல் வட்டுக் கோட்டைத் தீர்மானம் வரை 75000 இற்கு அதிகமான வாக்குகளைப் பெற்று தேர்தலை நடத்தின. ஆனால் சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு 1000 வாக்குகள் கூட கிடைக்கவில்லை. ஸ்ரீலங்கா வுக்கு எதிரான செயல்பாடுகள் வீர வசனங்களாகவே இருக்கின்றன செயல் வடிவம் எதுவும் இல்லை. இதற்கு அறியாமை காரணமா? திட்டமிட்ட ஊடுருவல் காரணமா ? குழுமோதல் காரணமா ? சாதி ஊர் விடயங்கள் காரணமா ?

◆ ஸ்ரீலாங்காவுக்கு எதிரான சர்வதேச விசாரணைக்கு பிரித்தானியாவில் இது வரை 500 வரையான தமிழர்களே ஆதரவு தெரிவித்து ஒப்பமிட்டுள்ளனர். See the petition here: http://epetitions.direct.gov.uk/petitions/14586

ஊடகங்கள் பல மவுனம், துண்டு பிரசுரம் எதுவும் இல்லை , மக்கள் பிரதிநிதி வீடுவீடாக செல்வதைக் காணோம், ஆனால்,நாடுகடந்த அரசுக்கு, பிரித்தானியா தேர்தலில் கிடைத்த வாக்குகள் 76 ஆயிரத்துக்கும் அதிகம்.நாடு கடந்த அரசின் இரு கோஷ்டிகளும் தேர்தலில் இறங்கி வேலை செய்தது போல் ஏன் இந்த விடயத்தில் இறங்கி வேலை செய்ய வில்லை ? முன்னைய வேகத்தை விட அதிகமாக அல்லவா செயலபட்டிருக்க வேண்டும்?. வட்டுக் கோட்டை தீர்மானத்திற்கு கிடைத்த வாக்குகள் 70 ஆயிரம் வரை, வட்டுக் கோட்டை தீர்மானம் தொடர்பாக செயல் பட்டது போல் ஏன் இதில் மக்களவை ஆர்வம் காட்ட வில்லை? அதற்கு மேலாக அல்லவா செயல்ப்பட்டிருக்க வேண்டும்?

http://www.guardian.co.uk/world/2010/feb/01/british-tamil-state-sri-lanka

வட்டுக்கோட்டை தீர்மானம் தொடர்பாகவும், நாடுகடந்த அரசு தேர்தல் தொடர்பாகவும் பிரித்தானியா வாழ் தமிழர்கள் வேறு வேறு அணிகளாக பிரிந்து செயல் பட்டது உலகறிந்த உண்மை. இரண்டையும் சேர்த்தால் கிடைத்த மொத்த வாக்கு ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரத்துக்கும் அதிகம் (150000 ), ஜனனி ஜனநாயகத்துக்கு கிடைத்த வாக்குகள் 50000 இற்கு சற்று அதிகம், வேலை செய்தோர் பல ஆயிரம், துண்டு பிரசுரம், இணைய பிரச்சாரம் வேறு, ஜனனியும் அவருக்கு பின்னால் நின்ற சக்திகளும் ஏன் இந்த விடயத்தில் முன்னின்று மக்கள் மத்தியில் சென்று செயல்படவில்லை ? முன்னைய விட தீவிரமாக அல்லவா செயல்படவேண்டும்.ஆனால், சிறிலங்காவுக்கு எதிராக விசாரணைக்கு ஆதரவாக ஒப்பமிட்டவர் தொகை ஒரு 500 மட்டுமே !!!!! என்ன நடந்தது என்றே புரியவில்லை , தமிழர்களை அணி பிரித்த எல்லா சக்திகளுமே,சிறிலங்காவுக்கு எதிரான ஆக்க பூர்வமான விசாரணைக்கு முன்னின்று உழைக்க தவறுகின்றன. ஆனால் படம் காட்டுவதில் முன் நிற்கின்றன. தமிழர்களின் அரசியல் தலைமையை தமது கையில் வைத்திருக்க ஓடித் திரியும் இந்த சக்திகள் ஏன் குளோபல் தமிழ் போரம் (GTF). இவர்களது உள் நோக்கம் தான் என்ன என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது ?

முள்ளிவாய்க்காலுக்கு காரணமான சக்திகள் இவர்களை கையள்கின்றதோ என்ற சந்தேகம் நியாயமாகவே எழுகின்றது. பிரித்தானியாவில் வாழும் மூன்று லட்சத்துக்கு அதிகமான தமிழர்களில் ஆயிரத்துக்கு குறைவான தமிழர்கள் மட்டுமே இலங்கை அரசாங்கத்தின் மீதான சர்வதேச விசாரணையை கோருகின்றனர் என்ற அபிப்பிராயத்தை இலங்கை அரசு முன்னெடுக்க ஏதுவாகிவிடும். ஆக மொத்தம் ஏதாவதொரு அணி விசுவாசமாக ஈடுபட்டு சனல் 4 காட்சி ஆதாரங்களுடன் பிரித்தானியா வாழ் வேற்று இன மக்களையும் அணுகினால் இரண்டு இலட்சம் அல்ல அதற்கு மேலும் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே பிரித்தானியா வாழ் தமிழ் மக்களே , மற்றும் வேற்று நாட்டுகளில் வாழும் தமிழ் மக்களே, இந்த 'தலைவர்களை' தட்டி எழுப்புங்கள்.

குறிப்பு:-*TGTE வட கிழக்கு இலண்டன்-கிடைத்த வாக்குகள் 24705. TGTE மொத்தம் 76000 வாக்குகள்.நிறுத்தி வைக்கப்பட்ட வாக்குகளையும் சேர்த்தல் ஒரு இலட்சத்துக்கும் அதிகம்*

*-விசித்திரப்பிரியன்.*

## பரதநாட்டிய அரங்கேற்றம்









செல்விகள் சந்தியா-சாமந்தி சிவக்குமார் இரட்டையர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் 03-09-11 அன்று குறைடன் Fairfield மண்டபத்தில் அரங்கம் நிறைந்த மக்கள் மத்தியில் சிறப்புற இடம்பெற்றது. நடன ஆசிரியர் திருமதி மாலதி ஜெயநாயகம் அவர்களிடம் குறைடன் தமிழ்ப் பாடசாலையில் சிறுவயதிலிருந்து கற்றுவரும் இவ் இரட்டை சகோதரிகளின் நடன அரங்கேற்றம் புஸ்பாஞ்சலியுடன் ஆரம்பமாகி லண்டன் புலவர் சிவநாதனால் பிரத்தியோகமாக எழுதி, பாடகர் திரு.முரளி பார்த்தசாரதி அவர்களால் இசையமைக்கப்பட்ட 'சங்கரர்க்கு நாயகியே' கடவுள்வணக்கப்பாடலுக்கு அபிநயத்தமை அனைவரது நெஞ்சங்களையும் உருகவைத்தது. அழகிய நடன உடையில் ஜதிஸ்வரத்திற்கு ஆடிய ஆடலரசிகள், தமது ஆடற் பயிற்சிக்கு முத்திரை பதிக்குமாற்போல் 'நிதம் துதிக்கும் ஆஞ்சநேய சுவாமிக்கு' எனும் பாடலுக்கு இராமபிரானுக்கும் அநுமருக்கும் உள்ள நட்பின் ஆழத்தையும், அதன் பயனாக அநுமர் சீதையை இலங்காபுரியில் கண்டுபிடித்து அவரின் கணையாளியை ராமபிரானிடம் கையளிக்கும் காட்சியை வர்ணமாக வடிவமைத்து அக்காட்சியை அனைவரும் உணரும்விதமாக தத்ருபமாக நாட்டிய நடனம் புரிந்தமை ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. சந்தியா-சாமந்தி இருவருமே ஒருவருக்கொருவர் சளைக்காமல் ஆடி, திறமையை வெளிப்படுத்திய விதம் பாராட்டும்படியாக இருந்தது.

அதனைத்தொடர்ந்து 'கண்டநாள்முதலாய்காதல்பெருகுதடி' முரளிபார்த்தசாரதி குழைந்து குழைந்து பாட, சகோதரிகள் மிக அருமையான நளினமான மென் அபிநயத்துடன் ஆடியமை மனம் கவர்ந்தது. நாட்டிய வடிவமைப்பு, சஞ்சாரிகள், அருதி முத்திரைகள், பளிச்சென்று அடவுகள் பாராட்டும்படி இருந்தன. சிறப்பாக நாட்டியவடிவமைப்பு செய்திருந்த நடன ஆசிரியை மாலதி ஜெயநாயகன் அவர்களின் கைவண்ணத்தை, நிகழ்ச்சியில் நட்டுவாங்கம் செய்த விதம் நிருபித்திருந்தது.

நிகழ்ச்சி ஆரம்பம் முதல் இறுதிவரை அழகிய தமிழில் அருமையாக தொகுத்தளித்துக்கொண்டிருந்தார் பி.பி.சி தமிழோசை புகழ் விக்னராஜா.

*-தமிழொளி*

## கிருஷ்ண ஜெயந்தி நிகழ்வுகள்







Crawley அம்மன் ஆலயத்தில் ஸ்ரீ கிருஷ்ண மகா கும்பாபிஷேக நிகழ்வுகள் 18.08.11 அன்று நடைபெற்றன தொடர்ந்து 21,22-08-11 கிருஷ்ண ஜெயந்தி நிகழ்வுகளும் பக்தர்களின் தரிசனத்துடன் இனிதே நடைபெற்றன நிகழ்வுகளின போது எடுக்கப்பட்ட படங்களையே மேலே காண்கிறீர்கள்.

## இரதோற்சவ நிகழ்வுகள்








அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோவில் பதினொராம் ஆண்டு தேர்ப்பவனி விழாவும் ஒன்று கூடல் நிகழ்வுகளும் கடந்த 28.09.2011 அன்று இடம்பெற்றது.

நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்களையே மேலே காண்கிறீர்கள்

**கடன் சுமையால் கஷ்டப்படுகிறீர்களா?**

**தனிநபரோ... வியாபாரமோ...**

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...




BARNET 020 8216 2520 CROYDON 020 8150 9950 CITY OF LONDON 020 7 183 2696 CAMBS 01354 707 911

BBK PARTNERSHIP

www.bbkca.com

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS R3

# செல்வி சிந்துஜாவின் பரதநாட்டிய அரங்கேற்றமும் புல்லாங்குழல் அரங்கேற்றமும்







செல்வி சிந்துஜா சர்வானந்தத்தின் பரத நாட்டிய அரங்கேற்றமும் புல்லாங் குழல் அரங்கேற்றமும் கடந்த 03.09. 2011 சனிக்கிழமையன்று இடம்பெற்றது.

இவர் ஸ்ரீமத் கங்கா சுதாகரனினதும் (பரத நாட்டியம்) ஸ்ரீ பிச்சையப்பா குண வரதனின் (புல்லாங்குழல்) ஆகியோரின் மாணவியாவார். சனிக்கிழமை பி.ப. 4.30 க்கு ஆரம்பித்த இந்நிகழ்ச்சி பலரின் கரவேசங்களுடனும் பாராட்டுக்களுட னும் பி.ப 10:00 மணியளவில் இனிதே நிறைவுற்றது.

*தகவல் : இரசிகன்*

## கலாச்சாரம் என்னாச்சு.....

கலாச்சாரம் அவரவர் இனம்
சம்பந்தப்பட்டது
முன்பு இதே பேச்சாச்சு
மனிதன் கடல் கடந்தானோ
இல்லையோ கலாச்சாரம் கடல்
கடந்து ரெம்ப நாளாச்சு
கலாச்சாரம் இனம் சம்பந்தப்பட்டது
என்பது பொய்யாச்சு
அது கடல் கடந்து இன்று
நம்மவர்க்கு சம்பந்தம் தேடும்
காலமாச்சு

ஆணுக்குப் பெண்ணும்
வெளிநாட்டுக் கலப்புடன்
பெண்ணுக்கு ஆணும் என்றும்
முடிவாச்சு
பிள்ளையும் குட்டியும் என்றும்
முடிஞ்சாச்சு
வளரும் பருவத்தில் எம்மவர்
மேற்கு நாட்டவர் என்கிறார்
எம்மவர் வெள்ளையர் எம்மக்கள்
என்கிறார்.

வேடிக்கை விநோதம் என்ற
காலம் போயாச்சு
வெள்ளையார் நாடே அங்கங்கு
எம்மவர்க்கு நாடாச்சு
அங்கு எம்மொழிக்கும்
மதத்துக்கும் என்னாச்சு

-எழுதியது
*சிவ சிவா*

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**SEP 10 SATURDAY**

*பொன்மாலைப் பொழுது*

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், ஆசிரியர் சங்கம்(ஐ.இ) இணைந்து வழங்கும் 18வது பொன் மாலைப் பொழுது. முன்னணிப் பாடகி சுசித்திரா மற்றும் இசையமைப்பாளர் அல்பா ராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவிருக்கின்றனர்.

இடம்: Fairfield Halls, Ashcroft Theater, Park lane,Croydon, Surrey, CR01DG.

நேரம்: மாலை 6.30மணி முதல்

**SEP 18 SUNDAY**

*சங்கமம்-2011*

தென் லண்டன் தமிழர் நலன் நிறை அமைப்பு வழங்கும் சங்கமம் நிகழ்வுகள். நிகழ்வில் தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்கள், 'இனினிசை இரவு' இசை நிகழ்ச்சி, சிறுவர் விளையாட்டுப் போட்டிகள் என்பன இடம்பெறும்.

அனுமதி: இலவசம்

நேரம்: காலை 09:00 முதல் மாலை 09.00 மணி வரை

இடம்: 100, London Road, Morden, SM4 5QU

**SEP 19 MONDAY**

*பொங்குதமிழ் பேரணி*

பலம் வாய்ந்த சர்வதேச சக்தியாக அணிதிரண்டு எமது மக்களின் விடிவுக்காய் Geneveவில் அமைந்திருக்கும் UNO தலைமைச் செயலகம் முன்பாக நடாத்தப்படும் மாபெரும் பொங்கு தமிழ்ப் போராட்டம்.

* பேரணிக்கு இங்கிலாந்திலிருந்து பேரூந்தில் செல்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

நேரம்: காலை மாலை 2:00 மணி முதல்

தொடர்புகளுக்கு: தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

North West: 075 5033 6408 South East: 075 5033 6412
South West: 075 5033 6414 North East: 075 3518 6315
Out of London: 075 5033 6658



# பயணம்.......

சாத்திரி
(ஒரு பேப்பர்)

பாகம்—02

விமானம் இந்திய நேரம் நள்ளிரவு 12 மணிக்கு தரையிறங்கவேண்டும் விமானம் மும்பை சத்திரபதி சிவாஜி விமான நிலையத்தில் இறங்கத் தொடங்குகின்றது என்கிற விமானியின் அறிவிப்பை கேட்டதுமே மனைவின் முகம் இறுகிப் போயிருந்தது.மனதிற்குள் ஊரிலுள்ள எல்லா கோயிலிற்கும் நேத்திக்கடன் வைத்திருப்பாள் என எனக்கு தெரியும் .விமானம் தரை தட்டியதும் உங்கடை சினேகிதங்களிற்கொல்லாம் நீங்கள் வாற விபரம் குடுத்திட்டீங்கள்தானே ஒரு பிரச்சனையும் வராதுதானே என்றாள். ஒரு பிரச்சனையுமில்லை பேசாமல் வா என்று அவளை அதட்டினாலும் எனக்கு ஏ சி குளிரிலும் வியர்ப்பதைப்போல ஒரு உணர்வு இருந்தது.

விமானம் நின்றதும் பயணிகள் வெளியேறத் தொடங்கினார்கள். முதல் வகுப்பு பகுதியிலிருந்த எனக்கு தெரிந்த நம்மவர் எனக்காக காத்திருந்தவர் என்னைக் கண்டதும் முதலில் எங்கை இந்தியாவுக்கோ என்று கேட்டு அசடு வழிந்ததை மனதில் வைத்து இந்தத் தடவை எங்கை மெட்ராசுக்கோ என கேட்காமல் மிக அவதானமாக..அடுத்த மெட்ராஸ் பிளேனுக்கு இன்னும் 6 மணித்தியாலம் காத்திருக்க வேணும் வா ஏதாவது லோஞ்சிலை போய் ம குடிச்சபடி கதைக்கலாமென்றவரிற்கு. நான் மெட்ராஸ் போகேல்லை இஞ்சை பொம்பேயிலை வெளியாலை போறன் என்றதும். பொம்பேயிலையா? 'யார் இங்கை இருக்கினம் ஏதும் பிசினஸ்சோ' என்றவர் முடிக்கு முதலேயே ஓமோம் இஞ்சை பால்தக்கரேயை ஒருக்கா சந்திக்கவேணும் திரும்பவும் பிரான்ஸ் வந்ததும் போனடிக்கிறன் சந்திப்போம் என்று விடை பெற்றுக் கொண்டு குடிவரவு குடியகல்வு (இமிக்கிறேசன்) பகுதியை நோக்கி நடக்க ஆரம்பித்தேன்.

பால்தக்கரேயா? என்று தலையை சொறிந்தவர் நான் உண்மையிலேயே வெளியேதான் போகிறேனா என எட்டியெட்டிப்பார்த்து உறுதி செய்தவர் தனது விமானம் மாறும் பக்கத்தை தேடிப் போய்விட்டார். இமிக்கிறேசனில் எனது முறை வந்தது நான் எனது மற்றும் மனைவியின் கடவுச்சீட்டுக்களை அதிகாரியிடம் நீட்டினேன். எனது கடவுச்சீட்டை பிரித்து விசாவினைப் பார்த்தவர் கடவுச்சீட்டை கணனி இயந்திரத்தில் ஒரு இழுப்பு இழுத்து பார்த்துவிட்டு வெளியேறும் சீலை எடுத்து ஒரு குத்துக் குத்தினார் அப்பொழுது மனைவியை லேசாய் திரும்பிப் பார்த்தேன் அப்பொழுழுதான் அவன் கண்களில் கொஞ்சம் மகிழ்ச்சி இழை யோடியது. அடுத்ததாய் மனைவியின் கடவுச்சீட்டை பிரித்தவர் முன்னும் பின்னுமாய் பிரட்டினார் மனைவியையும் கடவுச்சீட்டையும் மாறி மாறிப் பார்த்தார் .பின்னர் எங்கே பழைய பாஸ்போட் என்றார். பழைய பாஸ்போட் பிரான்சில். கொண்டுவரவில்லை என நான் பதில் சொன்னதுமே மனைவி முந்திக்கொண்டு அது முடிந்ததால்தான் பிரான்ஸ் இந்திய தூதரகத்தில புதிதாய் எடுத்தோம் என்றான். கடுப்பான அதிகாரி அதுஎனக்கு தெரியும் அதுதான் பழையதை கேக்கிறேன் என தொடங்கியவர் அதுவரை புழக்கத்தில் இருந்த ஆங்கிலம் இருவரிடமும் கிந்திக்கு தாவியது. எனக்கு பாதி புரிந்ததும் புரியாமலும் போகவே அப்பாடா நம்ம பிரச்சனை முடிஞ்சுது நான் ஒரு ஓரமாய் நிக்கலாமென ஒதுங்கிக்கொண்டாலும் என்னைத் தான் ஏதாவது நோண்டுவார்கள் என நினைத்துப் போனால் மனைவியை போட்டு நோண்டிக் கொண்டிருந்தது எனக்கு சிரிப்பாகவும் இருந்தது. மனைவிக்கும் அவரிற்குமான சில நிமிட வாக்குவாதத்தின் பின்னர்.மனைவியின் கடவுச்சீட்டிலும் சீலை ஓங்கி ஒரு குத்தி அனுப்பி விட்டார்.

வெளியே வந்ததும் விமான நிலைய வாசலில் பெரிய மண்மூடைகள் அடுக்கப்பட்ட பாதுகாப்பரண்களில் இந்திய இராணுவத்தினர் காவலில் இருந்தனர். இலங்கையில் இந்தியப்படை காலத்தில் எஸ்.எல். ஆர். மற்றும் எஸ்.எம்.ஜி துப்பாக்கிகளுடன் மட்டுமே பார்த்துப் பழக்கப்பட்ட இந்திய இராணுவத்தின் கைகளில் ஏ.கே அளவு56 தூக்கியபடி அங்குமிங்கும் திரிந்தனர். ஆனால் வெளியில் காவல்த்துறையினரின் கைகளில் இன்னமும் மூங்கில் கொட்டான்களுடன்தான் திரிகின்றார்கள். வெளியே வந்ததும் வரவேற்பு பகுதியில் ஆயிரக்கணக்கானவர்கள் நின்றிருந்தார்கள்.பாரிசில் சைபர் பாகை குளிரில் புறப்பட்ட எனக்கு 33 பாகை வெப்பம் முகத்திலறைந்து வரவேற்றது. விமான நிலையத்தில் எங்களை வரவேற்பதற்காக மனைவியின் தம்பியும் எனது நண்பன் டோனியலும் (டானியல்)வந்திருந்தார்கள். அங்கிருந்த கூட்டத்தில் அவர்களை தேடி கண்டு பிடிப்பதே சிரமமாக இருந்தது அங்குமிங்கும் மிலாந்தியபடி நின்ற என்னை பார்த்து சியாம் என கத்தியபடியே பூங்கொத்துடன் ஓடிவந்த டோனியல் மனைவியின் கையில் பூங்கொத்தினை திணித்துவிட்டு என்னைக்கட்டிப் பிடித்துக் கொண்டான். ஒரு சில செக்கன் மௌனம் மட்டும் பேசியது எங்களை விடுவித்துக் கொண்டு ஒருவரையொருவர் நேராக பார்த் போது எங்கள் இருவரின் கண்களுமே கலங்கியிருந்தது.

டோனியலால் அடக்கமுடியவில்லை அழுதே விட்டான் அவனை தட்டி தேற்றியபடி மனைவியின் சகோதரரையும் தேடிப்பிடித்தோம். அங்கேயும் சில நிமிட பாசபரிமாற்றங்கள் முடிந்த பின்னர் ஒரு வாடைகைக் காரில் ஏறினோம். கார் நகரத் தொடங்கியது. ஆசியாவின் மிகப் பெரிய சேரி என்று சொல்லப்படும் தாராவிப் பகுதியில்தான் எனது நண்பன் குடியிருந்தான். எனக்காக அந்தப் பகுதியிலேயே ஒரு விடுதியை பதிவு செய்து வைத்திருந்தான். விடுதி நோக்கி போய்கொண்டிருக்கும் போதே டோனியலின் பேச்சு முழுதுமே நடந்து முடிந்த இறுதி யுத்தம் பற்றியதாகவேயிருந்தது.இடையிடை எல்லாமே வீணாய் போச்சுதே என்று சொல்லிக்கொண்டே வந்தான். நானும் வெளியால் நோட்டம் விட்டபடியே அவனிற்கும் பதில் சொல்லிக்கொண்டிருந்தேன். மும்பை வெகுவாகவே மாறி விட்டிருந்தது அதிவேக வீதிகள்.. அகலப்படுத்தப்பட்ட சாலைகள் கட்டிடங்கள் என முன்னேறியிருந்தாலும் அதிகமான வாகனங்கள் புழுதி என்றும் முன்னேறியிருந்தது.

நாங்கள் விடுதியை வந்தடைந்ததும் மனைவியும் அவளது சகோதரரையும் விடுதியில் தங்க வைத்துவிட்டுநான் டோனியலுடன் அருகேயிருந்த அவனது அறைக்குச் சென்றேன். குளவிக் கூடுகள் போல் அமைக்கப்பட்டிருந்த குடியிருப்புக்கள் நாற்றமெடுத்த சாக்கடை வாசனை குறுகலான பாதை தாண்டி அவனது அறைக்குள் நுளையும் போது பார்த்துவா தலையில் அடிபடப்போகுது என்றான்.

குனிந்து உள்ளே நுளைந்தேன். ஒரு பிளாஸ்ரிக் பாயை விரித்துவிட்டு உக்காரு என்றவன் ஒரு துணிப்பையிலிருந்து இரண்டு பியரை எடுத்து வாயால் கடித்து துறந்தபடி கிளாஸ் வேணுமா என்றான். வேண்டாமென சொல்லி ஒரு போத்தலை வாங்கிய நான் அறையினை ஒருதடைவை மேய்ந்தேன்.ஒரு 3 மீற்றர் நீளம் இரண்டு மீற்றர் அகலம் மட்டுமே கொண்டதொரு அறை டோனியலும் அவனது நண்பனும் குடியிருந்தனர் ஒரு சிறிய தொலைக்காட்சிப்பெட்டி எந்தத் தளபாடங்களும் கிடையாது சுவரில் ஒரு கலண்டர் அதில் சிரித்தபடி ஐஸ்வர்யாராய். சிறிய முகம் பார்க்கும் கண்ணாடி இரண்டு உடுப்புப் பெட்டிகள் இவ்வளவு தான். இந்தப் பகுதிகள் எனக்கு ஏற்கனவே பழகியிருந்தாலும் சுத்தமாக இருந்த ஐரோப்பாவில் நீண்டகாலம் இருந்துவிட்டு சாக்கடை நாத்தமும் அழுக்கான ஒரு இடத்தில் நுளையும் போது கொஞ்சம் சங்கடமாகத்தானிருந்தது. அதனை நண்பனிடம் காட்டிக்கொள்ளா விட்டாலும் அங்கிருந்து வெளியேறவேண்டும் போல இருந்தது. வாயேன் முன்னையை போல கடற்கரையில் போயிருந்து பியரடிக்கலாமென்றேன். கடற்கரை முன்னையை போல இல்லடா. அந்த அட்டாக்கிற்கு பிறகு (மும்பைத்தாக்குதல்)இரவிலை சரியான கெடுபிடி கண்டபாட்டிற்கு போலிஸ்காரன் அடிப்பான் இரவு நேரத்திலை கடற்கரையோரமா ஒதுங்கிற ஜோடிகளை கூட போலிஸ் விட்டுவைக்கிறதில்லை. நீயும் வெளிநாட்டிலையிருந்துவந்து அடிவாங்கப் போறியா என்றான்.

போலிசிடம் அடிவாங்கிறதை விட இந்த நாத்தமே பறவாயில்லை என்று தோன்றியது. பியரை உறிஞ்சினேன். என்னடா இப்பிடியாயிட்டுதே என்கிற டோனியலின் புலம்பலை தவிர்ப்பதற்காக பொம்பே இப்ப எப்பிடி என்று தொடக்கினேன். பொம்பே இப்பொழுது கொலைகள் கொள்ளைகள் குறைந்திருக்கிறது. ஆனாலும் தாதா கும்பல்களின் கள்ள வியாபாரங்கள் தொடர்ந்து நடக்கிறது.அவர்களிற்குள் மோதல்கள் குறைந்துள்ளது.கலவரங்களைதொடர்ந்து பெரும்பாலான முஸ்லிம்கள் பொம்பேயை விட்டு வெளியிடங்களிற்கு சென்றுவிட்டார்கள். என்று மும்பைபையை பற்றி பேசினாலும் அடிக்கடி முள்ளிவாய்க்காலிற்கும் போய் வந்தோம் நேரம் அதிகாலை 5 மணியாகிவிட்டிருந்தது என்னை விடுதிவரை கொண்டு வந்து விட்டவன் மறுநாள் சந்திப்பதாக விடைபெற்றான்.

இந்த இந்தியப் பயணத்தில் நான் பல நண்பர்களையும் சந்தித்திருந்தாலும் எமக்கு ஒரு தேசம் தேவை என்பதற்காக தங்கள் வாழ்வு முழுவதையுமே அர்ப்பணித்த மூன்று முக்கியமான நண்பர்களை பற்றி இந்தப் பகுதியில் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

*அந்த மூன்று பேரில் முதலாவதாக நான் இப்பொழுது சந்தித்திருப்பவன்தான் டோனியல் இவனைப்பற்றி பயணத்தில்......*

*-தொடரும்.*

## *செங்கொடி - சுழன்றாடும் பெருந்தீ*



துயரங்களாலான உன் அம்மாவின்
கந்தல் சேலை
காற்றில் அலைந்து பற்றிய தீ நீ!
பற்றிக் கொண்ட தீயுடன்
அவள் தெருவிறங்கி ஓடுகையில்
கடைசி நினைவாய்
அவள் பாதங்களைச் சுட்டெரித்த
தார்ச்சாலை ஆனவளும் நீ
தீப்பந்தமாய் அவள் ஓடி ஓடி எரிந்த
அத்திருப்பத்தைக் கடக்கும் போதெல்லாம்
ஓர் எரிநட்சத்திரம் உன் மண்டைக்குள்
பரபரவென்று பற்றி எரிகிறது என்பாய்

உன் தாயின் நினைவு பீடித்த பொழுதுகளை
அக்குளக்கரையில் கழித்தோம் நீயும் நானும்
அவள் அழுத கண்ணீரானாலானது என்பதால்
நம்மை மீன்களாக்க முடியாது
உடல் துடித்துக் கிடந்தோம்
கரையின் அனலில்
நினைவில் காய்ந்த சூரியனை
அக்கண்ணீர்க் குளத்திற்குள்
உருட்டிவிட்டோம்.
இரவின் நீர்வெளியிலும் பூத்திருந்தது
நட்சத்திரக் கன்களுடன் அச்சூரியன்
தீக்கங்குகள் ஒருபோதும் அணைவதே
இல்லை

கனவிற்குள் நின்று எரியும் தீயை அணைக்க
உறக்கம் கலைத்து எழுந்தாய் அன்றும்
காற்றில் உன் கைகளை வீசினாய்
நினைவுகளைப் பற்றிக் கொண்ட
நெருப்பை அணைக்கப் போராடினாய்
ஒரு கோடி மின்மினிப்பூச்சிகளை
உன் உடலிலிருந்து விடுவித்தாய்!

ஒரு வார்த்தை சொல்லேன்!
தீக்குள் நீ சுழன்றாடிய போது
யார் கையைப் பற்றிக்கொள்ள
நினைத்தாய்?
யாரும் யாருக்கும்
கை நீட்டுவதில்லை இப்பொழுதெல்லாம்
மொட்டு அவிழாக் கொடிகளைப் போல
எல்லோர் கைகளும்
தனியே புரள்கின்றன தரையில்

தீ பற்றிய உன் செங்கைகளேனும்
உயரே மிக உயரே இறக்கைகளாகட்டும்!

– குட்டி ரேவதி.



## கொஞ்சும் தமிழில் பிஞ்சுக் குழந்தைகள்

தமிழ் நாட்டிலிருந்து ஒலிபரப்பாகும் தொலைக்காட்சிகள் பரதநாட்டிய நிகழ்ச்சிகள் அரங்கேற்றங்கள் ஆகியவற்றில் ஆங்கிலம் கலக்காத தமிழைக் கேட்பது அருமையிலும் அருமை. இதே தோரனையில் இன்னும் சில காலம் நீடித்தால் எமது வருங்காலச் சந்ததியின் வாயிலிருந்து தமிழைக் கேட்கவே முடியாமல் போய்விடும்.

இந்த நிலைமை ஏற்கெனவே புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியில் காணக்கூடியதாக இருக்கின்றது. இங்கு இருபது வருடங்களுக்கு முன்னதாக வந்தவர்களின் பிள்ளைகளின் வாயில் தமிழ் தப்பித்தவறி வந்தாலும் ஆங்கிலம் கலந்த தமிழாகவே வரும். என்ன செய்வது சிறுபிள்ளைகளின் தப்பல்லவே. வீட்டில் பேசுவதும் ஆங்கிலம். வீதியில் பேசுவதும் ஆங்கிலம். பள்ளிக்கூடத்தில் என்ன தமிழிலா பாடம் நடத்துகிறார்கள். அதனால்தான் வீட்டிலாவது தமிழ் பேசுங்கள் என்று அழுதழுது கேட்டாலும் செவிடர் காதில் ஊதிய சங்கான கதைதான்.

இங்குள்ள பிள்ளைகளின் கதி இதுவென்றால் தமிழ் தம்பதிகளுக்கே பிறந்து தமிழ்த் தாயின் பாலைக்குடித்து தமிழிலே பேசி தமிழிலே வளர்ந்து மதுரையில் சங்கம் வைத்து வளர்த்த தமிழை தமிழ் நாட்டிலேயே தவிர்த்து ஆங்கில மோகத்தில் மயங்கி ஆங்கிலத்தில் பேசுவதையே கௌரவமாக கருதும் தமிழ் நாட்டுப் பிள்ளைகளை வழி நடத்தியது யார்?

எனினும் சமீபத்தில் நான் முகம் கொடுத்த இரண்டு சம்பவங்கள் தமிழ் இனிதே வளரும் என்ற நம்பிக்கையைத் தருகின்றன. ஆடம்பரமான ஒருதிருமணவிழாவுக்கு அழைப்புக் கிடைத்தது. அங்கு சமூகமளிக்க வாய்ப்புக் கிடைத்தது. ஐரோப்பிய நாகரீகத்துக்கமைய நடந்த திருமண விழாவில் 10 வயதுக்குள் மதிப்பிடக்கூடிய ஒரு சிறுமி அழகான தமிழில் அச்சொட்டாக கடவுள் வணக்கம் பாடி எல்லோர் மனதையும் கவர்ந்தது மறக்க முடியதா நிகழ்வாக இருந்தது. இன்னொரு சந்தர்ப்பத்தில் எனது நண்பர் ஒருவரை தொலைபேசியில் அழைத்தபோது அவரது எட்டு வயதே எட்டாத அருமை மகன் இனித தமிழில் அழைப்பை ஏற்று அழகாகப்பேசியது எனது மனதைக் கிறங்கச் செய்தது.

இதற்கெல்லாம் வடிகால் இன்று பிரித்தானியாவில் ஆங்காங்கு தொண்டு நிறுவனங்களாக இயங்கும் தமிழ் பாடசாலைகள் என்பதில் புலம்பெயர்ந்த தமிழர்கள் பெருமை அடையலாம். வளர்க இவர்கள் தொண்டு. வாழ்க இனிய தமிழ்.

## தன்னம்பிக்கை

மனதில் உறுதி வேண்டும் என பாரதியார் பாடி வைத்த பாடல்தான் ஞாபகத்துக்கு வருகிறது. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் கூறிவைத்த அறிவுரை இன்றுமருத்துவ ஆராய்ச்சிகளால் முன்வைக்கப்படுகின்றது.

மார்பக அறுவைச் சிகிச்சை புற்றுநோய்களுக்கான மருத்துவம் சிறுநீரகக் கோளாறு போன்ற

**தகவல் களஞ்சியம்**

**வைத்திருப்பவர் : உமா மகாலிங்கம்**

உடல் உபாதைகளுக்கு ஆளாக்கப்பட்ட நோயாளர்கள் குணமடைய எடுக்கும் காலத்தை மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் வெகு உன்னிப்பாக அவதானித்துள்ளார்கள். உடலில் செலுத்தப்படும் நோய் எதிர்ப்பு மாத்திரைகளை விட நோயாளர்களிடம் காணப்படும் தன்னம்பிக்கைதான் (Positive Thinking) அவரவர் சக்திகளுக்கேற்றவாறு நோய்களிடமிருந்து விடைபெற வெகுவாக உதவியுள்ளதை ஆராய்ச்சிக்குட்படுத்திய ஆட்களிடமிருந்து அறிந்துள்ளதாக பிற்ங்பேர்க் நகரத்தைச் சேர்ந்த Camegie Mehion பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர் David Crosswell அவர்களும் அவரது குழுவினரும் நிரூபித்துள்ளனர்.

இவர்களின் ஆராய்ச்சிப்படி இயற்கையாக படைக்கப்பட்ட உடலில் தானாகவே இயங்கக் கூடிய எதிர்ப்பு சக்திகள் பிறப்பில் இருந்தே தமது கடமைகளைப் பிசகாமல் செய்த வண்ணம் இருக்கின்றன.

உடலுக்கு வேண்டிய சக்தியை உணவாக உட்கொண்டாலும் உள்ளே போகும் உணவை சக்தியாக மாற்றி இரத்த ஓட்டமாக உடல் பூராவும் பரவ ஓயாது உறங்காது உழைக்கும் உடலின் அவயங்கள் நோய்களால் பீடிக்கப் படும்போது மனம் தளர்வதனால்நோயின் சொரேம் உணரப்படுகின்றது.

தமது ஆராய்ச்சிக்குட்படுத்திய நோயாளர்களில் விரைவில் குணமடைந்த நபர்களை கூடிய நாட்களாக அவஸ்தைப்படுகிறவர்களையும் மருத்துவ சிகிச்சை பலனளிக்காது போனவர்களின் மனோசக்தியை ஆராய்ந்தபோது மனதில் உறுதியும் நம்பிக்கையும் சாதகமாகச் சிந்திக்கும் திறனும் கொண்ட நபர்கள் அவர்களைப் பீடித்த நோய்களிலிருந்து வெகுவிரைவாகக் குணமடைந்துள்ளதாகவும் மனவலிமை குன்றிய தாழ்வு மனப்பான்மையுடைய எதையும் பாதகமாக சிந்திப்பவர்கள் நோய்களில் இருந்து விடுபட வெகுகாலம் எடுத்துள்ளதாகவும் அறிந்துள்ளார்.

**ஆகவே நோய் எதிர்ப்பு மாத்திரைகளை விட மனதில் உருவாக்கப்படும் தன்னப்பிக்கையும் மன உறுதியும்தான் மிகச் சிறந்த நிவாரணி என்பதை ஆணித்தரமாக ஆராய்ச்சியாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.**

இதைத்தான் காலம் காலமாக யோகப்பயிற்சிகளும் நினைவூட்டுகின்றன. நேயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

## எறுப்புகள் எடுக்கும் தீர்மானம்

இயற்கையின் படைப்பில் எறுப்புகள் சிறிதாக இருந்தாலும் பெரிய பெரிய அறிவுரைகளை அவற்றின் நடமாட்டத்தின் மூலம் மனித சமூதாயத்துக்குத் தருவது அவற்றின் செயல்களை அவதானித்தவர்கள் கூறத்தவறவில்லை. எறுப்புகளின் சுறுசுறுப்பான நடமாட்டம் மனித வர்க்கத்துக்கு ஒரு முன் உதாரணம் இதை விட வேறு சில உண்மைகளும் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறிகின்றார்கள்.

கூட்டம் கூட்டமாக வாழும் எறும்புகள் அவை எடுக்கும் தீர்மானங்கள் எப்பொழுதும் ஒருமித்த கூட்டுமுடிவாகவே இருக்கும் என்பதே இதுவரை அவதானித்த கண்காணிப்பு. இது உண்மையல்ல. சூழ்நிலை மாறினால் அவை தனித்தனியாகவும் முடிவுகள் எடுக்கும் என்பதை ஆராய்ச்சியாளர்கள் இப்போது கண்டுபிடித்துள்ளார்கள். இதன் அறிக்கை சமீபத்தில் வெளிவந்த The Journal of Experimental Biology என்ற பதிவேட்டில் வெளிவந்துள்ளது.

இவர்களின் ஆராய்ச்சியில் Temno thora Albipennis என்ற வகை எறுப்புகள் ஈடுபடுத்தப்பட்டன. இந்தவகை எறும்புகள் குடியிருப்பதற்காக செயற்கையான கூடுகள் கட்டப்பட்டன. அக்குடியிருப்புக்களில் எறும்புகள் கூடி வாழ்ந்த போது ஒரு வாரகாலத்தின் பின் அந்த கூடுகள் அழிக்கப்பட்டன. அந்த நேரத்தில் சூழ்நிலை காரணமாக எறும்புகள் சிதறடிக்கப்பட்டன. கூட்டமாக முடிவெடுக்கும் எறும்புகள் அந்தச் சமயத்தில் தனித்தனியாகப் பிரிந்து எங்கெல்லாம் தமக்கு வசதியாக இடம் கிடைக்குமோ அந்த இடங்களைத் தேடி நகர ஆரம்பித்தன. ஆகவே எறும்புகளின் ஒருமித்த கூட்டுத்தீர்மானம் சூழ்நிலைகளால் மாறக்கூடியதாக இருக்கும் என்பதை அறியக்கூடியதாக இருந்தது. இது மனித வர்க்கத்துக்கும் பொருந்துவதாக இருக்கிறது.

## குட்பாய் லண்டன்..

(10ம் பக்கத் தொடர்ச்சி)

3-4 எண்டு பெத்துப் போட்டு உலகத்தில உள்ள பெனிபிட் எல்லாம் எடுத்துக் கொண்டு இடைக்கிடை கள்ள வேலையும் செய்து கொண்டு வீட்டில சும்மா இருக்கிதுகளே அதுகள் தான் அள்ளை கொள்ளையா வரும். நீர்நம்பாட்டி நான் வாசலில நிண்டு படம் எடுத்துத் தாறன். அடுத்த முறை பேப்பரில போடும்.

• *கேள்வி..இந்த நிகழ்ச்சிக்கு யாராவது எதிர்ப்பு தெரிவித்தார்களா?*

பதில்: உதை யார் தம்பி எதிர்க்க போறாங்கள்? காங்பொடியள்தான் பிரச்சனைபடுத்துவாங்கள். அவங்களுக்கு நாங்கள் பிரீ டிக்கட் குடுத்திருக்கிறம். எல்லா காங் பொடியங்களையும் தெரியாத படியால் டிக்கட் கிடைக்காம யாரும் இருந்தால் தாராளமாக எங்களை தொடர்பு கொள்ளலாம். பிரீ டிக்கட் நிச்சயம். குறைடன் தமிழ் கடைக்காரான் சொன்னார் உவங்களுக்கு பயந்து ஏன் பிரீ டிக்கட் குடுக்கிறாய் எண்டு.

உவங்கள் எல்லாம் பயந்த பீச்சாண்டிகளாடாப்பா ரயட்ஸ் நடந்த நேரம் ஒரு நாயும் வரல்ல எல்லாம் ஓடி ஒழிச்சிட்டாங்கள்.இந்த பக்கம். ஓசிச் சோடா குடிக்க மட்டும் வருங்கள் எண்டு. நான் ஏன் ரிஸ்க் எடுப்பான் எண்டு குடுக்கிறன்.

• *கேள்வி: உங்கடை புறோக்கிறாம் ரிக்கற்றிலை கேள்வி பதில் குலுக்கல் பரிசு வேறை குடுக்கிறதாய் அறிவிச்சிருக்கிறீங்கள் அதைப்பற்றி....*

பதில்: எங்கை போனாலும் எதையாவது ஓசியிலை எதிர்பாக்கிறது எங்கடை சனத்தின்ரை வழக்கம் தானே. லண்டனிலை கோயிலுக்கு போனலே அன்ன தானம் இல்லையே? எண்டு கேக்கிறஆக்கள் அதலை தான் ரிக்கற்றிலை சில கேள்வியள் போட்டிருக்கிறம். அதுக்கு சரியான பதிலை சொல்லுறவைக்கு குலுக்கல் முறையிலை சில ஆறுதல் பரிசுகள் குடுப்பம்.

கேள்வி..குலுக்கல் முறை எண்டிறியள். குலுக்கிறது யார் நீங்களா ஆறுதல் பரிசு என்னென்ன?

பதில் ..நான் குலுக்கினால் ஆர் தம்பி பாப்பாங்கள். குலுக்கப்போவது நமீதா.. பரிசு ஆறுதல் பரிசுதானே அதாலை பரிசு விழுந்தவையளிட்டை விலாசத்தை வாங்கி வைச்சிட்டு ஆறுதலாய் அனுப்புறம் எண்டு செல்லி விடுவம்.

நன்றிகள்.

*உங்கள் கடுமையான கலைச் சேவைகளிற்கு மத்தியிலும். இதுவரை எமக்காக நேரம் ஒதுக்கி பொறுமையாகப் பதில் அளித்த மா(மா)மணிக்கு எங்கள் சிரம் தாழ்ந்த நன்றிகள்.*

◆ ◆ ◆ ◆ ◆

றிக்கற்றின் பின்னால் உள்ள சில கேள்விகள்,

ஒரே நேரத்தில் பல நூறு பேரை அடிக்கும் பலமுள்ள ஹீரோ யார் ?

*1) ரஜனிகாந்த்*

*2) விஜயகாந்த்*

*3) அஜித்*

*4) விஜய்*

தமிழ் சினிமாவில் இடுப்பைக் காட்டாத நடிகை யார்?

*1)நமீதா*

*2)ஸ்ரேயா*

*3) தமன்னா*

*4) மேற்கூறிய யாருமல்ல*

ரகிகர்களே!!! பதில் செல்லத் தயாராகுங்கள் பரிசுகளை அள்ளுங்கள்.

*நன்றி: பருப்பு இணையம்*



## கோடை விளையாட்டு விழா



தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடாத்திய 60 பழைய மாணவர் சங்கங்களின் கோடை விழையாட்டு விழா கடந்த 20ம் திகதி திங்கட் கிழமையன்று நடைபெற்றது. துடுப்பாட்டப் போட்டிகள் வலைப்பந்தாட்டப் போட்டிகள் கூடைப்பந்தாட்டப்போட்டிகள் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் என்பன நடைபெற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன

இவ் விளையாட்டு விழாவானது கடந்த இருபது வருடங்களாக தொடர்ச்சியாக நடைபெற்றுவருவது இதன் சிறப்பம்சமாகும். நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்களையே மேலே காண்கிறீர்கள்.

# உங்கள் பிரயாணத் தேவைகளுக்கு எங்களை உடன் அழையுங்கள்!!!

## BEST deal ever

**£ 127 + TAXES**

FLY TO COLOMBO ON
ROYAL JORDANIAN
WITH FREE ONE DAY
ACCOMMODATION
IN AMMAN

## AMAZING OFFERS ON CHARTER AND SCHEDULE FLIGHTS

| | |
|---|---|
| Manila | £ 360 + Taxes |
| Kathmandu | £ 390 + Taxes |
| Kualalumpur | £ 355 + Taxes |
| Auckland | £ 370 + Taxes |
| Sydney | £ 440 + Taxes |
| Melbourne | £ 385 + Taxes |
| Lagos | £ 100 + Taxes |
| New York | £ 150 + Taxes |
| Accra | £ 110 + Taxes |
| Perth | £ 575 + Taxes |
| Nairobi | £ 170 + Taxes |
| Toronto | £ 170 + Taxes |
| Johannesburg | £ 170 + Taxes |
| Hong Kong | £ 310 + Taxes |
| Brisbane | £ 380 + Taxes |

## * * * SEAT SALE FOR WINTER 2011* * *

விசேட சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முற்கூட்டியே பதிவு செய்யுங்கள்!!

CHENNAI - £300 + TAXES
TRICHI - £305 + TAXES
DELHI - £365 + TAXES

BOMBAY - £365 + TAXES
BANGALORE - £370 + TAXES
DHAKA - £365 + TAXES

BEIJING - £365 + TAXES
HONG KONG - £370 + TAXES
DUBAI - £365 + TAXES

SINGAPORE - £275 + TAXES
BANGKOK - £475 + TAXES
TOKYO -£290 + TAXES

We accept VISA

## மிகக் குறைந்த விலையில் விடுமுறைப் பொதிகள்!!!!!




உங்கள் கனவு
விடுமுறைச்
சுற்றுலாவை
எங்களால்
நனவாக்க முடியும்!!

× Cheap Flights × Cheap Hotels × Car Hire × Insurance

All fares excluding taxes and are subject to availability.
*Terms and conditions may apply

உங்களுக்குரிய விபரங்களைத் தமிழிலும் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

# TIME TRAVEL

www.timetraveluk.com

CALL US TODAY
**020 8429 8025**
**020 8429 8333**

*Head Office*
**TT Rayners Lane**
**297 Rayners Lane**
**Pinner HA5 5EH**
**Tel 0208 429 8333**

**TT Kingsbury**
**530 Kingsbury Road**
**London NW9 9HE**
**Tel 0208 6216793**

Tooting Branch
0208 1234427

IATA ABTA

# அவையளுக்கு விக்கேலாது ஆனால் சி...னாக்கு விக்கலாம்.

**சாத்திரி**
*(ஒரு பேப்பர்)*

தமிழர் நிலங்கள் பறிபோகின்றது. புலம்பெயர் தமிழர்களின் நிலங்களை இலங்கையரசு கையகப்படுத்த முயற்சி. இடம் பெயர்ந்த மக்களின் காணிகளில் இராணுவம். மீள் குடியேறச் சென்ற மக்களை இராணுவம் விரட்டியது.....இவை அண்மைக்காலங்களாக தமிழ் ஊடகங்களிலை வெளிவாற செய்தித் தலைப்புக்கள். அது மட்டுமில்லாமல் வெளிநாடுகளிலை இருக்கிற தமிழரின்ரை காணியள் பற்றின விபரங்களை இலங்கையரசு சேகரிச்சுக் கொண்டும் இருக்கினம். இந்த வருச வக்கேசனுக்கு என்ரை சொந்தக்காரன் ஒருத்தர் லண்டனுக்கு வந்து இருவத்தைஞ்சு வரியமாகிது போன மாதம் ஊருக்கு போனவர். ஊருக்கெண்டால் கொழும்புக்கு... அங்கை அவர் ஒரு அப்பாட்மென் வாங்கிவிட்டிருக்கிறார். வருசா வருசம் வக்கேசனுக்கு அங்கைபோய் தங்கிட்டு வருவார்.

> நு..னா... ப..னா எண்டு பாத்து தமிழனுக்கு காணியை விக்காதேங்கோ ஆனால் சி..னாக்கு வித்தா பரவாயில்லை. பிறகு தமிழரின்ரை காணி பறி போகுதெண்டு ஒப்பாரி வேறை.

அப்பிடித்தான் இந்த வருசமும் போனவர். அவருக்கு தெல்லிப்பளையிலை சீதன வீடும் காணியும் இருந்தது .அதை ஆமி பிடிச்சு பிறகு பாதுகாப்பு வலயம் எண்டு அரசாங்கம் அறிவிச்சு போட்டுது.இப்ப பிரச்சனையள் முடிஞ்சு பாதுகாப்பு வலயம் எடுத்தாச்சாம் சனங்கள் திரும்ப தங்கடை காணியளிற்கு போகினமாம் எண்டு செய்தி கேள்விப்பட்டு. இவரும் தன்ரை தெல்லிப்பளை காணியை போய் வீடு உருப்படியாய் இருக்கோ இல்லையோ தெரியாது இருந்தால் பாத்து திருத்திப்போட்டு இல்லாட்டி எல்லையை பாத்து மதிலை கிதிலை கட்டிப் போட்டு அப்பிடியே நல்ல விலைக்கு வித்து அந்தப்பிரச்சனையை இத்தோடை முடிச்சிடவேணும் எண்டு நினைச்சுக்கொண்டு தான் போனவர். போனவருக்கு காணி எங்கை எல்லை எது எண்டு தெரியேல்லை ஒரு மாதிரி மண் மூடிக்கிடந்த றோட்டுகரையிலை நிண்ட ஆலமரம் அப்பிடியே நிண்டபடியாலை காணியை அடையாளம் பிடிச்சிட்டார்.

வீடு தரைமட்டமாய் கிடந்தது. ஒரே பத்தை வளந்து போய் இருந்தது.அவரும் கலியாணம் கட்டி புதிசா வந்து குடியேறின பழைய நினைவுகளோடை காணியை சுத்திபாத்தவர் அங்கை நட்டுக் கிடந்த கொங்கிறீற் கல்லை உத்துப் பாத்தார். அரைமீற்றர் அகலம் நிலத்திலையிருந்து ஒரு மீற்றர் உயரத்துக்கு அந்தக் கல்லு இருந்தது அதிலை ஏதோ நம்பரும் எழுதியிருந்தது. அவருக்கு வந்திது கோவம். அதைவிட அந்த நேரத்திலை அவர் தான் அந்த றோட்டிலையே சண்டியன். யாரவன் என்ரை காணிக்குள்ளை கொங்கிறீற் போட்டவன் எண்டு கத்தினபடி காலாலை எட்டி கல்லை உதைஞ்சார். கால் சுழுக்கிப்போட்டுது.கோவம் இன்னமும் கூடிப்போக இரு என்ன செய்யிறன் பார் எண்டபடி சுத்திவர பாத்தவர் தூரத்திலை யாரோ இடிஞ்ச வீட்டை திருத்திக்கொண்டிருந்தாங்கள் அவையிட்டை போய் தம்பியவை என்ரை காணிக்குள்ளை யாரோ கொங்கிறீற் நட்டிருக்கிறாங்கள் உங்களிட்டை அலவாங்கு இருந்தால் தாங்கோ அதை இடிச்சுப் போட்டுத்தாறன். என்னை யாரெண்டு தெரியாமல் விழையாடுறாங்கள் எண்டிருக்கிறார்.

அங்கை நிண்டவை.அவரை ஏற இறங்க பாத்திட்டு ஜயா வெளிநாட்டிலை இருந்து வந்திருக்கிறியள் போலை அந்த கொங்கிறீற்று அரசாங்கம்தான் நட்டது. அதை நீங்கள் புடுங்க ஏலாது புடுங்கினால் பொலிஸ்காரன் வந்து பிடிச்சுக் கொண்டு போடுவான்.இஞ்சையிருந்து தங்கடை காணியெண்டு உறுதி செய்யாத வெளிநாடுகளுக்கு போனவையளின்ரை காணியளிலை அரசாங்கம் கொறக்கிறீற் போட்டு ஒரு நம்பரும் அடிச்சிடுவாங்கம். நீங்கள் ஒண்டும் செய்யேலாது. வேணுமெண்டால் வழக்குத் தான் போடவேணும் எண்டிச்சினம். என்ரை சினேதன் கொழும்பிலை பெரிய லோயர் அவனை வைச்சு வழக்கு போடுறன் எண்டு கொழும்புக்கு வந்து தன்ரை சினேகிதனிட்டை விசயத்தை சொன்னார். அவனே உது பாதுகாப்பு அமைச்சு சம்பத்தப் பட்ட விசயம் வழக்கு போடுறதெண்டால் அவங்களுக்கெதிராத்தான் போடவேணும். பாதுகாப்பமைச்சுக்கெதிரா வழக்கு போட்டு வெல்லுறதெண்டதெல்லாம் நடக்கிற காரியமில்லை. இருபத்தைஞ்சு வரியமா நீயும் காணிக்கு வரியம் கட்டின அத்தாட்சியளும் இல்லை.வழக்காடுற செலவு காணிக்காசைவிட கூடவரும் எண்டு கையை விரிச்சிட்டான். புலம்பிய படி திரும்ப லண்டன் வந்தவர் தன்ரை சீதணக்காணி பறிபோட்டுதெண்டு சொந்தங்கம் எல்லாருக்கும் போன் அடிச்சு ஒரே ஒப்பாரி.அவர் என்னோடை கதைக்கிறேல்லையெண்டபடியால் நான் தப்பீட்டன்.

இந்த விசயம் கேள்விப்பட்டு கனடாவிலை இருக்கிற என்ரை சின்னம்மா எனக்கு போனடிச்சார் அவருக்கு ஊருக்கு போக பயம் ஏனெண்டால் கனடாவிலை நடந்த ஊர்வலங்களிலையெல்லாம் புலிக்கொடியோடை முன்னாலை நிண்டு எங்கள் தலைவன் பிரபாகரன் எண்டு கத்தினவர்.அந்தப் படங்கள் தமிழ் ரிவி பேப்பருகளிலையும் வந்திருந்தது.ஆனால் தன்ரை காணிக்கும்ளையும் அரசாங்கம் கொங்கிறீற் போட்டிடும் எண்ட பயத்திலை எனக்கு போனடிச்சு எடேய் என்ரை வீடுகாணி விக்க முடிவெடுத்திட்டன். வித்தா பிறகு சொந்த பந்தத்தை கேக்காமல் வித்திட்டன் எண்டு குறை சொல்லக் கூடாது அதுதான் எல்லாருக்கும் போனடிச்சனான் உனக்கும் அடிக்கிறன் உனக்கு வேணுமெண்டால் சொல்லு இல்லாட்டி கொழும்பிலை காணி வீடு விக்கிற ஏஜென்சி ஒண்டுக்கு சொன்னால் அவங்கம் வித்திட்டு தங்கடை கொமிசனை எடுத்திட்டு மிச்சத்தை பாங்கிலை போட்டு விடுவாங்கள் எண்டார்.

இருக்கிற காணியை பாக்கவே மனிசரில்லை இதுக்கை எனக்கு எதுக்கு காணி எனக்கு வேண்டாம். போனவரியமல்லோ யாரோ வாங்க கேட்டவை ஏன் இன்னமும் விக்கேல்லையெண்டு கேட்டதுக்கு அவர் சொன்ன பதில் டேய் அது அவங்களல்லோ வாங்கிறதுக்கு கேட்டவங்கள். நாங்கள் பரம்பரையா வாழ்ந்த வீட்டை நா...னாக்கும்... ப....னாக்கும் விக்கேலுமே. அது தான் விக்கேல்லை எண்டார். இப்ப ஏஜென்சி காரணென்டால் அதுவும் கொழும்பு ஏஜென்சியெண்டால் அவனுக்கு யார் எவரெண்ட கவலையில்லை நல்ல காசு அம்பிட்டா வித்துப் போடுவானே எண்டன். ஓமடா அவங்கள் கூடுதலா சிங்களவருக்குத்தான் விக்கிறாங்கள். சிங்களவர் றோட்டுக்கரையிலை உள்ள வீடுகளையும் தென்னங்காணிகளையும் விழைச்சல் காணிகளையும் நல்ல விலைக்கு வாங்கிறாங்களாம். என்ரை காணியும் யாரே சிங்களவன் தானாம் வந்து பாத்திருக்கிறான் எண்டார்.

> பாதுகாப்பமைச்சுக்கெதிரா வழக்கு போட்டு வெல்லுதெண்டதெல்லாம் நடக்கிற காரியமில்லை. இருபத்தைஞ்சு வரியமா நீயும் காணிக்கு வரி கட்டின அத்தாட்சியளும் இல்லை. வழக்காடுற செலவு காணிக் காசை விட கூடவரும்

எனக்கு பத்திக் கொண்டு வந்தது ந..னா... ப..னா எண்டு பாத்து தமிழனுக்கு காணியை விக்காதேங்கோ ஆனால் சி..னாக்கு வித்தா பரவாயில்லை. பிறகு தமிழரின்ரை காணி பறி போகுதெண்டு ஒப்பாரி வேறை. இனி எங்கை யாவது நீங்கள் தமிழ் தேசியம் எண்டு கதைச்சதை கேள்விப்பட்டால் ரிற்கற் போட்டு கனடாக்கு வந்து காதைப் பொத்தி காலாலை தருவன் எண்டன். ரெலிபோனை வைச்சிட்டார்.

எனக்குத் தெரியும் இனி அவர் என்னோடை கதைக்கமாட்டார். இப்பிடியானவையை சொந்தம் எண்டு கதைக்கிறதை விட பேசாமல் இருக்கிறதே நல்லது.

## கோர்த்து விடும் செய்திகள்

### இந்தியாவில் தமிழர்களுக்கு வேறு வங்காளர்களுக்கு வேறு.

தமிழ்நாட்டு அரசியல்வாதிகளுக்கு இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் எந்தவித தாக்கமும் செலுத்த முடியாமல் மலையாளிகள் பார்ப்பனர்கள் செய்துவிட்டார்கள். தமிழக சட்டசபையில் பேறறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோர் மீதான தூக்குத் தண்டனையை இரத்துச் செய்யக் கோரி தமிழக சட்டசபையில் நிறைவேற்றிய தீர்மானம் மத்திய அரசை எந்தவிதத்திலும் பாதிக்காது என்றார் இந்தியச் சட்ட அமைச்சர் சல்மான் குருஷித். இந்தியாவிற்கும் வங்காள தேசத்திற்கும் இடையிலான நதிப்பங்கீடு தொடர்பான பேச்சுவார்த்தையில் மேற்கு வங்க மாநில முதல்வர் மம்தா பனர்ஜீயின் ஆட்சேபம் கருத்தில் கொள்ளப்படும் என்றார் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ரஞ்சன் மாதை. மேற்கு வங்கத்தைக் கலந்தாசிக்காமல் எதுவும் செய்ய முடியாது என்றார் ரஞ்சன். கச்சதீவை இலங்கைக்குக் கையளிக்கும் போது தமிழர்கள் ஆட்சேபம் கருத்தில் கொள்ளப்படவில்லை.

### ஜீரிவிக்கு இதுவும் அவுஸ்ரோலியாவில் இருந்து வந்த உத்தரவா?

இலங்கைத் தமிழ் பாராளமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டம் 4 மணிக்கு நடக்கும் என்று சிறீதரன் எம்பியைப் பேட்டி காணும் போது ஜீரிவீ தொலைக்காட்சியில் சொல்லப்பட்டது. இதற்கான விளம்பரங்களில் 5 மணிக்கு கூட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. 4மணிக்கே பல வயதானவர்கள் உட்படப் பலர் மண்டப வாசலில் காதிருந்தனர். இது என்ன திட்டமிட்ட குழப்பமா? கூட்டத்திற்கான விளம்பரத்தில் பிரித்தானியாவில் உள்ள சகல தமிழ் அமைப்புக்களும் இணைந்து கூட்டம் ஒழுங்கு செய்ததாகக் கூறப்பட்டது. ஆனால் கூட்டத்தில் தனிப்பட்ட ஒரு கோவில் பிரதம நிர்வாகி கூட்டத்தை ஒழுங்கு செய்ததாக புகழாரம் சூட்டப்பட்டது. இந்தக் குழப்பங்கள் எல்லாம் ஒஸ்ரோலியாவில் இருந்து வந்த உத்தரவா? இப்போது ஜீரிவியினர் எல்லாம் ஒஸ்ரோலியாவில் இருந்து வந்த உத்தரவு என்று சொல்லித் தப்பித்துக் கொள்கின்றனர்.

### கள்ளப்பயல் சிவசங்கர மேனனின் கள்ளம் அம்பலம்

இலங்கையில் 2009 மே மாதம் முள்ளிவாய்க்கால் இனக்கொலைக்குப் பின்னர் இலங்கைக்கு பயணம் செய்த போது சிங்களவர்களைக் கட்டி அணைத்து துள்ளிக்குதித்துக் கொண்டாடிய கள்ளப்பயல் சிவசங்கரமேனனின் கள்ளத்தனத்தை விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியுள்ளது. சிவசங்கர மேனன்தான் இந்தியாவை தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்க வைத்தானாம்.

### மீண்டும் தியாகிகள் கொச்சைப்படுத்தப்படுகிறார்கள்

முத்துக்குமார் இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டதை எதிர்த்து தன்னைத் தானே தீமூட்டித் தற்கொலை செய்த போது தமிழின விரோதிகள் அவர் வயிற்று வலி தாங்காமல் தற்கொலை செய்ததாக பொய்ப்பிரச்சாரம் செய்ய முற்பட்டுத் தோல்வியடைந்தனர். இப்போது பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோர் மீதான தூக்குத் தண்டனையை இரத்துச் செய்யக் கோரி தனக்குத் தானே தீமூட்டித் தற்கொலை செய்தமையைக் கொச்சைப்படுத்தி தினமலம் என கூறப்படும் தினமலர் பத்திரிகையில் ரங்கராஜ் பாண்டே என்ற ஒருவன் எழுதியுள்ளான். இந்த பாண்டே தமிழ்ப் பெயரா? இங்கிலாந்தில் இருந்து ஆங்கிலத்தில் நன்கு பேசவும் எழுதவும் தெரிந்தவர்கள் எல்லாம் ஆங்கிலேயர்கள் அல்லர். தமிழ்நாட்டில் இருந்து தமிழில் நன்கு பேசவும் எழுதவும் தெரிந்தவர்கள் எல்லாம் தமிழர்களும் அல்லர்.

### உப்புச் சப்பில்லாத மாவை சேனாதிராஜா, சிறீதரன் உரைகள்

தமிழினக் கொலையாளி மஹ்ந்த ராஜ்பக்சேயிற்கு பொன்னாடை போர்திய பன்னாடை சுதர்சன நாச்சியப்பன் கூட்டிய கூட்டத்தில் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை வலியுறுத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளமன்ற உறுப்பினர்கள் தவறியமை நாம் அறிந்ததே. மாவை சேனாதிராஜாவும் சிறீதரனும் இலண்டனில் தமிழர்கள் மத்தியில் உரையாற்றினர். கிறீஸ் பூதமும் மக்கள்படும் அவலம் பற்றியும் இருவரும் விளக்கினர். அவர்கள் சொல்ல முன்னரே அவை பற்றிப் பலரும் நன்கு அறிந்திருருந்தனர். நாம் அவர்களிடம் இருந்து அறிய விரும்புவது தமிழர்களின் சுயநிர்ணயப் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்யும் அல்லது செய்யவிருக்கும் நடவடிக்கைகளே. மக்கள் தம் பின்னால் இருப்பதாக உள்ளூராட்சித்தேர்தல் மூலம் தாம் அறிந்து கொண்டதாக இருவரும் கூறினர். தம்பின்னால் நிற்கும் மக்களை அவர்கள் இனி எந்தத் திசை நோக்கி வழிநடத்தப் போகிறார்கள் என்பதுதான் இப்போதைய கேள்வி. அரசியலில் பிழைத்தோர்க்கு அறம் கூற்றமாகும் என்று பலதடவை மாவை சேனாதிராஜா சிலப்பதிகாரத்தில் இருந்து எடுத்து விட்டார். மதுரையில் ஒரு பெண் நீதி கேட்டுப் போராடினாள். இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தச் சிலம்பைத் தூக்கிக் கொண்டு எங்கு நீதி கேட்டுப் போகப் போகிறது. அல்லது தொடர்ந்து வாக்கு வேட்டை அரசியல் நடத்திக் கொண்டிருந்தால் அரசியலில் பிழைப்பு நடத்தியோர்க்கு எது கூற்றமாகும் என்ற கேள்வி உருவாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேரினவாதிகளின் துப்பாக்கி முனையின் கீழ் இருக்கிறது என்பதை நாம் அறிவோம். When the going get tough, the tough get going என்பார்கள். ஆனால் த.தே.கூவைப் பொறுத்தவரை When the going get tough, let us go to Delhi என்பதுதான் தாரக மந்திரம் போல் தெரிகிறது. இவ்வளவு அழிவையும் இந்தியா செய்தபின்னரும் காந்தி பிறந்த தேசம், நேரு வாழ்ந்த தேசம், இந்திரா ஆண்ட தேசம், ராஜீவ் வளர்ந்த தேசம், சோனியா பாவாடை காயப்போட்ட தேசம் என்று சொல்லிக் கொண்டிருப்பதால் என்ன பயன் தமிழர்களுக்குக் கிடைக்கப்போகிறது. மீண்டும் ஆயுதப் போராட்டம் உருப்பெறாமல் இருக்க தமிழர்களைத் தொடர்ந்து பயமுறுத்திக் கொண்டிருக்க வேண்டும் என்று சிங்களவர்களுக்கு யார் ஆலோசனை கூறினார்கள் என்பதை த.தே.கூ. அறியாதா? அதன் ஒரு அம்சம்தான கிறீஸ் பூதம் என்பதையும் அவர்கள் அறிய மாட்டார்களா? கிறீஸ் பூதங்களுக்கு எதிராக தாம் விரைவில் நடவடிக்கை எடுக்க இருப்பதாக மாவை சூளுரைத்தார். ஒரு வெறும் உண்ணாவிரதத்தைத் தவிர வேறு எதை இவர்களால் செய்ய முடியும். நகங்களை நீளமாக வளர்த்துக் கொள்ளுங்கள் எந்நேரமும் சிறிய பை ஒன்றில் கார மிளகாய்த்தூளை வைத்துக் கொள்ளுங்கள் என்று மக்களுக்கு ஆலோசனை வழங்கக் கூட இவர்களால் முடியாதா?

### சாத்திரியார் சொற்கேட்டதால் கணவனால் விரட்டப்பட்ட வோல்த்தம்ஸ்ரோ பாவானிஅக்கா.

மலையாளச் சாத்திரிகளும் சாமியார்களும் இலண்டனுக்குத் தொடர்ந்து படை எடுத்த வண்ணமே இருக்கிறார்கள். இவர்கள் பில்லி, சூனியம், வசியம் என்றெல்லாம் ஊடகங்களில் பெரு விளம்பரங்களும் கொடுக்கிறார்கள். பில்லி, சூனியம், வசியம் போன்றவைக்கு விளம்பரம் கொடுப்பது சட்டபூர்வமனதா என்ற கேள்வி ஒரு புறம் இருக்க இவை எமது கலாச்சாரத்தை எப்படிப் பாதிக்கும் என்று ஊடகங்கள் யோசிப்பதில்லையா? இதுபற்றிக் கேட்டால் அவர்கள்தான விளம்பரங்களுக்கு ஒழுங்காகக் பணம் தருகிறார்களாம். இந்தச் சாத்திரியர்களுக்கும் சாமியார்களுக்கும் இன்னும் ஒரு விதத்திலும் பணவரவு உண்டு. இவர்களில் சிலர் இந்திய, இலங்கை உளவாளிகளாகவும் செயற்படுகிறார்கள். வோல்த்தம்ஸ்ரோவில் ஒரு பவானி அக்கா சாத்திரியார் கணவனுக்கு வேறு சிநேகிதி இருப்பதாகச் சொன்னதை நம்பி கணவருடன் சண்டையிட்டார். பவானி அக்காவை வைத்துக் கட்டி அவிழ்ப்பதே பெரும்படாக இருக்கும்போது கணவருக்கு இன்னொரு பெண்ணை எப்படிச் சமாளிக்க முடியும்? வந்த ஆத்திரத்தில் பவானி அக்கா கணவரால் வீட்டை விட்டு விரட்டப்பட்டார்.

# விடுப்பு

பார்ப்பவர்: **இழுவைக்காரன்**

## நல்லூரில் தமிழ்ச்செல்வன் மனைவி



நல்லூர் கந்தனின் தேர்த்திருவிழாவிற்கு கருணா கும்பல்களோடு புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த தமிழ்ச்செல்வனின் மனைவி பிள்ளைகளும் வந்திருந்தார்கள். இவர்கள் தேர்த்திருவிழாவுக்கு முதல்நாளே யாழ் வந்து யாழ் வேம்படி மகளிர் மகளிர் மகா வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்து தேர்த்திருவிழாவில் கலந்து கொண்டதோடு அடுத்தநாள் காலையில் கொழும்பு புறப்படும்போது முறிகண்டிப் பிள்ளையாரையும் தேங்காய் உடைத்துத் தரிசித்திருக்கிறார்கள்.

## அம்பாறையில் தமிழ் விவசாயிகள் விரட்டியடிப்பு



அம்பாறை மாவட்டத்தில் எல்லைப்புறமாக உள்ள பல நெல்வயல்களில் கோடைப் போகம் செய்த விவசாயிகள் அறுவடைக்குத் தயாரான விளை நிலங்களில் அறுவடையை ஆரம்பித்த வேளை சிங்கள விவசாயிகளும் காடையர்களும் சேர்ந்து வேட்டைத்துவக்குகள் சகிதம் வந்து தமிழ் விவசாயிகளை விரட்டியடித்திருக்கிறார்கள். இது தொடர்பாக பொறுப்பாளர்களுக்கு புகார் கொடுத்தும் இதுவரை எந்த வித பலனுமில்லை.

## கருக்கலைப்பால் அபாயம்



இன்று தமிழ் இளம்பெண்கள் சமுதாயத்திடம் கருக்கலைப்பு என்பது சர்வ சாதாரணமான விடயமாகிப் போய் விட்டது. சிறுது காலத்துக்கு முன்பு தொட்டு பல காலமாய் எங்கேயாவது ஒரு பெண் ஏமாற்றப்பட்டு கருவுற்று பின் கருக்கலைக்கப்பட்டவர்கள் கூட இன்றுவரை கல்யாண வாழ்க்கையே இல்லாமல் இருப்பவர்கள் உண்டு. ஆனால் இன்று எந்த குற்றவுணர்வும் இவர்களிடம் கிடையாது. குறிப்பாக யாழில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் மாதந்தோறும் கருவுற்று அதைக் கலைத்துவிடுகிறார்கள். இச் செய்கையினால் இவர்களுக்கு வருங்காலங்களில் குழந்தைப்பாக்கியமே இல்லாமல் போக வாய்ப்புண்டு. ஆக தமிழர் சந்ததிகள் பல வழிகளிலும் அழிந்து போதும் அபாயமே அதிகம்.

## மடுவை அண்டிய காடுகள் அழிப்பு



ரிசாத் பதியுதீன் தலைமையில் மேலும் பல சிங்கள முஸ்லிம் அரசாங்க மேலதிகாரிகள் உட்பட சில வியாபாரிகளும் இணைந்து மடுத் தேவாலயத்தையும் முருங்கன் பகுதிகளையும் அண்டிய காடுகளையும் வெளிநாடுகளில் உள்ளவர்களின் காணிகளையும் பாரியவளவில் துப்பரவு செய்து தனிப்பட்டவர்களின் பெயர்களில் அக்காணிகளுக்கு அத்தாட்சிப்பத்திரங்கள் தயாரித்து தமிழரல்லாதவர்களுக்கு விற்பனை செய்து வருகிறார்கள்.

## கொக்கிளாயில் மீண்டும் அபாயம்



கருநாட்டுக்கேணி மற்றும் தென்னை மரவாடிப்பகுதிகளில் மீள குடியேற்றுவதென அழைத்துச் செல்லப்பட்ட சிறு தொகை மக்களை மீண்டும் கொக்கிளாய் பகுதியில் இறக்கிவிடப்பட்டு அவர்களின் சொந்தக் கிராமங்களுக்கும் போக விடாமல் முன்னர் குடியிருந்த இடங்களுக்கும் போகவிடாமல் அவர்களை கடற்கரை சுடுபுளுதிகளில் கூடாரமமைத்து தங்க வைக்கப்பட்டதோடு இராணுவத்தினருக்கும் இரவு வேளைகளில் இந்த மக்களுக்கு துன்புறுத்தல்கள் கொடுப்பதாக அறிய முடிகிறது.

## வவுனியாவில் சிங்கள குடியேற்றங்கள்



வவுனியா மாவட்டம் சேமமடு மற்றும் அனந்தர்புளியங்குளம் ஆகிய கிராமங்களுக்கு கிழக்கு மேற்கு பக்கமாகவுள்ள தமிழ் மக்களின் விளை நிலங்கள் அடங்கலாக காடுகளும் அழிக்கப்பட்டு பாரிய சிங்கள குடியேற்றங்களை நடாத்தி வருகிறது சிங்கள அரசு. அத்தோடு ஒதிய மலை பெரிய மடு போன்ற கிராமங்களை உள்ளடக்கியும் காணிகளை அபகரித்து வருவதோடு குளங்களும் திருத்தியமைக்கப்படடு வீதிகளும் புனரமைக்கப்பட்டு குடியேற்றங்கள் நடாத்தப்படுகிறது. இந்த சிங்கள மக்கள் கொழும்பில் சேரிப்புறங்களில் குடியிருந்தவர்கள் என்றும் அதே பகுதியில் குடியிருந்த தமிழர்களும் முஸ்லிம்களும் தென்னிலங்கை கிராமங்களில் குடியமர்த்தப்படுகிறார்கள் எனவும் தெரிய வருகிறது.

## யாழ் பல்கலைக்கழக மாணவிகள் அட்டகாசம்



யாழ்ப்பாணத்தில் தனியார் வீடுகளை வாடகைக்கு எடுத்து மாணவிகள் பலர் ஒன்று கூடி தங்கியிருந்து படித்துவரும் வீடுகளில் இரவு வேளைகளில் மாணவர்கள் மற்றும் வேறு சில இளைஞர்களும் சேர்ந்து குடித்து கும்மாளம் ஆட்டம் பாட்டமென்று பல வீடுகள் அல்லோல கல்லோலப்படுகின்றன. குறிப்பாக வெள்ளி சனி இரவுகளில் அயலவர்கள் தூக்கம் துறந்து அவதிப்படுவதாகவும் அடுத்த நாட்காலையில் வீதியோரங்களில் குடித்து முடித்த சாராயப் போத்தல்கள் மற்றும் ஆணுறைகள் என்பன ஆங்காங்கே காணக் கூடியதாகவும் உள்ளன. இப்படியான பல வீடுகளுக்கு யாழில் பல பகுதிகளில் இருந்தும் மாலை வேளைகளில் பெண்களும் ஆண்களும் வந்து போவதை காண முடிகின்றது. நீங்கள் வெளிநாடுகளில் இருந்து கஸ்ரப்பட்டு அனுப்பும் பணத்தில் இங்குள்ளவர்கள் அனுபவிக்கிறார்கள். நீங்கள்?

### சுடுகவி.. 01

ஏராளம் ஏராளம் என் வீட்டில் ஓட்டைகள்
அடுத்தவர் ஓட்டைகளை என் வாயில் தாராளம்

----------------------------------

பெற்றது கூப்பிட பிறந்த மண் மறந்து
இவ்விடம் வந்து இருக்கின்றோம் பிரிந்து

### ஜோசி ஆனந்தன் நறுக்குகள்!



- தாய் மண் -

நாட்டில் நீ நம் தாய்மண்ணில்
பார்க்கிறாய் பனையை.

வெளியில் நான் பனையில்
பார்க்கிறேன் நம் தாய் மண்ணை

# தன் வலிமையை...

*(18ம் பக்க தொடர்ச்சி)*

ஒரு பெரிய உபகண்டத்தின் மிகக் குறைந்தவோர் சிறுபான்மையினராக அல்லாமல், தமக்கெனத் தனியான பண்பாடு, கலச்சாரம் உட்படப் பொருளாதார வலிமையுமுடைய புவியியல் எல்லைகளைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. அதன் ஆளுமையும் செல்வாக்கும் வங்காள விரிகுடாவைக் கடந்து தமிழீழம் வரை, அதற்கும் மேலாய் முழு இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் என்று விரவிச் செல்கிறது.

ஆகமொத்தத்தில் இங்கே மக்கட் தொகையும் புவியியல் பரப்பளவும் முக்கியத்துவம் பெறாமல் தமிழ்த் தேசியத்துவமே தமிழ் நாடென்னும் மானில அரசொன்றின் தகுதியைத் தீர்மானிக்கிறது. அந்தத் தகுதி எப்போது புறக்கணிக்கப் படுகிறதோ அப்போது தமிழ்நாடு கொதித்தெழும். இதனை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள சிலர் (அவர்களை முட்டள்களென்று கூறினாலும் தகும்) தமிழ் நாட்டினது தழிழர் தேசியத்துவத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்து எடைபோட முற்படுகின்றனர். குறிப்பாக சோ ராமசாமி, சுப்பிமணியம் சுவாமி போன்ற இந்தியர்களும், இலங்கையிலுள்ள சில சிங்கள அரசியல் வாதிகளும் இந்தப் பிழையான கணிப்பீட்டைக் கொண்டிருப்பது அவ்வப்போது அவர்கள் விடும் அறிக்கைகளின் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

பாக்கு நீரிணையின் இருகரைகளிலும் தனது செல்வாக்கை விரிவுபடுத்தி அதற்கும் அப்பால் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் மலேசியா சிங்கப்பூர் போன்ற நாடுகளுட்பட தென்னாபிரிக்காவரை காலூன்றி நிற்கும் தமிழர் தசியவுணர்விற்கு அதன் அரசியல் அபிலாசைகளுக்கு வடிவமும் உயிரும்? கொடுத்தவர்கள் ஈழத்தமிழர்களாகிய நாங்களே. இறுதியில் மூர்ச்சையாகிப் போனோம். இப்போது தமிழனுக்குத் தன்தேசமென்று கூறிக்கொள்ளவோர் நாடில்லை. இலங்கையில் தமிழர் தேசியம் இனித் தேவைதானா என்று தமிழர் களே சிந்திக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் எம்மினத்தவரின் தேசமென்று உலகத் தமிழர் அனைவரும் கூறிக்கொள்ளவோர் நாடு எமக்கிருந்தது. நிச்சயமாக இருந்தது. தனக்கெனச் சுயாதீனமான அனைத்துக் கட்டமைப்புகளுடனும் அது தன்னை வளர்த்தெடுத்தது.

ஆனால் நயவஞ்சகத்தினால் அது இருந்த இடம்தெரியாமல் அழிக்கப்பட்டுப்போயிற்று. அதனைத் தப்பிப்பிழைக்க விடாமல் கழுத்தை நெரித்துக் கொன்றது இந்திய வல்லாண்மை வாதம். அதற்கான முக்கிய காரணம் அந்த நாட்டின் பெருந்தலைவர் ஒருவர் கொலை செய்யப்பட்டமைதான்.

ஆனால் இன்று அந்தக் கொலைக்காகக் குற்ற சாட்டப்பட்டு தூக்குக் கயிற்றினால் சுருக்குப் போடப்பட்டு நிற்கும் அப்பாவி உயிர்கள் மூன்றை எமது தமிழர் தேசியுவுணர்வு காப்பாற்ற முயல்கிறது. தமிழ்த் தேசியம் தன்னை யாரென்று இந்திய அரசுக்கும் முழு உலகுக்கும் உணர்த்தி நிற்கிறது. நாம் தோற்றுப் போகவில்லை வெல்வோம்.

*தொடருவம்.....*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ



creative artwork from **concept to design**

# கடவுளே என்று கதறவா ?

கடவுளே என்று கதறவா? ஆண்டவனே என்று அலறவா? எது செய்தால் தகும். இதை எழுத முனைகையில் என் கை பதறுகிறது. மனம் விம்மி வெடிக்கிறது? நீதி இன்னொரு முறை தூக்கிலிடப்படப் போகிறது. நியாயம் இன்னொரு முறை சுவரில் அறைபட்டு கொல்லப்படப் போகிறது. அறம் வெல்லும் என்பதெல்லாம் பொய் என்று அறை கூவப்படப்போகிறது.

யாரை இறைஞ்சுவோம்?யாரைக் கெஞ்சிக் கேட்போம்?கடவுளேயென்று கதறினால் ஏதுமாகுமா? ஆண்டவனே யென்று அலறினால் அது நிகழாமல் போகுமா? இம் மூவரினதும் உயிரை தூக்குக் கயிற்றிலிருந்து காப்பாற்றித்தா என்று எவரைக் கையெடுத்துக் கும்பிட்டுக் கெஞ்ச?

எங்கள் உடன் பிறப்புக்கள் அவர்கள் எங்கள் உதிரங்கள், எங்கள் உயிரோடு உயிராய் ஒன்றிக் கலந்தவர்கள். அவர்களுக்கு ஏதும் நிகழக்கூடாது மனம் துடியாய் துடித்து அதை விரும்புகிறது. ஏதும் நற்செய்தி வராதா என்று காது கூர்ந்து கவனிக்கிறது. இதை நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கையிலே அந்தச் செய்தி வந்தடைந்து விடும் என்று மனது நம்புகிறது.

இத்தருணங்களிலேயே கடவுள் மறுப்புக் கொள்கை கொண்ட என்னை நான் நொந்து கொள்கிறேன். அந்த ஒரு நம்பிக்கையிருந்தால் என் மனப்பாரம் எத்தனையோ மடங்கு குறைந்து விடும். ஆறுதல் செய்தி அடிக்கடி வந்து விழும் என் நித்திரையில் ஒரு பாதி நிம்மதியாவது நெஞ்சில் எழும். அப்படியொருவர் இருந்திருந்தால் இத்தகைய அனர்த்தம் எதுவுமே நிகழாமல் போயிருந்திருக்கும்.

28.01.98ம் நாள் அன்று இராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 26 பேருக்கும் மரண தண்டனை என்ற தீர்ப்பினை சிறப்பு நீதிமன்ற நீதிபதி நவநீதம் அவர்கள் வழங்கியிருந்தார். வழக்கொன்றில் குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் தூக்குத் தண்டனை என தீர்ப்பளிப்பது உலகக்குற்றவியல் நீதிமன்ற வரலாற்றில் இதுவே முதல் முறை இதுவே உலகை ஒரு முறை அதிரச்செய்தது. இத் தீர்ப்பின் நோக்கம் ஒன்றேஒன்றுதான். அதிகாரம், மமதை தென்னாசியாவின் மன்னாதி மன்னன் நான் என்ற இந்தியாவின் அகங்காரம்.

வேறொன்றையும் இங்கு குறிப்பிட வேண்டும் குற்றஞ் சாட்டப்பட் 26 பேரும் இராஜீவ் காந்தி கொல்லப்படப் போகிறார் என்று தெரியாதவர்கள். சித்திரவதை மூலம் திணிக்கப்பட்ட ஓர் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்திட்டதே இவர்களது தலையெழுத்தை மாற்றியது. வெறும் ஊகங்களும் சந்தேகங்களும் எழுமானங்களுமே. நவநீதம் என்ற நீதிபதியின் கண்களை மறைத்தது. குரூரமான இத்தீர்ப்பினை பொய் 'மை' கலந்து எழுதி பேனாவைக் குத்தி உடைத்து அவலமான ஒரு நாடகத்தை நடாத்தினார் நவநீதம்.

அப்பொழுது 'ஏது செய்தோம் நாம்' என்று ஒரு சிறு கைநூலை 'தமிழ் மரணதண்டனைக் கைதிகளின் விடுதலைக்கான குழு' என்ற அமைப்பினூடாக வெளியிட்டோம். அதில் இவ்வாறான வாக்கியத் தொடர் ஒன்றினை எழுதியிருந்தேன்.

'தமிழைப் பேசினோம் அந்தத் தவறொன்றைத் தவிர வேறொன்றும் செய்ததில்லை. ஆரென்றும் கேட்காமல் அள்ளி அன்பு சொரிந்தோம் ஆடு அம்மா என்று அலறி அழுகிறதே என்று அள்ளிக் குழை போட்டோம். நாய்க்குக் கல்லெறிந்து கதறியழப் பார்த்ததில்லை. வாழை வாடுகிறதே என்று வாய்க்கால் வெட்டி நீர் வார்த்தோம். எமக்கேன் இந்த விதமாய் நிகழ்கிறது. உங்களுக்கு அது நிகழ்தால் உணர்ந்து தான் இருப்பீர்கள் ஐயா கலங்காதே என்று ஆறுதல் சொல்லி அணைப்பார் எவருமே இல்லையா?'

91ம் ஆண்டு அவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். 98ம் அண்டு தூக்குத் தண்டனைத்தீர்ப்பு வருகிறது. ஆயுள் தண்டனை என பலருக்கு அது குறைக்கப்பட்டு சிலருக்கு விடுதலை கிடைக்க எஞ்சி உள்ளவர் மூன்று சீவன்கள். பேரறிவாளன் சாந்தன் முருகன். இவர்களுக்குத் தான் அவர்கள் கைது செய்யப்பட்டு இருபது வருடங்களின் பின்னர் தூக்கு.

## இரவி அருணாசலம்

**எழுதுவது என்னவெனில்**

வேலூர் சிறையின் தூக்கு மேடையைச் சுத்தப்படுத்த எவரும் தயார் இல்லை. தமிழ் நாட்டு மக்களிடம் தான் அவ்வளவு உணர்வு மண்டிக் கிடக்கிறது. சிறை அதிகாரிகளே அதைச் சுத்தப்படுத்தினர். தமிழகமே பொங்கிய படியும், குமுறியபடியும் பூகம்ப வெடிப்புக்கு ஆயத்தமாகவும் காத்து நிற்கிறது. உணர்வுத் தீ கொழுந்து விட்டெரிந்த செங்கொடியின் உடலை தீ நாக்குகள் அணைத்துக் கொண்டன அவள் அண்ணன்மாரின் சாவை அவளது சாவு தடுக்கும் என்று உளமார நம்பினாள். 'என்பிள்ளை செங்கொடியே உன் தீரத்துக்கும் ஓர்மத்துக்கும் தியாகத்திற்கும் முன்னே நாங்கள் எங்கேயடியம்மா நிற்கிறோம்.'

நாங்கள் எங்கு நிற்கிறோம் நல்லூர்த் திருவிழாவில் இலட்சக்கணக்கில் புடை சூழ்கிறோம். பொப் பாடி பைலா ஆடுகிறோம். எங்கள் பெயரைச் சொல்லி மூன்று உயிர்கள் சாவின் கயிற்றில் தலையைக் கொடுத்து நிற்கின்றன. எந்த ரோஷமும் மானமும் உணர்வுமில்லாத ஈனப்பிறவிகள் நாங்கள். புலம் பெயர் தேசங்களிலும் நாம் இது குறித்த எந்த அக்கறையுமற்று வாளாவிருக்கிறோம். தேரும், கொடியும், தீர்த்தமும் காவடி தூக்கியும் கரகமாடியும் காலம் கழிக்கிறோம்.

நண்பர்களே! அன்றாடக் கடமைகளை நாங்கள் செய்யத் தேன்றும் மகிழ்வான நாட்களை நாங்கள் கழிக்கவும் வேண்டும். உண்டு உடுத்து உறங்கி சீவிப்பதில் எந்தத் தவறும் இல்லை. எங்கள் வீட்டை எங்கள் குடும்பத்தை நாங்கள் தான் கவனிக்க வேண்டும். ஆனால் எங்களுக்காக, எங்கள் உரிமைக்காக, எங்கள் இனத்தைச் சேர்ந்த உணர்வாளர்கள் தங்கள் உயிரைக் கொடுக்கின்ற பொழுது, தங்கள் உதிரத்தைச் சிந்துகிற பொழுது, நாங்கள் அது பற்றி எந்த அக்கறையும் அல்லாது வாழ்தல் என்பது எந்த வகையில் நியாயம்.

செங்கொடி உயிர் கொடுக்கிறாள். சீமான் உணர்வைக் கொடுக்கிறார். புலம்பெயர்ந்த தேசத்தில் நாங்கள் என்ன செய்கிறோம். ஈழதேசத்தில் எதைச் செய்கிறோம். நினைக்கையில் வேதனையாக இல்லையா? சக மனிதரின் துக்கத்தில் எங்களிடம் ஒரு துளி அக்கறையாவது இல்லையா? சிந்தியுங்கள் நண்பர்களே!

நம்புகிறேன் தூக்குக் கயிறு அவர்கள் கழுத்தை இறுக்காது என்று நம்புகிறேன். ஒரு கவிதை வரி எங்கள் எல்லாக் காயங்களையும் ஆற்றட்டும்.

***'ஒரு கோதுமைக் கதிரின் விதைகள்***

***கோடிக் கணக்கில் பசியகதிர்களாய்***

***சமவெளியை நிரப்பவே செய்யும்.'***

# அறிவியல் தகவல்கள்

**சி.மாசிலாமணி**
*(ஒரு பேப்பருக்காக)*

### மலேரியாவின் தாக்கம் குறைகிறது ?

அண்மைய புள்ளிவிபரப்படி மலேரியா காவிகளின் பெருக்கம், குறிப்பாக ஆபிரிக்காவில் வீழ்ச்சி கண்டுள்ளது. அதற்கான காரணத்தைத்தான் ஆய்வாளர்களால் திடப்படுத்திக் கூற முடியாமல் உள்ளது.

முதலில் சுருக்கமாக மலேரியாபற்றிச் சிறிது பார்ப்போம். பிளாஸ்மோடியா என்னும் ஓரணு உயிரி (protozoa) ஒன்றுதான் இந்நோயை உண்டாக்குகின்றது. இரத்தத்தில் நுழையும் இவ் ஓரணு உயிரிகள் குறுகிய நேரத்துள் ஈரலை அடையும். அங்கு ஒன்று ஒரு ஈரல் உயிரணுவுள் புகுந்தாலே போதும். அது பலவாக மாறி புகுந்த உயிரணுவைப் பிளந்து வெளியே வந்து குருதியுடன் கலந்து மலேரியாவை உண்டாக்கும் வலுக் கொண்டவையாக மாறுகின்றன. பிளாஸ்மோடியா என்னும் நுண்ணுயிர் இனத்தின் நான்கு வகைகள் மட்டுமே மலேரியா நோயை உருவாக்க வல்லவை. அந்த நான்கு வகைகளிலும் பிளாஸ்மோடியா பல்சிபறம் என்னும் வகையே மூளையைத் தாக்கும் (cerebral) பெருமூளை மலேரியாவை ஏற்படுத்தும் வலுக் கொண்டவை. மலேரியா இறப்புக்களில் தொண்ணூறு வீதமான இறப்புக்கள் பிளாஸ்மோடியா பல்சிபறம் ஏற்படுத்துவைதான். எம் குருதியுடன் கலந்தாற்றான் ஓரணு உயிரிகளால் மலேரியாக் காய்ச்சலை உருவாக்க முடியும். ஆகையால் இந் நோய் நேரடியாக ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு தொற்றும் நோய் அன்று. ஆகையால் பிளாஸ்மோடியா ஓரணு உயிரிகள் எம் உடலுட் செலுத்தப்பட்டால் மட்டுமே நோய் ஏற்படும் சாத்தியம் உருவாகும்..

நுளம்பு என்றாலே எமக்கு ஒருவகைப் பயம். அவை குற்றியே எம்மை உறக்கத்தைக் கெடுப்பவை. எல்லா நுளம்பு இனங்களும் இதைச் செய்கின்றன. ஏன் இங்கு பிரித்தானியாவில் கூட நுளம்புத் தொல்லை சில இடங்களில் உண்டு. குலெக்ஸ் பிபியன்ஸ் என்பதே இங்கு சாதாரணமாகக் காணப்படும் நுளம்பு வகை. அனொபிலிஸ் என்னும் மரபுப் பெயர் கொண்ட 400 வகை நுளம்புகளில் 30 வகை மட்டும்தான் மலேரிய ஓரணு உயிரிகளின் காவிகளாக உலகை உலுப்புகின்றன. இக்காவிகளின் செயற்பாட்டால் ஆபிரிக்காவின் சில நாடுகளில் இந்நோய் முழு மூச்சுடன் செயற்பட்டு பல குழந்தைளை அவர்கள் ஐந்தாவது பிறந்த நாள் வரை கூட வாழ விடுவதில்லை. பெண் நுளம்புகளுக்கு அவற்றின் முட்டை வளர்ச்சிக்கு தேவையான சத்தை எம் குருதியிலிருந்து பெறவேண்டிய கட்டாயம். மோப்பம் பிடித்து ஒருவர்? தோலைத் துளைத்து அதன் மறுபுறத்திலுள்ள இரத்தக் குழாயைத் துளைத்து இரத்தத்தை உறிஞ்சுகின்றன. தாம் உறிஞ்சும் இரத்தம் உறைவதைத் தடுப்பதற்காக ஒருவகை திரவத்தை தம் எச்சிலுடன் கலந்து உள் அனுப்புகின்றன. அத் திரவத்தில் ஏற்கனவே வேறு யாரோ உடலில் இருந்து புகுந்த மலேரியா ஓரணு உயிரிகள் இருக்குமாயின் புதியவர் குருதியுடன் அவை கலந்து புதிய நோயாளி ஒருவர் வந்தடைகிறார்.

தொடக்கத்தில் கூறியதுபோல் நுளம்புகள் குறைகின்றதற்கான புள்ளி விபரம் கிடைக்கின்றது. அதற்கான தாக்கத்தை புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ள பூச்சிகொல்லி செலுத்தப்பட்ட படுக்கை வலைகள் வகித்தாலும், மலேரியச் சஞ்சிகையில் ஆய்வாளர்களின் அறிக்கை அப்படியான வலைகள் அறிமுகப் படுத்தப்படாத பகுதிகளிலும் குறைவதைக் காட்டுகிறது. தன்சானியா, எரிரியா, கெனியா, சம்பியா ஆகிய நாடுகளில் இருந்து பெறப்படும் தரவுகளின்படி மலேரியா குறைவது வெளியாகின்றது.

இப்போது எழும் சந்தேகம் இக்காவி நுளம்புகள் உண்மையில் குறைகின்றனவா அல்லது அல்லது காலமாற்றம் போன்றவற்றின் பாதிப்பால் இப்போது குறைந்து மறுபடியும் புதிய உத்வேகத்துடன் வரப் போகின்றனவா என்பதே.

நுளம்புகள் மத்தியில் நுண்ணுயிர் பூஞ்சணம் போன்றவற்றின் தாக்கமும் அவை குறைவதற்கான காரணம் என்ற சந்தேகமும் ஏற்படத்தான் செய்கிறது. சில ஆய்வாளர்கள் தங்கள் மருந்துக்களை சோதித்துப் பார்க்க ஆட்கள் இல்லாத அளவுக்கு மலேரியாவால் பாதிக்கப் பட்ட பிள்ளைகள் கிடைக்கவில்லை என்று சொல்வது மகிழ்ச்சியாகவும் வேடிக்கையாகவும் உள்ளது.

ஆனால் இப்போதுள்ள பயம் என்னவென்றால் திரும்ப மலேரியா பெருகினால், சிறிதளவுகூட நுளம்புக் குற்று வாங்கி எதுவித எதிர்புச் சக்தியும் இல்லாத குழந்தைகள் மத்தியில் அது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி இறப்பு வீதத்தை அதிகரிக்கும் என்பதே.


## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த U.k Citizen உடைய 8ம் இடத்தில்

சூரியன், செவ்வாய் ஒன்றாக அமைந்த 60 கிரகபாவம் உடைய, 5.9" உயரம், 36 வயதுடைய

மணமகனுக்கு பெற்றோர் நற்குணமுள்ள படித்த அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

முழு விபரங்களுடனும் படத்துடனும் தொடர்பு கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

E-mail-athavan19@hotmail.co.uk




# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. Age 25, 5' 7", British Citizen, graduate Looking for a suitable bride Ref 3540.

2. Age 32, 6'0", British Citizen, Doctor looking for a suitable bride Ref 925.

3. Age 29, 5'8", Workpermit visa, working as a Network administrator looking for a suitable bride Ref 3547.

4. Age 44, 5'6", British citizen, Engineer working as a Programme co-ordinator looking for a suitable bride Ref 3542.

5. Age 25, 5'9", student visa, graduate working in IT field looking for a suitable bride Ref 3541.

6. Age 33, 5' 7", UK, Graduate, Working in Service Industry, Looking for a suitable Bride, Ref 3512.

7. Age 28, 5' 6", HSMP visa, Accountant, Looking for a suitable Bride, Ref 3517.

8. Age 29, 5' 8", Uganda(Work permit visa), Engineer, Looking for a suitable Bride, Ref 3526.

9. Age 30, 5' 5", British Citizen, Graduate ,Working in IT Company, Looking for a suitable Bride, Ref 3531.

10. Age29,5'7",UK(Workpermitvisa), Engineer, Looking for a suitable Bride, Ref 3534.

11. Age31, 6'2", British Citizen, PhD in Chemistry, working as a research scientist, Looking for a suitable Bride, Ref 3536.

12. Age25, 5'6", Australia, Graduate, working as a software Engineer for government, Ref 3470.

13. Age 30, 5' 8", UK, Electronic &Electrical Engineer,Looking for a suitable Bride, Ref 3441.

14. Age 29, 6' 1", UK(student visa), doing MBA, working part time, Ref3437.

15. Age 27, 5' 7", UK,Graduate, working as a Professional Travel consultant , Ref 3428.

16. Age 45 , 5' 8", UK, Accountant, Looking for a suitable Bride, Ref 3422.

17. Age 28 , 5' 8" , UK PR , Graduate , working in Public Service , Ref 3419.

18. Age 34, 5' 10", Doha, Engineer, Looking for a suitable bride , Ref 3412.

19. Age 27, 5' 8", India, Civil Engineer Doing own construction Business , Ref 3411.

20. Age 32 , 5' 11" , British Citizen Engineer,Looking for a suitable bride , Ref 3407.

21. Age 30 , 6' 0" , UK(student visa) doing MBA , working part time , Ref 3376.

22. Age 29 , 5' 9", French citizen living in UK , BEng Electronics , Self employed , Ref 3374.

23. Age 31 , 5' 8" , UK(HSMP visa) , Engineer , working as an Engineer at mobile company , Ref 3373.

24. Age 33, 5' 7", Canada PR, Graduate, working as a computer engineer, Ref 3367.

25. Age 27, 5' 8", UK(student visa), doing MBA , working part time, Ref 3361.

26. Age 33, 6' 2" , UK PR , Divorced, Engineer , Ref 3360.

27. Age 30, 5' 6", UK(PSW visa), Engineer, Looking for a suitable bride, Ref 3352.

28. Age 35, 5' 5", British Citizen, Graduate , working in Public Service, Ref 3346.

29. Age 30, 5' 8", UK , MSc Qualified, working as business analyst, Ref3344.

30. Age 36, 5' 9", UK PR, Graduate, working in a marketing agency , Ref 3337.

31. Age 24 , British Citizen , Studying ACCA , working in the NHS finance department , Ref 3327.

32. Age30, 5'9", UK(PSW visa), Graduate , working as a deputy manager Ref 3325.

33. Age 33, British Citizen, Accountant , Looking for a suitable bride , Ref 3323.

34. Age 29, 5' 6", British Citizen Graduate , working at a Telecom company Ref 3306.

35. Age31 , 5' 11" , UK , Doctor , Looking for a suitable bride , Ref 3304.

36. Age 29, 5' 8", British Citizen Graduate, working as a Senior Management Consultant/Project designer , Ref 3301,

37. Age 46 , 5' 11" , UK , Divorced , Doctor ,Looking for a suitable bride Ref 3298.

38. Age27, 5'9", UK, Engineer Looking for a suitable bride , Ref 3293.

39. Age 35 , 5' 5" , UK(student visa) doing MBA , working part time , Ref 3292.

40. Age30, 5'5", British Citizen Graduate , working as a Senior Software Engineering , Ref 3291.

41. Age 32, 5' 3", UK(student visa) studying MSc in Information Security, working part time, Ref 3281.

42. Age33, 6'0", UK(PSW visa) Engineer , Looking for a suitable bride , Ref 3266.

43. Age 36 , 5' 8" , UK(HSMP visa) BEng & MBA , working as a IT Consultant , Ref 3256.

44. Age 31 , 5' 6" , German citizen , Live in UK , Engineer , Looking for a suitable bride , Ref 3254.

45. Age 31 , 5' 9" , UK(HSMP Visa) Engineer , Looking for a suitable bride , Ref 3233.

46. Age 32 , 5' 10" , Canadian PR , Post Doctoral , Looking for a suitable bride , Ref 3228.

47. Age 29, 5' 10", UK(PSW visa), Engineer, Looking for a suitable bride , Ref 2728.

48. Age 29, 5' 9", British Citizen , MSC in Engineering , Looking for a suitable bride , Ref 2557.

49. Age 32 , 5' 8" , UK(student visa) , finished Software Engineering in Sri Lanka , now studying Association of Business Executives (ABE) , working part time , Ref 2440.

50. Age 34 , 5' 11" , British Citizen , Doctor , Looking for a suitable bride Ref 1006.

51. Age 27 , 5' 10" , British Citizen Graduate , working as a Financial Risk Analyst , Ref 1825.

52. Age 40 , 5' 8" , British Citizen , Accountant , Looking for a suitable bride , Ref 1895.

53. Age 33 , 5' 9" , Canadian PR , Engineer , Looking for a suitable bride , Ref 1944.

## மணமகன் தேவை

1. Age 26, 5' 3", British citizen, Accountant Looking for a suitable Groom, Ref 3539.

2. Age 29, 5' 7", British citizen working in medical sector Looking for a suitable Groom, Ref 722.

3. Age 32, 5' 4", German citizen living in uk working as an Architect in IT Looking for a suitable Groom, Ref 3227.

4. Age 28, 4' 8", student visa looking for a suitable Groom, Ref 3553.

5. Age 28, 5' 4", British citizen working as a Architect looking for a suitable Groom, Ref 3245.

6. Age 27, 5' 1", graduate living in srilanka looking for a suitable Groom, Ref 3550.

7. Age 29, 5' 1", British citizen Doctor looking for a suitable Groom, Ref 3496.

8. Age 35, 5' 5", graduate living in srilanka looking for a suitable Groom, Ref 3558.

9. Age 32, 5' 1", working as a trainee in medical sector living in srilanka looking for a suitable Groom, Ref 3557.

10. Age 27, 5' 1", British citizen Doctor divorced looking for a suitable Groom, Ref 3556.

11. Age 30, 5' 2", British Citizen, Doctor, Looking for a suitable Groom, Ref 3519.

12. Age 28, 5' 2", British Citizen, Doctor, Looking for a suitable Groom, Ref 3535.

13. Age 32 , 5' 5", UK, chartered architect, Looking for a suitable Bride,Ref 3438.

14. Age 28, 5' 3", British Citizen, Engineer, Looking for a suitable Groom, Ref 3520.

15. Age 29, 5' 2", British Citizen, Doctor, Looking for a suitable Groom, Ref 3514.

16. Age 34, 5' 6", Sri Lanka, Accountant, Looking for a suitable Groom, Ref 3515.

17. Age 31, 5' 6", India, Graduate, working in HR, Looking for a suitable Groom, Ref 3510.

18. Age33, 5'5", British Citizen, Graduate, working as a teacher, Looking for a suitable Groom, Ref 3509.

19. Age 29, 5' 5", UK PR, Engineer, Looking for a suitable Groom, Ref 3525.

20. Age 32, 5' 3", Sri Lanka, Doctor, Looking for a suitable groom, Ref 3469.

21. Age 29, 5' 4, UK(student visa), studying in the medical sector, working part time, Ref 3461.

22. Age 23, 5' 4", German Citizen, Living in UK, studying Electronic engineering, Looking for a suitable groom, Ref 3455.

23. Age 39, 5' 3", Sri Lanka, Engineer, Looking for a suitable groom, Ref 3453.

24. Age 27, 5' 6", India, Graduate, Administrative Service, Looking for a suitable groom, Ref 3451.

25. Age 24, 5' 5", British Citizen, Graduate, working in Public Service, Ref 3436.

26. Age 29, 5' 5", Sri Lanka,Graduate, working as senior software engineer, Ref 3434.

27. Age 28 , 5' 3", UK PR, Divorced, one child, Graduate, Ref 3418.

28. Age 29, 5' 6", UK , Divorced, Graduate, Ref 3404.

29. Age 25, 5' 2", Sri Lanka, Graduate, working as a Financial Adviser, Ref 3406.

30. Age 25, 5' 3", UK, Graduate, working in Public Service, Ref 3392.

31. Age 29, 5' 5", British Citizen, Doctor, Looking for a suitable groom, Ref 3390.

32. Age 30, 5' 3", British Citizen, PHD in chemical engineering, Looking for a suitable groom, Ref 3389.

33. Age 24 , 5' 5", British Citizen , Graduate , Administrative Service , Ref 3388.

34. Age 29 , 5' 2", British Citizen, Financial Sector, Looking for a suitable groom, Ref 3382.

35. Age 29 , 5' 4", UK(student visa), BSc Computer Science, Looking for a suitable groom, Ref 3381.

36. Age 27,5' 5", British Citizen, Accountant, working as a Commercial Financial Analyst , Ref 3371.

37. Age 32, 5' 6", British Citizen, ACCA qualified, working in bank as manager, Ref 3365.

38. Age 31, Canada Citizen, Graduate, working as a Marketing Manager, Ref 3363.

39. Age 40 , 5' 2", British Citizen, Accountant, Looking for a suitable groom, Ref 3362.

40. Age 26, 5' 8", British Citizen, Medical Sector, Looking for a suitable groom, Ref 3359.

41. Age 42, 5' 6", Canadian PR, Medical Sector, Looking for a suitable groom, Ref 3358.

42. Age 34 , 5' 5" , Canadian Citizen , working as computer programmer , Looking for a suitable groom , Ref 3342.

43. Age 29 , 5' 5" , British Citizen , Accountant , working as a Production Accountant , Looking for a suitable groom ,Ref 3316.

44. Age 32, 5' 2", British Citizen, Graduate, Financial Sector, Ref 3309.

45. Age 27 , 5' 3", British Citizen , Doctor , Looking for a suitable groom , Ref 3308.

46. Age 33 , 5' 2" , British Citizen , Doctor , Looking for a suitable groom , Ref 3307.

47. Age 26 , 5' 6" , Sri Lanka , Graduate , Administrative Service , Ref 3299.

48. Age 26 , 5' 2" , Australian Citizen , Engineer , Looking for a suitable groom , Ref 3282.

49. Age 28 , 5' 3" , British Citizen , Engineer , Looking for a suitable groom , Ref 3275.

50. Age 32 , 5' 2" , British Citizen , Accountant , Looking for a suitable groom , Ref 3420.

51. Age 30 , 5' 6" , British Citizen , Doctor , Looking for a suitable groom Ref 3423.

52. Age 28 , 5' 8" , UK , Engineer , Looking for a suitable groom , Ref 865.

53. Age 30, 5' 7", Sri Lanka, Engineer Looking for a suitable groom , Ref 3340.

54. Age 41 , 5' 6" , British Citizen , Living in Australia , Graduate , working as a Pharmacist,Ref 3290.

55. Age 30 , 5' 4" , Australian Citizen Doctor , Looking for a suitable groom Ref 3232.

56. Age 32 , 5' 4" , British Citizen Architect , Looking for a suitable groom , Ref 3227.

57. Age 28 , 5' 3", UK , Engineer , Looking for a suitable groom , Ref 3275.

58. Age 30 , 5' 5" , Canadian Citizen doing a PhD in Sociology , working part time , Ref 3253.

59. Age 29 , 5' 5" , Sri Lanka , Lawyer , Looking for a suitable groom , Ref 2224.

60. Age 28 , 5' 2" , Sri Lanka , Graduate , working as administrative assistant , Ref 1459.

61. Age 41 , 5' 4" , Sri Lanka , Doctor Looking for a suitable groom , Ref 1514.

62. Age26, 5'2", British Citizen, Graduate , working in an investment bank company as a Computer Engineer , Ref 1527.

63. Age 25 , 5' 1" , UK PR , Graduate , working as a Data Coordinator in the IT Department , Ref 1580.

64. Age 39 , 5' 7" , Canadian Citizen Graduate , working in financial sector in a bank , Ref 1595.

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# மாவைக்கந்தன் அன்றும் இன்றும்



தாயக திருத்தலங்களைப் போல புலம்பெயர் நாட்டிலும் கோடைகாலம் கோயில்களின் உற்சவங்களால் கலகலத்தது. தாயகத்தில் பெயர் பெற்ற பண்டைய திருத்தலங்கள் சில யுத்த அனர்த்தங்களாலும் ஊர் மக்களின் இடம்பெயர்வாலும் நித்தியக்கிரியைகள் நீண்ட காலம் நிறுத்தப்பட்டிருந்தன. அரச படைகளில் ஷெல் பொம்பர் தாக்குதலிலும் அவற்றில் சில சேதம் கண்டன. வடக்கில் முக்கிய தலங்களில் மாவிட்டபுரம் கந்தசுவாமியாராலம் கீரிமலை நகுலேஸ்வர்ர் ஆலயம் ஆகியனவும் அடங்குகின்றன. இரண்டும் அருகாமையில் அமைந்த திருத்தலங்கள். மாவைக்கந்தன் தீர்த்த உற்சவமும் ஆண்டாண்டு காலமாக கீரிமலைத் திருத்தலத்தில் நடைபெறுகிறது. வலிகாமம் வடக்கு மக்கள் இரு கோயிலிலும் நித்திய பக்தர்கள். இதனால் இரு தலங்களுக்குள்ளும் ஒரு ஐக்கியம் நிலவுகின்றது.

சோழ நாட்டு இளவரசி மாருதப்புரவீரவல்லி தன் குதிரை முகம் நீங்க மாவைக்கந்தன் அருள் காரணமாக அமைந்ததால், ஆலயத்தைக் கட்டி எழுப்பினாள் என்பது திருத்தல வரலாறு. அதியுயர் அழகு கோபுரத்தோடும் ஐந்து வீதிகளோடும் எழில் ஒச்சும் ஆலயமாக பல நூற்றாண்டுகளாக அது நிலைத்து நின்றது. கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயமும் நகுல முனிவரின் கீரி முகம் நீங்கப்பெற்ற அருளினால் எழிலானது என்பது தலசரித்திரம். மாவைக்கந்தன் ஆலயத்தோடு சுற்றுக் கிராமங்களிலும் மாருதப்புர வீகவல்லி ஏழு பிள்ளையார் ஆலயங்களையும் கட்டி எழுப்பி இருந்தார்.

எனது பால பருவத்திலிருந்தே மாவைக் கந்தன் ஆலய இருபத்தைந்து நாட்கள் உற்சவத்துக்கும் விரதம் குடும்பத்தார் அனைவரும் இருப்பது வழக்கம். கொடியேற்றத்துக்கு சில நாட்கள் முன்பாகவே மாமிசப் போசனம் நிறுத்தப்பட்டுவிடும். மச்ச சட்டிகள் எல்லாம் வீட்டுக் கோடிக்குள் கவிழ்க்கப்படும். தேவை அறிந்து தெருத் தெருவாக மண் சட்டி பானைகளை விற்கும் மாட்டு வண்டில் விற்பனையாளர்கள் வருவார்கள். புதுப்பானை சட்டி விரத காலத்தில் அடுப்பை அலங்கரிக்கும். கால ஓட்டத்தில் மண் பாண்டங்கள் புதிய அலுமினியப் பாத்திரங்களாயின.

மண்வீடானால் சாணகத்தால் முழுதாக மெழுகப்படும் கல்வீடானால் விறாந்தைகளெல்லாம் கழுவப்பட்டும், தூசி தட்டப்பட்டும் வீடுகள் கொடியேற்றத்துக்கு முன்பாகவே சுத்தம் காணும். கொடியேற்றம் ஆரம்பித்தால் போதும் வீட்டு முற்றம் சாணகத் தெளிப்பால் பசுந்தரையாகக் காட்சியளிக்கும். வீட்டுச் சாமிப் படங்களிலும் விளக்குப்பூ, வீட்டில் சாம்பிராணி மணம், விரத்ததுக்கென விசேட மரக்கறிகள் சமைப்பதால் சமையல் அறையில் இருந்து எழும் தாளித வாசம், காலை மதிய இரவு கொடித் தம்பப் பூசைகளைக் கான வீதியில் பக்தர்கள் போக்குவரத்து. இதனால் எந்நேரமும் வீதியில் கலகலப்பு என்பன அந்த புறங்களில் உற்சவகால வாடிக்கை.

வேட்டைத்திருவிழா, கார்த்திகைத் திருவிழா, சப்பறத்திருவிழா குறிப்பாக தேர் தீர்த்தம் என்றால் வயல் பிரதேசங்களால் வரும் பக்தர்களாலும் அந்த பிரதேசம் முழுதும் சனத்திரள் மயமாகக் காட்சியளிக்கும். 'தீர்த்தக்கரை மாதிரிச் சனம்' என்பது தான் பேச்சுவழக்கில் இந்தப்பிரதேசத்தில் சனம் கூடிய வைபவங்கள் பற்றி கூறப்படும் வர்ணனை.

யுத்த அனர்த்தங்களின் பின் மீண்டும் சென்ற ஆண்டு முதல் மாவைக் கந்தன் ஆலயம் உற்சவம் காண்கிறது. இவ்வாண்டு இதனை நேரில் தரிசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

**ஊரின் வாசம்**

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

அன்றும் இன்றும் என ஒப்பு நோக்கிய என் நெஞ்சம் கவலையில் கனத்தது. குண்டும் குழியுமாக இடிபாடுகளுடன் கூடிய காங்கேசன் துறை வீதி. தெல்லிப்பழை சந்தியிலிருந்து மாவிட்டபுரம் வரையாக வீதியின் இரு மருங்கிலும் அமைந்திருந்த ஐநூறுக்கும் அதிகமான கல்வீடுகள் அனைத்துமே இன்றும் இடிபாடுகளோடு அப்படியே இருக்கின்றன. குடியிருப்பாளர்களோ, திருத்தம் மேற்கொள்ளும் முயற்சிகளோ எதுவுமில்லை. வலப்புறமாக ஒரேயொரு வீடு மட்டும் திருத்தப்பட்ட நிலையில் காணப்படுகிறது. காங்கேசன்துறை மயிலிட்டி, வீமன்காமம், கிராமங்களிலும் மீள்குடியேறும் தொகை மிகவும் குறைவு. அம்பனை முதல் மாவிட்டபுரம் கீரிமலை என இரு பிரிவாகப் பிரியும் வீதிகள் வரையான கொல்லங்கலட்டி வீதியிலும் புனரமைக்கப்பட்ட வீடுகளின் தொகை மூன்று மடடுமே. அளவெட்டி பன்னாலை கருகம்பனை மாத்தனை தெல்லிப்பளை பகுதிகள் உட்புறமாக மீள்குடியிருப்புக்கள் சில அமைந்திருக்கின்றன.

ஆலய உற்சவங்களும் களைகட்டவில்லை. ஐந்து தேர் அலங்காரமாக உலாப் போகும் மாவைக் கந்தன் திருவிழாவில் ஆக ஒரு தேர் மடடுமே இம்முறை வீதிபவனி வந்தது. அதுவும் சகடையில் அலங்கரிக்கப்டட்ட ஓர் தேர் ஊர்தி. திருத்தங்களை வேண்டி நிற்கும் ஆலயக் கட்டம் எழுப்பட வேண்டிய வசந்த மண்டபம் அங்கொன்று இங்கொன்றாகக் காணப்படும் மணிக்கடைகள். சில கடலைக்காரர்கள். ஆயிரத்துக்கும் உள்ளாக மட்டும் அமைந்த தேர்திருவிழாவுக்கான பக்தர் கூட்டம் என தேர் உற்சவம் ஆராவாரமின்றியே இவ்வாண்டு காணப்பட்டு ஆனால் இவ்வாண்டு கண்காணிப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை நூற்றுக்கு மேலாக இருந்தது.

ஆலயத்தின் தேரின் அடிப்பாகங்கள் மிகச் சிதைந்த நிலையில் உக்கிப் போனதாக ஒவ்வொரு புறத்திலும் காணப்பட்டது மிக வேதனை தரும் அம்சமாக இருந்தது. தீர்த்த உற்சவத்தின் நிலையும் மந்தம் தான். சுமார் மூவாயிரத்துக்கும் குறைவாகவே அமைந்த பக்தர் தொகை எள்ளும் தண்ணியும் இறைத்து பிதிர்க்கடன் தீர்க்கும் பக்தர்களும் ஐயர்மார்களும் கீரிமலைக்கடல்கரையை நிறைத்திருந்தார்கள்.

தீர்த்தமாடிய மாவைமுருகன் கடலை நோக்கி வீற்றிருக்க கற்பூர சுடர் ஒளி மணல் தரையில் உயர தொடர்ந்து எழுந்து எரிந்து முன்னைய நிலையை நினைவூட்டின. கடல்க்கரையில் எள்ளும் தண்ணியும் கடன் நிறைவேற்றும் அடியார்களுக்காக அமைந்திருந்த ஐயர்மார் செயற்பாட்டிலும் ஒரு இயந்திரத்தன்மை. உயிரோட்டமில்லாத கடன் கழிப்பு.

பலநூற்றுக்கணக்கில் வீதியின் இருபுறமும் காணப்பட்ட பிச்சைக்காரர் தொகையும் இப்போது வெகு குறைவு. காத்தோட்டிக்காய் பனங்குட்டான் பாய் பெட்டி கடகம் மணிக்கடைகளென அணிவகுக்கும் கடைகளின் ஆரவாரம் இல்லை. கீரிமலை சிவன் ஆலய இராஜகோபுரம் இருபதாண்டுகளாக இன்னும் அடியார்களின் ஒத்துழைப்பைக் கோரி நிறைவு பெறாத தோற்றத்தில் நிற்கிறது. அன்னதான ஆரவாரங்களும் வழமைபோல் இல்லை. போர் அழிவுகளின் இடிபாடுகள் இடம்பெயர்வுகள் வலி வடக்கிலும் இன்னும் நிவர்த்தியாகவில்லை இந்நிலையில் ஆலய உற்சவ்ம் உற்சாகம் பெறுவது எப்படி?

*வடக்கின் வசந்தம் வலிவடக்கிலும் மந்தம் தான்.*

# புதிய தமிழ் அரசியல் தலைமை தாயகத்தில் தேவை

ஈழத் தமிழினத்தின் மீது பற்றுக்கொண்ட புலம்பெயர் சகோதரங்களுக்கு அன்பு வணக்கம். நீண்டகாலமாக கடிதம் எழுதும் அவா. சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் நம் விருப்புக்கு தடை விதித்தன. இருந்தும் தற்போதைய சூழ்நிலையில் இக் கடிதத்தை எழுதாமல் விடுவது வரலாற்றுத் தவறாகிவிடும் என்ற அடிப்படையில் கடிதம் எழுதத் துணிந்தோம்.

தமிழினத்தின் இழப்புகள், தோல்விகள், துன்பங்கள் என்ற நெடுந்துயரின் வெறுப்புத் தனங்கள் தமிழ் மக்களின் வாழ்வுக்கே பங்கம் விளைவிட்டதாக இருக்கின்ற இவ்வேளையில், தங்கள் முயற்சிகள் சர்வதேச சமூகத்துடன் கொண்டுள்ள தொடர்புகள், தென் சூடான் எங்கள் மீது காட்டும் கரிசனை என்பன மன ஆறுதலைத் தருவதாக இருக்கின்றது.

நீங்கள் சர்வதேச ரீதியில் இலங்கை அரசுக்கு பல்வேறு அழுத்தங்களை ஏற்படுத்தி வருகின்றீர்கள் என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும். இருந்தும் உங்கள் முயற்சிகளுக்கு மௌனமாக உரிமை கோரும் தமிழ் அரசியல் தலைமைகளும் இங்கு இருக்கின்றன என்ற செய்தியை நீங்கள் அறியாதிருக்க முடியாது. என்ன செய்வது! திருமண வீட்டில் சமையலில் ஈடுபடுவோர் விழித்து நெருப்புக் காய்ந்து சமைத்து வைக்க, பட்டு வேட்டியோடு வருகின்றவர் சபை வைக்கும் பண்பாட்டை எப்படி இல்லாது செய்ய முடியாதோ? அது போலத்தான் உங்கள் கடும் முயற்சிகளின் விளைவுகளுக்கு இங்கிருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் உரிமை கோருவதை தடுக்க முடியவில்லை.

பரவாயில்லை. தமிழினத்தின் துயர் அறுக்கும் பணியில், இந்தப் பச்சோந்திகள் மகிழ மரத்திலா, அரச மரத்திலா சீவியம் நடத்துகின்றன என்பதை ஆராய்வது நேர விரயம் என்பதால் அதனை அப்படியே விட்டு விடலாம். ஆனால் ஒரு விடயத்தில் நீங்கள் விடும் மகா தவறு பற்றி பிரஸ்தாபிக்கவே இக்கடிதத்தை வரைய முற்பட்டோம். சர்வதேச ரீதியில் நீங்கள் குறித்த இலக்குடன் செயற்படும் நிலையில், இலங்கையில் தமிழ்த் தாயகத்தில் பலமான அரசியல் தலைமை இருக்க வேண்டும் என்ற நினைப்பை கொண்டிராமை அல்லது அத்தகையதொரு பலமான அரசியல் தலைமையை உருவாக்க நினைக்காமை மிகப் பெரும் தவறு எனலாம். நம்மைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்கிறார்கள். ஆனால் தமிழ் அரசியல் தலைமைகள் படுமோசம். அவை வேறோர் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய இயங்குகின்றன.

தேர்தல் வெற்றி என்பது, மாற்றுத் தெரிவு இல்லாத நிலையில் ஏற்பட்டதொன்றாகும். ஆனால் தமிழ் மக்களின் இன்றைய பரிதாப நிலை பொருத்தமற்ற அரசியல் தலைமை என்பதை அனைவரும் உணர்ந்துள்ளனர். அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. அந்த அமைப்பில் இருக்கக்கூடிய ஒரு சிலர் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கின்றார்கள்

ஆயினும். தனித் தவில் எடுபடாதல்லவா? எனவே மிக விரைவில் நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னதாக விசுவாசமுள்ள தமிழ் அரசியல் தலைமையை உருவாக்க வேண்டும். இந்த முக்கியமான பணியில் உங்களுக்கும் காத்திரமான பங்குண்டு. நீங்களும் இங்குள்ள தமிழ் அரசியல் தலைமையும் ஒரு கோட்டில் பயணிக்க வேண்டும். அதுவே தமிழினத்தின் அமைதியான வாழ்வுக்கு வழிசமைக்கும்.

*வலம்புரி (08.09.2011)*

# யாழ்ப்பாண மக்கள் பற்றி பேச முன் உமது மகளுக்கு யாழ்ப்பாணத்தைக்காட்டும்

## - மகிந்த பரிகாசம்



யாழ்ப்பாண மக்கள் பற்றி பேசுவதற்கு முதல் யாழ்ப்பாணம் எப்படி என்பதை உமது மகளுக்கு காட்டுமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், உதயன் பத்திரிகை உரிமையாளருமான ஈ.சரவணபவனுக்கு சிறிலங்கா ஜனாதிபதி மகிந்த ராசபக்ச அறிவுரை கூறினார்.

**உமது மகளை விட நான் நன்றாக தமிழ் பேசுவேன். முதலில் யாழ்ப்பாணம் எப்படி இருக்கிறது என பிள்ளைகளை அழைத்து சென்று காட்டுமாறும் அவர்களுக்கு தமிழை கற்றுக்கொடுக்குமாறும் மகிந்த ராசபக்ச சரவணபவனுக்கு ஆலோசனை வழங்கினார்.**

தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் மகிந்த ராசபக்சவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாலை அலரிமாளிகையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கிறிஸ் மனிதனின் அட்டகாசங்கள் தொடர்பாக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் மகிந்த ராஜபக்சவிடம் எடுத்துக் கூறிய போது, சடுதியாக குறிக்கிட்ட மகிந்த சரவணபவன் எம்பியைப் பார்த்து கடந்த வாரம் நடந்த நிகழ்வொன்றில் உமது மகளைச் சந்தித்த போது யாழ்ப்பாணம் எப்படி உள்ளது? எல்லாம் நன்றாக இருக்கிறதா? எனக் கேட்டேன்.

அதற்கு உமது மகள் கூறினார், நான் இன்னும் யாழ்ப்பாணம் போகவே இல்லை என்று. தயவு செய்து உங்களின் மகளை யாழ்ப்பாணத்திற்கு கூட்டிக் கொண்டு போய் முதலில் யாழ்ப்பாணத்தைக் காட்டும்? என்றார் மகிந்த.

அப்போது அசடு வழிந்தவாறு இருந்தார் சரவணபவன் எம்.பி.

இவ்வாறு மகிந்த கூறிய போது கூட்டமைப்பின் எனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சற்று நேரம் ஆச்சரியத்தில் ஆழ்ந்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கூட்டம் முடிந்து வெளியில் வந்த போது ஜனாதிபதி கூறியது உண்மையா என தமிழ் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சரவணபவன் எம்.பியைப்பார்த்து கேட்டார். ஏன் பிள்ளைகளை யாழ்ப்பாணம் கூட்டிச்செல்லவில்லை என கேட்ட போது பிள்ளைகளுக்கு யாழ்ப்பாணம் பிடிக்காது. அதோடு தமிழும் தெரியாது.

அவர்கள் கொழும்பில் பிறந்து வளர்ந்தவர்களுக்கு யாழ்ப்பாணம் பிடிக்காது தானே என சரவணபவன் எம்.பி தெரிவித்ததாக தமிழ் தேசியக்கூட்டமைப்பு பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

# ஆனாலும் இயக்குனர் சிகரத்தைப் பாராட்டலாம்...



பாலச்சந்தர் ஒரு நடுத்தர வகுப்பினரின் இயக்குனர். இந்த வகை மனிதர்கள் சந்தித்த அக வாழ்வின் சிக்கல்களைச் சொல்லி, அவர்களையே சுவாரசியத்தோடு பார்க்கச் செய்தார். பிரச்சினைகளை மையப்புள்ளியாக்கி, அவைகளைச் சுற்றிச் சுற்றி பார்வையாளர்களை பயணிக்க வைத்தார். சாமானிய மக்களைப் பற்றி அவர் தொட்ட கதைகளென்றால் 'தண்ணீர், தண்ணீர்', 'தப்புத்தாளங்கள்' போன்றவைகளே தெரிகின்றன. மற்றபடி அவரது கதாபாத்திரங்கள் பலவீனங்களும், சமரசங்களும் நிறைந்த நடுத்தர வர்க்கத்தினரே பெரும்பாலும். அதற்கான புத்திசாலித்தனங்கள் கொண்ட அவர்களுக்குள் மற்றவர்களை விடக் கொஞ்சம் அதிகப்படியாய் ஊடுருவி அடிமனதில் இருக்கும் வக்கிரங்கள், ஏக்கங்கள், கனவுகளை சொல்லியபோது, அவை திகைப்பூட்டுவதாய் இருந்தன. அவனது நண்பன், தன் காதலிக்கு வாங்கி வைத்திருக்கும் புடவையை சிகரெட்டால் சல்லடையாக்குபவனாக ஒருவன் இருப்பான். தன்னைக் காதலித்தவனை விதவையான தங்கைக்குத் திருமணம் செய்துவைத்துவிட்டு, அடுத்த அறையில் எழும்பும் வளையல் சத்தங்களைத் தாங்காமல் வெதும்புகிறவளாக ஒருத்தி இருப்பாள். குடும்பத்தின் முழுப் பொறுப்பையும் தாங்கி நிற்பவர்களின் உணர்வுகளை அறியாமல் மற்றவர்கள் இருப்பார்கள்.

பாலச்சந்தரின் சினிமாக்களில் பொதுவாக ஏமாந்தவர்களும், ஏமாற்றுபவர்களுமே கதை மாந்தர்கள். ஏற்றுக் கொண்டு போகிறார்கள் சிலர். ஏற்க முடியாமல் போராடித் தோல்வியுறுகிறார்கள் சிலர். மீறி நிற்கிறார்கள் சிலர். இங்கே ஏமாற்றியவர், ஏமாறியவர் இருவருமே அருகருகே நிற்கிறார்கள். சிரிப்பு, உற்சாகம், வலி, வெறுமை, நம்பிக்கை எல்லாமும் இருக்கும் . முடிவுகளில் பெரும்பாலும் சோகம் பாவித்தவர்களாகவே பார்வையாளர்கள் திரையரங்குகளை விட்டு வெளியேறுகிறார்கள். வழக்கமான சுபம் எப்போதாவதுதான். இது அவரது பாணி.

ஒரே ஆட்டத்தைத்தான் திரும்பத் திரும்ப, வெவ்வெறு காலக்கட்டங்களில் வெவ்வெறு மனிதர்களை வைத்து பாலச்சந்தர் ஆடிப்பார்த்திருக்கிறார். எதிரொலி படத்தில் சிவாஜி, வெள்ளி விழாவில் ஜெமினிகணேசன், நூல் வேலியில் சரத்பாபு, சிந்துபைரவியில் சிவகுமார் எல்லாம் ஒரு வகையானவர்கள். அவர்களின் தடுமாற்றங்களில் வாழ்க்கை அலைக்கழிக்கப்படுவதோடு ரசிகர்கள் ஒன்றிப்போனார்கள். நேர்மை கொண்ட மனிதர்களை முன்வைத்து, அவர்களின் போராட்டங்களையும் சொல்லி இருக்கிறார். வறுமையின் நிறம் சிகப்பு, அச்சமில்லை அச்சமில்லை போன்ற படங்கள் இத்தகையவை. 'நான் அவனில்லை', 'மன்மதலீலை', 'நெற்றிக்கண்' போன்ற படங்கள் தனிமனித வக்கிரங்களை ரசிக்கிற மாதிரிச் சொல்லியவை. சினிமாக் கதாபாத்திரங்களின் மீது மயக்கம் கொண்ட 'பாமா விஜயம்', ஒருவகை என்றால் 'வானமே எல்லை' இன்னொரு வகை. வாழ்வின் நெருக்கடிகளில் புதையுண்டு மீள முடியாதவர்களை அரங்கேற்றம், 'தப்புத்தாளங்கள்' போன்றவை காண்பிக்கின்றன. துரோகங்களைச் சொல்லியவாறு 'மூன்று முடிச்சு', '47 நாட்கள்' வெளிவந்தன. 'சொல்லத்தான் நினைக்கிறேன்' படத்தின் இன்னொரு பிரதியாக கல்யாண அகதிகள். அவள் ஒரு தொடர்கதையில் சுஜாதா என்றால், மனதில் உறுதி வேண்டும் என சுஹாசினி. இவைகளுக்கிடையே அவ்வப்போது 'நினைத்தாலே இனிக்கும்', 'டூயட்', 'புன்னகை மன்னன்' போன்ற காதல் படங்கள்.

இப்படியான சுழற்சிகளுக்குள் இருந்து வெளிப்பட்ட காட்சிகளாய் பாலச்சந்தரின் சினிமாக்கள் இருக்கின்றன. ஆனால் எத்தனை தடவை ஆடினாலும், ஆட்டம் ஒரே மாதிரியாகி இருப்பது அவருக்கு ஆடத்தெரியாததையே காட்டுகிறது. இன்னொருத்தியைக் காப்பாற்ற சொல்லத்தான் நினைக்கிறேனில் தன் உடலை இழக்கும் ஜெயசித்ராவின் உத்தியையே இருபது வருடங்களுக்குப் பிறகு வந்த அவரது கல்கியின் கதாநாயகியும் பின்பற்றுகிறாள். இரு கோடுகளில் சௌகார் ஜானகிக்கு நேர்ந்ததுதான் சிந்து பைரவியில் சுஹாசினிக்கும். மரோசரித்திராவில் இறந்த காதலர்கள், புன்னகை மன்னனிலும் பிழைக்க மாட்டார்கள். இப்படிப்பார்த்தால், பெரிதாக எந்த கலகத்தையும் மீறலையும் செய்யாத, புதுமைகள் புரியாத இயக்குனர் பாலச்சந்தர் என்பதை அறியலாம்.

அவரது படங்கள் வெற்றி பெற்றதற்கு மிக முக்கிய காரணம், வசனங்கள்தாம். வார்த்தைகளில் வெளிப்படும் பொறிகளும், அர்த்தங்களும் புதிதாக இருந்தன. காட்சியமைப்புகளில் இருக்கும் பலவீனங்களைச் சரிக்கட்டி, பார்வையாளர்களை பாத்திரங்களோடு ஒன்றச் செய்தன. அவர் வந்த நாடக உலகிலிருந்து சுவீகரித்துக் கொண்ட வித்தை இது. அதில் மேலோங்கி இருக்கும் ஒரு 'புத்திசாலித்தனத்தை' நடுத்தர வகுப்பினர் சிலாகித்தார்கள். அதில் இருந்த தெறிப்புகளைக் கொண்டாடினார்கள். சினிமா என்பது காட்சி ஊடகம். அதற்கு என்ன நியாயம் பாலச்சந்தர் செய்தார் என்பது விவாதத்திற்குரியது.

ஆனாலும், சந்தேகமில்லாமல் அவர் தமிழில் முக்கிய இயக்குனர். அவரது பல படங்களில், சமகாலத்தின் நிகழ்வுகளும், போக்குகளும் பிரதிபலித்திருக்கின்றன. தப்புத்தாளங்கள், நிழல் நிஜமாகிறது போன்ற நல்ல படங்களைத் தந்த அவரின் மாஸ்டர் பீஸ் என்றால் ஒரு வீடு இரு வாசல்தான். சினிமாவின் துணை நடிகர், நடிகையரின் வாழ்வை மிக நெருக்கத்தில் காட்டிய படம் அது. சாபம் படிந்த அந்த மனிதர்களின் வாழ்வை தமிழ்ச்சினிமாவில் அதற்கு முன்னும், பின்னும் யாரும் அவ்வளவு வலியோடுச் சொல்லவில்லை.

அவர் இயக்கிய ஐம்பதுக்கும் மேற்பட்ட திரைப்படங்களைப் பார்த்திருக்கிறேன். யாரின் இயக்கத்திலும் இவ்வளவு படங்களை பார்த்திருக்கவில்லை. முடியாது என்றும் நினைக்கிறேன். இந்த அளவுக்கு யாரேனும் இப்படி தொடந்து இயக்கி இருக்கிறார்களா என்றும் தெரியவில்லை. இது ஒரு சாதனை. 1970களிலிருந்து முப்பது வருடங்கள் போல தமிழ்ச்சினிமா உச்சரித்துக்கொண்டே இருந்த பேர் 'கே.பாலச்சந்தர்'. அவரது படங்களை வைத்து விமர்சனம் செய்வதற்கு இருந்த போதிலும், நினைப்பதற்கும் கொண்டாடுவதற்கும் செய்திகள் இருப்பதாகவே இச்சமயத்தில் உணர்கிறேன். வெறும் நாயகத்தன்மைக்கு இடமளிக்காமல், கதைகளை நம்பி சினிமா எடுத்திருக்கிறார். சினிமா என்னும் அற்புதத்தையும் சக்தி வாய்ந்த ஊடகத்தையும் தமிழில் சீரழித்துக் குட்டிச் சுவராக்கிய எம்.ஜி.ஆரின் காலத்திலேயே இதை அரவமில்லாமல் நிகழ்த்தியிருக்கிறார். முதன்முதலாக எம்.ஜி. ஆரின் தெய்வத்தாய் படத்துக்கு வசனம் எழுதிய அவர் பிறகு இயக்கிய படங்களில் ஒன்றில் கூட எம்.ஜி.ஆருக்கு இடமில்லை. இது தற்செயலாக மட்டுமே பார்க்க முடியாதவாறு அவரது கதைகளும், பார்வையாளர்களும் இருந்திருக்கின்றனர். 'வாழ்த்துக்கள் கே.பி சார்'.

*- மாதவராஜ்*

திரை விமர்சனம்

# Super-8



அமைதியான ஒரு புறநகர், சூட்டிகையான ஒரு நண்பர் குழு, துவிச் சக்கரவண்டி உலாக்கள், சிறு நகரை சல்லடை போட்டுத் தேடும் ராணுவம், இவற்றின் மத்தியில் மறைந்திருக்கும் ஒரு மர்மம் போன்ற அம்சங்கள் Super 8 திரைப்படத்தின் தயாரிப்பாளர்களில் ஒருவரான ஸ்டீபன் ஸ்பீல்பெர்க், இயக்கிய அருமையான படைப்பான E.T.யிலும் காணக்கிடைக்குமெனினும் சூப்பர் 8 திரைப்படமானது அதன் பார்வையாளர்களிற்கு வழங்கிடும் திரையனுபவம் அதனின்றும் வேறுபட்ட ஒன்றாகவே இருக்கிறது.

படத்தின் கதை - படத்தின் நாயகன் ஜோ ஓர் சிறுவன். அதே ஊரில் இருக்கும் மற்றைய ஆலிஸ் மற்றும் சிறார்களுடன் சேர்ந்து ஓர் குறும்படம் எடுக்கத் தொடங்குகிறான். அவன் தான் தயாரிப்பு ஒருங்கிணைப்பு ஒளிப்பதிவு ஒப்பனை எல்லாமும். இப்படிப் படமெடுக்கிறோம் என்று சொல்லித்திரிந்து ஒரு காட்சியை புகையிர நிலையத்துக்கு அண்மையில் ஒடுக்கத் தொடங்குகிறார்கள். காட்சிகளை எடுத்துக் கொண்டிருக்கும் போது அவ் இடத்தைக் கடக்கும் புகையிரம் ஒன்று விபத்துக்குள்ளாகிறது. விபத்தின் போது தான் தெரிகிறது அவ் பகையிரதத்தில் ஏற்றிவரப்பட்டது வேற்றுக்கிரக ஏலியன்கள் என்று. அதன் பின் நடக்கும் களேபரங்கள் தான் திரைப்படத்தின் கதை......

சூப்பர் 8. திரைப்படத்தின் முக்கிய கவர்ச்சி அம்சங்களாக அதன் இயக்குனர் J.J. Abrams திரையில் கொணர்ந்திருக்கும் மனித உறவுகள் குறித்த மென்மையான விபரிப்பு, உற்சாகம் துள்ளும் ஒரு சிறுவர் குழு அதன் நடவடிக்கைகள், இனிமையான பின்னனிப் பாடல்களுடன் அழகாக படமாக்கப்பட்டிருக்கும் 70களின் அந்திமம் என்பவற்றைக் கூறலாம். ஜோவிற்கும், ஆலிஸிற்கும் அவர்களின் தந்தைகளிற்குமிடையில் இருக்கும் புரிந்துணர்வின்மை என்பதன் அரூப சுவர்களை கொண்டதாகவே அவர்கள் வீடுகளும் அமைந்திருக்கின்றன. இச் சுவர்களுடனான மோதலே இவ்விரு சிறுவர்களையும் அச்சுவர்களிற்கு வெளியே அல்லது மறையும் தருணத்தில் உற்சாகமாக இயங்க செய்கின்றன.

இவ்வாறான ஒரு நண்பர் குழுவில் இடம்பெறும் ஒவ்வொருவரையும் அவர்களின் குணாதிசயங்களுடன் ரசிக்க வைத்து விடுகிறார் இயக்குனர் ஏப்ராம்ஸ். அவர்கள் கூடும் போதெல்லாம் உற்சாகம் அங்கு கும்மியடிக்க ஆரம்பித்துவிடுகிறது. சூப்பர் 8 கமெரா ஒன்றின் உதவியுடன் குறும்படத்தை இயக்கும் சார்ல்ஸ், வெடி நிபுணன் கேரி, குறும்படத்தில் டிடெக்டிவ் பாத்திரமேற்று நடிக்கும் மார்ட்டின் என ஒவ்வொருவரும் தனி ரகமாக சிரிக்க வைக்கிறார்கள். வயதிற்கு மீறிய உரையாடல்களை நிகழ்த்தி உயிரை வாங்கும் சிறுவர்கள் நிறைந்த படைப்புக்களில் இருந்து சூப்பர் 8 வேறுபடுவது ரசிகனிற்கு கிடைத்த அதிர்ஷ்டம்தான். இச்சிறார்களின் குடும்பங்கள் வழியேயும், நகரில் வாழும் மக்கள் வழியேயும் சிறிய புறநகர் சமூகமொன்றின் வேறுபட்ட மனநிலைகளையும் ஏப்ராம்ஸ் மெலிதாக காட்டியிருக்கிறார்.

இழப்புக்களின் பின்பாகவும் வாழ்க்கையை தொடர்ந்திட வேண்டியதன் அவசியத்தையும், அன்பான உறவு மற்றும் நட்பின் பெறுமதிகளையும் வலியுறுத்துவதாக சூப்பர் 8 திரைப்படத்தின் இறுதிப்பகுதி அமைந்திருக்கிறது. நெருக்கடிகள் சில வேளைகளில் உறவுகளை எதிர்பாராத வகைகளில் புதுப்பித்து தருகின்றன. கையெட்டும் தூரத்தில் இருந்த பாசத்தை எட்டியணைக்கவும், ஆரத்தழுவிடவும் செய்கின்றன. தனக்கான ஒரு கூட்டை நோக்கி திரும்பும் எந்த ஜீவனும் அங்கிருக்கும் வெறுமைக்காக வேகம் காட்டுவதில்லை. தனக்கென அங்கிருக்கும் அன்பும், பாசமுமே அதன் வீடு திரும்பலை காலகாலத்திற்கும் இனிமையான ஒரு அனுபவமாக ஆக்ககூடும். ரசிகர்களின் மனதில் ஏக்கம் சுற்றிப் புதைத்திருந்த ஒரு ரகசியமான வீடு திரும்பலை மீண்டும் மேற்பரப்புகளிற்கு இட்டு வருவதிலும், அவர்கள் தம் பால்யகால நினைவுகளை மீண்டும் அசைபோட வைப்பதிலும் சூப்பர் 8 சுபமாக வீடு திரும்பியிருக்கிறது.

*- கனவுகளின் காதலன்*



NAG & Co.
SOLICITORS

✓ CRIME
✓ CONVEYANCING
✓ MATRIMONIAL
✓ IMMIGRATION
✓ TRAFFIC MATTERS
✓ LANDLORD & TENANTS
✓ POLICE STATION MATTERS
✓ EMPLOYMENT MATTERS
✓ WORK PERMITS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Email : nagandco@yahoo.co.uk
Unit 3 Holles House, Myattsfield south, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

திரை விமர்சனம்

## மங்காத்தா



*நடிகர்கள்: அஜித், பிரேம்ஜி அமரன், திரிஷா*

*இசை: யுவன்*

*இயக்கம் : வெங்கட் பிரபு*

*ஒளிப்பதிவு : சக்தி சரவணன்*

டுயட் பாடவில்லை, ஏழை குழந்தைகளை தூக்கி வைத்து, ஆயாக்களை கட்டிக் கொண்டு பாடவில்லை. நான் வளர்ந்ததே உன்னால்தான் என்று பார்வையாளர்களை பார்த்து பாடவில்லை. ஆனால் இதுவெல்லாம் இல்லாமல் அஜித் ஒரு அஜித் படம். பல சமயங்களில் ஓவர் பில்டப் சொதப்பிவிடும். ஆனால் அதே சமயம் ஓவர் பில்டப் சும்மா எகிறி அடித்து தூள் பரத்தவும் செய்யும். மங்காத்தா ரெண்டாவது வகை. சும்மா அடித்து தூள் பரத்தியிருக்கிறார்கள்.

T20 பைனலை வைத்து ஆடப்படும் கிரிக்கெட் சூதாட்ட பணமான 500 கோடியை போலீஸ் பிரச்சனை காரணமாய் ஊரில் சினிமா தியேட்டர் வைத்துக் கொண்டு தில்லாலங்கடி வேலை செய்யும் ஜெயப்ரகாஷ் மூலமாய் இடமாற்றம் செய்ய நினைத்திருக்க, அந்த பணத்தை கொள்ளையடிக்க அவரிடம் வேலை செய்யும் வைபவ், ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர், பிரேம்ஜி, பிரேம்ஜியின் பார் ஓனர் நண்பன் என்று எல்லோரும் சேர்ந்து ப்ளான் செய்திருக்க, நடு ப்ளானில் ஆட்டத்தில் நுழைகிறார் அஜித். அதை எப்படி கொள்ளையடித்தார்கள்? அப்புறம் என்ன நடந்தது என்பதை வெள்ளித்திரையில் பாருங்கள்.

சால்ட் அண்ட் பெப்பர் ஹேர் ஸ்டைலில், நாற்பது வயது ஆள் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளுாம் அஜித். முதல் நாள் ராத்திரி போதையில் லஷ்மிராயை கூட்டி வந்து விட்டு கேர்ள்ப்ரெண்டான திரிஷாவுடன் சல்லாபிக்கும் இடத்தில் ஆரம்பித்து, மெல்ல, மெல்ல தன் ஆளுமையை அழுத்தமாய் பதித்திருக்கிறார் அஜித். அதிலும் இடைவேளைக்கு முன் ஆட்டத்தை ஆட தனியாய் செஸ் போர்டின் முன் உட்கார்ந்து கொண்டு பேசும் காட்சிகளும், இரண்டாவது பாதியில் பண வெறி பிடித்தலையும் காட்சிகளும் நல்ல நடிப்பு. முழுக்க முழுக்க அஜித்தின் ராஜ்யம் தான். வெங்கட் பிரபு டீம் முழுவதும் அஜித்தை ஆராதிக்கும் ஆட்களாக இருப்பார்கள் போலிருக்கிறது. சும்மா உட்காருகிற நிற்கிற ஷாட்டுகளில் எல்லாம் என்னன்ன செய்ய முடியுமோ அத்துனை டெக்னிக்குகளையும் உபயோகித்து பில்டப் செய்திருக்கிறார்கள்.

அர்ஜுன்க்கு போலீஸ் கேரக்டர். வழக்கம் போல ரெண்டு காட்சிக்கு ஒரு முறை சீரியஸாய் வருகிறார். துப்பாக்கியால் சுடுகிறார். காரில் துரத்துகிறார். படத்தில் லஷ்மிராய், திரிஷா, அஞ்சலி ஆகியோர் இருந்தாலும் லஷ்மிராய்க்கு கிடைத்திருக்கும் பாத்திரம் வேறு யாருக்கும் கிடைக்கவில்லை. அஞ்சலிக்கு இன்னொரு வெத்து கேரக்டர். வெங்கட் பிரபுவின் ஆஸ்தான நடிகர்கள் அனைவருமே இதிலும் ஆஜர். கொஞ்சம் சலிப்பாக இருக்கிறது. முக்கியமாய் ப்ரேம்ஜி அமரன். கொஞ்சம் சலிக்க ஆரம்பித்துவிட்டார். ஜாக்கிரதை வெங்கட் பிரபு.

படத்திற்கு மிகப் பெரிய பலம் சக்தி சரவணின் ஒளிப்பதிவு. அஜீத்தின் ஸ்கீரின் ப்ரெசென்ஸை அருமையாய் பிரதியெடுத்திருக்கிறார். ஸ்ரீகாந்தின் எடிட்டிங் சில பல இடங்களில் கண்களை உறுத்துகிறது. யுவனின் இசையில் மங்காத்தா டைட்டில் இசையும், ஒரு பாடலும் கேட்க நன்றாக இருக்கிறது. ஆனால் படத்தின் வேகத்திற்கு பெரிய தடையாய் இருப்பது பாடல்கள் தான். ஒட்டவேயில்லை. பின்னணியிசையில் மிஷன் இம்பாஸிபிள் ட்ராக்கையெல்லாம் தூசு தட்டி போட்டிருப்பது வேடிக்கையாய் இருக்கிறது. இத்தனைக்கு கார்த்திக் ராஜா வேறு வேலை செய்திருக்கிறார் பின்னணியிசையில்.

வெங்கட்பிரபுவின் ஆட்டம் என்று டைட்டிலில் போடுகிறார்கள். ஓஷன் 11, ஹிட், பேங்க் ஜாப் போன்று இன்னும் சில படங்களிலிருந்து எல்லாம் உட்டாலக்கடி அடித்திருக்கிறார் வழக்கம் போல. மெயில் அனுப்புகிறவர்கள் குறைந்தது ஏழு எட்டு மெயில் அனுப்ப வேண்டியிருக்கும். ஐந்நூறு கோடியை கொள்ளையடிக்க வேண்டும் சொல்லும் போதே பிரம்மாண்டமாய் இருக்கிறது அல்லவா. அதை கொள்ளையடிக்கும் காட்சி எப்படியிருக்க வேண்டும்? படு மொக்கையாய் ஒரு கொள்ளை. அதுவும் அதற்கு ப்ளான் பண்ணுகிறேன் பேர்விழி என்று திரைக்கதையை ஜவ்வாக இழுத்து முதல் பாதியை கொட்டாவி விட்டே டயர்டாக்கி விடுகிறார்கள். அதே போல இன்னும் கொஞ்சம் மெனக்கெட்டு ஆக்ஷன் காட்சிகளை செய்திருக்கலாம் என்பது என் எண்ணம். சும்மாவாச்சும் டப்பு டுப்பு என சுடுவதும், யார் யாரை சுடுகிறர்கள் என்று உத்து பார்த்தே கண்டுபிடிக்க வேண்டிய க்ட்டாயம் இருப்பதை தவிர்க்க முடியவில்லை. அதே போல் திரிஷா காதல் சோகத்தில் பாடும் காட்சி, அஞ்சலி தேவையேயில்லாமல் வைபவிடம் கோபித்துக் கொள்வதும், கட்டி பிடித்து அழுவதும் படத்தின் ஓட்டத்திற்கு தேவையில்லாதது.

நாட்டில் குடியரசுத்தலைவர் ஒரு டம்மி, ஏன், பிரதமரே ஒரு டம்மி என்பது சிறு குழந்தைக்குக்கூடத் தெரியும். இருந்தும் குடியரசுத் தலைவரிடம் நேரடியாக ரிப்போர்ட் செய்யக்கூடிய ஒரு காவலர் குழு - அதன் தலைவர் ஒரு ஏ.சி.பி என்பது கொஞ்சம் நெருடுகிறது. அதேபோல துப்பாக்கி கிராஸ்ஃபயரில் வயிற்றில் மட்டும் ஒரு தாமிரத் தகடை வைத்துக்கொண்டால் எளிதில் உயிர் தப்பிவிடலாம் என்று சொல்வதை ஒருவித கவித்துவ பீலா என்று எடுத்துக்கொள்ளலாம். இதற்குமேல் லாஜிக்கை ஆராய்ந்தால் ஹாலிவுட் படங்கள்கூட ஊத்திக்கொள்ளும்? ஐவரி மெர்ச்சண்ட் படங்களும் சத்யஜித் ரே படங்களும் மட்டுமே பிழைக்கும் என்பதால் விட்டுவிடுவோம்.

படத்தை காப்பாற்றுவதே ரெண்டாவது பாதிதான். முழுக்க, முழுக்க, அஜித்தையும், ஆக்ஷன் கோரியோகிராபர்களை மட்டுமே நம்பி திரைக்கதை அமைத்து அதில் ஜெயித்திருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். சும்மா திகுதிகுவென போகிறது.

சென்சாரில் U/A சான்றிதழ் கொடுத்திருக்கிறார்கள். படத்தில் கலக்கலாகப் பல காட்சிகள் உள்ளன. மேலும் கெட்ட வார்த்தைகள் நிரம்பி வழிகின்றன. இதற்கு U/A என்பது, தமிழ் சினிமா எந்த அளவுக்கு முன்னேறி அமெரிக்காவின் தரத்தை அடைந்துவிட்டது என்பதையே காட்டுகிறது.

*- சிவா ( வண்ணப்பூக்கள் வலைப்பதிவில்)*

## சினித்துளி

### படமாக்கப்படும் பேரறிவாளனின் கதை!



கருணை மனு நிராகரிக்கப்பட்டு சாவின் விளிம்பில் நின்று கொண்டிருக்கும் உறவுகளில் மிகவும் பரிதாபமான நிலையில் (இரண்டே இரண்டு பேட்டரிகளை பெட்டிக்கடையில் வாங்கிக் கொடுத்ததால் மரண தண்டனை கொடுக்கப்பட்டது) நிற்கும பேரறிவாளனின் கதையைச் சினிமாவாக எழுதப்போகிறார்கள் சிலர். பேரறிவாளன் வேடத்தில் நடிக்க அதர்வா முன் வந்திருக்கிறாராம். அப்படத்தில் பேரறிவாளனின் இளம் வயது காதலையும் இணைக்கவிருக்கிறார்கள்.

யார் கதாநாயகி, யார் இசையமைப்பாளர் என்பதெல்லாம் இனிமேல்தான் முடிவாகப் போகிறது. ஆனால் பேரறிவாளன் கதை விரைவில் துவங்கப்பட இருக்கிறது.

*தூக்குத் தண்டனையை எதிர்நோக்கியிருக்கும் ஒரு கைதியின் வாழ்க்கையை சினிமாவாக்கி காசு பண்ண இவர்களுக்கெல்லாம் எப்படித்தான் முடிகிறதோ தெரியவில்லை.*

### 'ஓ.கே ஓ.கே' க்கு வைக்கப்பட்ட ஆப்பு!



ஆட்சி மாறினால், காட்சிகளும் மாற வேண்டும் என்பது தானே நியதி. அந்த நியதிக்கு உதயநிதி மட்டும் விதிவிலக்கா என்ன? அவர் நடித்து வரும் ஒரு கல் ஒரு கண்ணாடி படத்திற்கு முன்பு சிவப்பு கம்பள வரவேற்பு கொடுத்தவர்கள், இப்போது ரெட் சிக்னல் போட்டு சூட்டிங்கிற்கு தடை போட்டு வருகிறார்கள். கருணாநிதியின் பேரன் கதாநாயகனாக நடிக்கும் படம் என்பதால் கடந்த ஆட்சியின்போது சென்னையில் படப்பிடிப்பு நடத்த தாராளம் காட்டப்பட்டது(வைக்கப்பட்டது).

இப்போது அம்மாவிடம் ஆட்சியிருப்பதால் அதெல்லாம் அந்தக் காலம் என்று சொல்லும்படி ஆகிவிட்டது நிலைமை. போகுமிடமெல்லாம் கடந்த ஆட்சியின் எல்லா வெறுப்புக்களையும் இவர்களிடம் காட்டுகின்றனராம் அவர்கள்.

### மீனவர் பிரச்சினையோடு மணிரத்னம்!



'ராவணன்' படத்திற்குப் பிறகு புதும் படம் எதையும் இயக்காமல் இருந்த மணிரத்னம் விரைவில ஒரு படத்தை இயக்க இருக்கிறார். அதில் தமிழக மீனவர்கள் மீது இலங்கை இராணுவத்தினர் இழைக்கும் அனைத்து அநீதிகளையும் வெளிச்சம் போட்டு காட்ட இருக்கிறாராம் மணிரத்னம். 'கன்னத்தில் முத்தமிட்டால்' படத்தில் மாங்குளத்தில் மலைகளையும் காட்டின மாதிரி இதில் என்னத்த காட்டப்போறாரோ தெரியல்ல! பாவம் மீனவர்கள்.

### கமல்-கிரேஸி மோகன் கூட்டணி!!



கமலும், கிரேஸி மோகனும் இணைந்தால் நகைச்சுவைக்குப் பஞ்சமிருக்காது. விரைவில் இவர்கள் மீண்டும் ஒன்றிணைவார்கள் என்கின்றன தகவல்கள். இவர்கள் இணையும் படத்துக்கு 'நண்டார்களும் 40 திருடர்களும்' என்று பெயர் வைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்தப் படத்தில் கமலுடன் பிரபுவும் நடிக்கக்கூடும் என்கிறார்கள். விஸ்வரூபம் பட வேலைகளில் உள்ள கமல் படம் முடிந்ததும் 'நண்பர்களும் 40 திருடர்களும்' பட வேலை தொடங்கும் எனத் தெரிகிறது.

பிரித்தானியா

TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312

உங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டுமா?




TEL: 647 724 4188 FAX : 416 438 7855

கனடா

www.orumanam.com

# HAPPY DAYS




# LION BEERS HALF PRICE !!

At selected stockists, including:

Grocers

AJ Foods Lewisham. Anglo Asian Wembley. Belmont Supermarket Harrow. Best Food Hounslow. Best Foods South Harrow. Chandra Stores Catford. Ganapathy C/C Wembley. Harran Brothers Croydon. High Street Convenience Store East Ham. KRS Foods Lewisham. Malar Supermarket Wembley. Mega Superstore Tooting. Rayners Wine Harrow. South Harrow Food & Wine Harrow. Sharon Tooting. Stop & Go East Ham. VVN Sons Southall.

Restaurants

Gana Cafe Harrow. Gana Cafe Wembley. Hop & Spice Balham. Hopper Hut Wembley. Jaffna House Tooting. Palm Beach Wembley. Palm Palace Southall. Papaya Ealing. Papaya Harrow. Prince of Ceylon Hendon. Sambal Kitchen & Diner Harrow. Sarasas Rest. Southall. Serendip Indo Sutton. Spicy Island New Malden. Spicy Palace Southall. Watch Me Rest Wimbledon. Yaal Rest. East Ham.

Check with individual outlets for promotion dates or phone the promotion hotline: 0208 795 5224

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
**Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
**சவுத்ஹோல் டிராவல்**
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

ABTA 80626